

65017

வெளியீடு—9—10—1967 ]
Issued—9—10—1967

MADRAS RECORD OFFICE
239/L
12 JAN 1968
EGMORE, MADRAS-8

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

299

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

புதன்கிழமை, 1967 ஜூலை 5

**Wednesday, 5th July 1967**

தொகுதி IV—எண் 1

**Volume IV—No. 1**

©
தமிழக அரசு
1967
©
GOVERNMENT OF MADRAS
1967

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

V211,31 N67
N67.4.1
65017

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள், விடைகள் .. .. | 1–22 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— | |
| (அ) சென்னையில் குடிசைப்பகுதிகளில் தொடர்ந்து தீ விபத்துக்கள் .. ... .. .. | 22–27 |
| (இ) திருவள்ளூர் ஸ்பீட் லீவர் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலைநிறுத்தமும், உண்ணாநோன்பும் .. .. .. .. | 28 |
| (உ) அம்பத்தூர் லூகாஸ்—டி.வி.எஸ். தொழிற்சாலையில் கதவடைப்பு .. .. .. | 28 |
| 3. ஒழுங்குப் பிரச்சினை— | |
| பேரவை நடவடிக்கைக் குறிப்பு நகல் நூலகத்தில் வைக்கப்படாமை .. .. .. .. .. | 29 |
| 4. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி. | |
| கோரிக்கை எண் XII—போலீஸ் .. .. .. | 29–102 |
| 5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. ... | 103 |

## தமிழகச் சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1967 ஜூலை 5.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள், விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்** : கேள்வி எண்கள் 160, 162, 163 பிறகு எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி எண்கள் 164-லிருந்து 170 வரை தள்ளி வைக்கப்படுகின்றன.

### சென்னை-கன்னியாகுமரி கடலோரச் சாலை

*** 173 வினா.—திரு. கரு. சீமைச்சாமி** : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை-கன்னியாகுமரிக்கு இடையே போடுவதென உத்தேசிக்கப்பட்டிருக்கும் கடலோரச் சாலைக்கு என்ன செலவாகும் என சென்னை சர்க்காரை மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) இத்திட்டத்தின் விரிவான செலவு, பயன் ஆய்வை மத்திய போக்குவரத்து ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டுள்ளதெனவும் அதன் அறிக்கை பெற்றபின் திட்டம் மீண்டும் பரிசீலிக்கப்படுமென்றும் இந்திய அரசு கூறியுள்ளது. இதற்கிடையில் மாநில அரசையும் திட்டத்தை ஆய்வு செய்யுமாறு இந்திய அரசு கூறியுள்ளது. ஆகவே, மாநில அரசு புள்ளி விவரத்துறை நெறியாளரை இத் திட்டத்தின் செலவு-பயன் விதாசாரத்தைப் பற்றி மறு ஆய்வு மேற்கொள்ள பணித்துள்ளது.

(உ) உடனடியாக, இன்னும் இந்தச் சாலை அமைக்கப்பெறாத சில பகுதிகளில் 25 மைல் நீளத்திற்கு அமைப்பதற்கான திட்டம் ரூ. 32 லட்சம் செலவில் "மாநிலங்களை இணைக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள்" Economic and Inter-State Importance roads) திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பெற்று வேலை தொடங்கியுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி** : சென்னைக் கடலோரச் சாலை போடுவதற்கு மத்திய சர்க்கார் உதவி செய்கிறது. இப்போது எவ்வளவு தூரம் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது ? இதை அமைப்பதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இந்தத் திட்டத்திற்கு மொத்தம் 14 கோடி ரூபாய் ஆகும். இது இப்போது ஆய்வில் இருக்கிறது என்று குறிப்பிட்டேன். முதலில் 25 மைல் அளவிற்கு மகாபலிபுரத்திலிருந்து தென் ஆர்க்காடு மாவட்டத்தைத் தொடுகின்ற சாலையை அமைக்க மத்திய சர்க்கார் 14 லட்சம் ரூபாய் தருவதாக இருக்கிறது.

**திரு. கே. விநாயகம்** : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் உத்தேசமாக எத்தனை ஆண்டுகளில் முடியும்? போடுகிற இந்தச் சாலை சில இடங்களில் அகலமாகவும், சில இடங்களில் குறுகியதாகவும் இருக்கிறது. ஆகையால், பூராவும் ஒரே அகலமாக இருப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : ஒரே சீராக ஏற்படுத்துவது என்பது இந்த 14 கோடி ரூபாய் திட்டம் அனுமதிக்கப்பட்ட பிறகு தான் தெரியும். அதற்குப் பிறகுதான் எவ்வளவு ஆண்டுகளில் முடியும் என்று தெரியும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கிழக்குக் கடற்கரைச் சாலை மகாபலிபுரத்திலிருந்து தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மரக்காணம் வரைக்கும் செல்லுகின்ற திட்டம் என்று சொல்லப்படுகிறது. மரக்காணம் வரைக்கும் செல்லுவதற்கு சூணாம்பேட்டை, ஆலத்தூர் வழியாக ஒரு பாதை இருக்கிறது. இது நீண்ட பாதை. தேன்பாக்கம் வழியாகச் செல்லும் பாதை எடுத்துக்கொள்ளப்படுகிறதா அல்லது சூணாம்பேட்டை, ஆலத்தூர் வழியாகச் செல்லும் பாதையை எடுத்துக்கொள்வார்களா? அல்லது தேன்பாக்கம் வழியாக வரும் பாதையை எடுத்துக் கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : கடற்கரை ஓரமாகச் செல்லும் பாதை 480 மைல் நீளம் ஆக இருப்பதால் குறுகிய தூரத்திலே உள்ள பாதையை அமைப்பதுதான் வசதியாக இருக்கும்.

**திரு. கே. பி. எஸ். மணி** : சீர்காழி தாலுகாவில் திருமுல்லைவாசல் பககமாக கொள்ளிடம் இருக்கிறது. கரையோரமாகச் சாலை போடும்போது கூலையாறு வரைக்கும் நிறுத்தப்பட்டிருக்கிறது. பக்கத்திலுள்ள புதுப்பட்டினம் வரைக்கும் அதை நீட்டிக்க வழிவகை செய்வார்களா? அப்படியானால், கொள்ளிடம் ஆற்றைத் தாண்டிச் செல்வதற்கு என்ன திட்டம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நெடுஞ்சாலை நீண்ட தூரத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறபடியால் குறுகியதாக இருந்தால் தான் வசதியாக இருக்கும்.

**திரு. எம். சண்முகம்** : சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் என்னென்ன முக்கிய ஊர்களின் வழியாக இந்தப் பாதை செல்லும்? இதனால் என்னென்ன பயன்கள் ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : சென்னையிலிருந்து கடலூர், புதுச்சேரி, நாகப்பட்டிணம், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களையெல்லாம் இணைக்கின்ற அளவிற்கு இந்தப் பாதை செல்லும்.



இதன் மூலம் மீன் பிடித்தல், உப்பளத் தொழில், எரிமரம் வெட்டுதல், கயிறு திரித்தல், முத்துக்குளித்தல் போன்ற தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கு உதவியாக இருக்கிறது. இந்த வளர்ச்சிகளோடு மட்டுமல்லாமல் வேளாண்மைத் துறையில் வளர்ச்சி அடைவதற்கும், விவசாயப் பொருள்கள் போக்குவரத்திற்கும் இந்தச் சாலை அமைக்கப்பட்டால் வசதியுள்ளதாக இருக்கும். இந்தச் சாலையின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு வருவாய் நான்கு கோடி ரூபாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கூறிய முக்கியமான நோக்கங்கள் எல்லாம் அனுசரித்து இந்தப் பாதையை விரைவிலே போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? மத்திய சர்க்காரிடமிருந்து இதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு என்ன தொகை கொடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : மூன்றாவது திட்டத்திலே இதைச் சேர்க்குமாறு இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. ஆனால், மத்திய சர்க்கார் இதை ஏற்கக்கூடிய சூழ்நிலையில் இல்லை. மாநில சர்க்கார் தாங்களே ஆராய்ச்சி செய்து ஆய்வுரைகளை அனுப்ப வேண்டுமென்று மத்திய சர்க்கார் கேட்டுக்கொண்டதன் பேரில் தலைமைப் பொறியாளர் அவர்களால் 14 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரித்து அனுப்பப்பட்டு 4-வது திட்டத்தில் இதைச் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. • சாலைக்காக ஒதுக்கப்படுகின்ற திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்த பிறகு இது யோசிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

**THIRU T. MARTIN** : May I request the Hon. Minister to state how the cost of laying this road in shared between the Central Government and the State Government?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நான் தொடக்கத்திலே சொன்னேன், புதிதாகப் போடப்படுகின்ற 25 மைல் சாலைக்கு 50 சத விகிதம் நிதி தருவதாக சொல்லியிருக்கிறார்கள். 14 கோடி ரூபாய் திட்டத்தில் பெரும்பகுதியை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளும்.

**திரு. மு. ச. சிவசாமி** : இந்தக் கோஸ்டல் ரோடில் தூத்துக்குடிக்கும் வைப்பாறுக்கும் இடையில் 16 மைல் பாதை இருக்கிறது. இதிலே 8 மைல் ஹைவேஸ் எடுத்துக்கொண்டிருக்கிறது. மீதி இருக்கும் 8 மைலை பஞ்சாயத்து யூனியன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படியல்லாமல் ஹைவேஸ் எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இது பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். ராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, தமிழக மாநிலம் கடல்வழி பார்க்கும்பொழுது ஒரு எல்லைப்புற மாநிலமாக இருப்பதால் சென்னையிலிருந்து கன்னியாகுமரி செல்லும் பாதையை

பாதுகாப்பையொட்டி பலப்படுத்த வேண்டுமென்ற முறையிலே பாதுகாப்புத் துறையின் மூலம் மத்திய அரசு ஏற்றுக் கொண்டு அமைக்கவேண்டுமென்று இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது தேசிய நெடுஞ்சாலை மட்டும்தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படவேண்டியது.

**திரு. கே. விநாயகம் :** இந்த தேசிய நெடுஞ்சாலை போடப்படாமல் விட்டுப்போன பகுதி எத்தனை மைல் இருக்கிறது ? பெரும்பாலும் கிராமப்புறங்களில் செல்லும் சாலைகளின் ஓரத்திலே வைக்கோலையும் தானியங்களையும் போட்டு உலர்த்தி வருகிறார்கள். இதைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய முன்வருமா ? இந்தச் சாலையினுடைய மொத்த நீளம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வி உபயோககரமான கேள்வி. நெடுஞ்சாலைகளில் நெல், வைக்கோல் போன்றவற்றை உலரவைப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. முன்பு நெடுஞ்சாலைப் பகுதிகளில் அழகான பலகைகளை வைத்துப் பார்த்தார்கள், ஆனால் பொது மக்கள் கேட்கவில்லை. இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது உண்மை. ஆனால், அந்தச் சாலையில் அதே சமயத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் நெல் உலர்த்த வேண்டியதற்கு வேண்டிய இடவசதிகளைச் செய்ய வேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்தச் சாலையினுடைய மொத்த நீளம் 480 மைல். போடப்பட்டிருப்பது 30 மைல். சீர்திருத்தப்பட வேண்டியது 450 மைல்.

**திரு. சு. துரைசாமி :** கன்னியாகுமரியில் இருந்து மண்டபம் வரைக்கும் தமிழக அரசு போக்குவரத்து ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** யோசிக்கப்படும்.

திருச்சி—தஞ்சாவூர் சாலை

*174. வின.—திரு. வை. சுவாமிநாதன் :
திரு. கே. விநாயகம் : } மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி—தஞ்சாவூர் சாலையில் அதிகரித்துள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மேற்படி சாலையை 100 அடி அகலமுள்ளதாக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர் சாலையை 26/0 மைலிலிருந்து 33/2 மைல் வரை 94 அடிக்கு அகலப்படுத்தும் செயற்குறிப்பு உள்ளது.



**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அம்மாதிரி அகலப்படுத்தும்போது, ரோட்டில் இருபுறமும் எடுக்காமல், ஒரு புறம் மட்டும் எடுத்தால், மரங்கள், கட்டடங்கள் முதலியவை பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதை யோசித்து, சர்க்கார் அந்த முறையில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இருபக்கமும் 150 அடி அளவிற்கு அமைக்க மூன்று லட்ச ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. இரட்டிப்பு மடங்கு செலவு இருபக்கமும் போடுவதால் ஆகும் என்றிருப்பதால், நெடுஞ்சாலைத் துறையினர் ஒரு பக்கத்திலே 12 அடி தூரம் எடுப்பது என்கிற முடிவிற்கு வந்து அந்த முறையில் செய்யப்படுகிறது. ஆகவே, பாதகம் எதுவும் ஏற்படாது.

**திரு. கே. விநாயகம் :** ஐயா, இந்த நெடுஞ்சாலை இப்பொழுது சொல்லப்பட்ட விவரத்திலிருந்து 24 மைலிலிருந்து 32 மைல் வரைக்கும் 94 அடி அளவில் எடுக்கப்படும் என்று தெரிகிறது. திருச்சியிலிருந்து தஞ்சைவரைக்கும் இந்த நெடுஞ்சாலையின் அகலம் இப்பொழுது எவ்வளவு ? 100 அடி அளவிற்கு விரிவுபடுத்த அதற்கு என்ன செலவு ஆகும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தஞ்சையிலிருந்து திருச்சி வரை இந்தச் சாலையின் பெரும் பகுதி தஞ்சையில் இருந்தும், அங்கே போக்குவரத்து நெரிசல் இல்லை. ஆனால், திருவெறும்பூர் பக்கத்தில் இருக்கும் பாய்லர் ப்ளாண்ட், இன்னும் வேறு நிறுவனங்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. ஆகவேதான், தஞ்சையிலிருந்து 26 மைலுக்குப் பிறகு தொடங்கி, 33 மைல் அளவிற்கு 94 அடி சாலை போட இருக்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** சார், சேலம் மாவட்டத்தில் மேட்டூர் ஒரு பெரிய தொழில் நகரமாக இருப்பதால், சேலத்திலிருந்து. . .

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி திருச்சி—தஞ்சை நெடுஞ்சாலை பற்றியது. துணைக் கேள்விகள் அதைப் பற்றிக் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, திருச்சி—தஞ்சை சாலையில் நகரத்தை ஒட்டி ஒரு மைல் தூரத்திற்கும் அதை இணைக்கும் சென்னை—திருச்சி புது சாலையிலும் மின் விளக்குகள் போட்டு வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப்பற்றி மின்சாரத் துறையினரைக் கலந்து அது பரிசீலிக்கப்படும்.

**திரு. வை. சுவாமிநாதன் :** திருச்சி—தஞ்சை சாலையில் திருவெறும்பூரில் பாய்லர் தொழிற்சாலை இருப்பதாலும், வேறு சிறுதொழில் நிறுவனங்கள் இருப்பதாலும், ரீஜினல் காலேஜ் இருப்பதாலும், அங்கே ஏராளமான தொழிலாளர்கள் வசிப்பதாலும், கிட்டத்தட்ட

5,000-க்கும் மேற்பட்ட சைக்கிள் போக்குவரத்து இருப்பதாலும், அவர்களுக்கென்று ஒரு தனி ரஸ்தா அமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சைகிள் செல்வதற்கென்று தனி ரஸ்தா அமைப்பதாக இல்லை. ஆனால், அந்தச் சாலை விரிவு படுத்தப்பட்டு, அகலப்படுத்தப்படும்போது, சாலையில் வாகனங்கள் போகமுடியும் என்று கருதலாம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்த தேசிய பெரு வழிச்சாலை, 'ஹைவேஸ் என்றெல்லாம் பலவற்றில், பல பகுதிகளில்தான் போடுகிறார்களே, அதில் இத்தனை அடி அகலத்திற்கு நேஷனல் ஹைவேஸ் போடவேண்டும் என்று ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆங்காங்கே உற்ற வசதிக்கு ஏற்ப சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன.

*Valayamadevi—Neyveli Road.*

*175. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether its is a fact that the Valayamadevi Neyveli Highway road has been washed away to a distance of 100 feet at Muthukrishnapuram due to the recent cycline and heavy rains ; and

(b) was it repaired twice?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம். இரு தடவை 20—10—1966-லும், 12—1—1967-லும் முத்துகிருஷ்ணபுரத்தில் ¾ மைல் அருகில் நெய்வேலி-வளையமாதேவி சாலை 400 அடி நீளத்திற்கு அறுத்துக்கொண்டு போகப்பட்டது.

(இ) அறுத்துக்கொண்டு போகப்பட்ட சாலை இருதடவை அந்த இடத்திலுள்ள செங்கட்டிக்கல்லாலும் சரளைகளாலும் தற்காலிகமாக அமைக்கப்பட்டது.

**திரு. கே. விநாயகம் :** ஐயா, பெரும்பாலும் புயலாலும், அதிகமான மழை பெய்வதாலும், இந்த இடந்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது என்பதால், 'easily susceptible for repairs' மேலும் புயல் வராது, மழை பெய்யாது என்று சொல்ல முடியாது என்பதால், அமைச்சர் குறிப்பிட்டபடி தாற்காலிக வேலையை விட்டுவிட்டு, 'பர்மனன்ட் ரிபேர்' செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியாதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி அறுத்துக் கொண்டு போகாமல், ஆண்டு முழுவதும் போக்குவரத்துக்குப் பயன்படும் அளவில் பாலம் அமைக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது ; இரண்டு லட்சம் செலவில் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டுள்ளது.





**திரு. சி. கோவிந்தராஜன் :** இந்த நெய்வேலி-வளையமாதேவி சாலை சிதம்பரத்திற்கும், கும்பகோணத்திற்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கிறது. நெய்வேலியிலிருந்து ட்ராபிக் அதிகமாக இருப்பதால், அந்த ரோடு மோசமாக இருப்பதால், அதை தார் ரோடாக மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாலம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து உறுப்பினர்களுடைய யோசனையும் பரிசீலிக்கப்படலாம்.

**எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை**

* 171 வினா.—திரு. என். சங்கரய்யா : } மதிப்பிற்குரிய பொதுச்
திரு. கரு. சீமைச்சாமி : }
சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையிலும், மருத்துவக் கல்லூரியின் மாணவர் விடுதியிலும் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இக்குறை நீங்க மேற்படி இரண்டு இடங்களிலும் பெரும் கிணறுகளை வெட்டி குழாய் மூலம் தண்ணீர் வழங்குவதற்கு அவசர நடவடிக்கை ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(உ) தற்காலிகமாக தண்ணீர்த் தட்டுப்பாட்டை குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) & (உ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் ஒன்றும், மதுரை மருத்துவக் கல்லூரியில் ஒன்றும் ஆக இரு ஆழமான துளைக் கிணறுகள் அமைப்பதற்கு வேண்டிய ஒப்பளிப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலையை நிறைவேற்றும் பொறுப்பு கட்டடத் தலைமைப் பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால், அங்கே ஒரு அவசர நிலை இருப்பதால், அமைச்சர் கூறிய ஏற்பாடுகள் எப்பொழுது நடைமுறைக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த ஆண்டிலேயே இந்த வேலை துவக்கப்பட்டு முடிவுறும் என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

[1967 ஜூலை 5

**திரு. யா. இராசாங்கம் :** மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் நீண்ட நாளாக அறுவை சிகிச்சைக் கூடம் 'ஏர்-கண்டிஷன்' செய்யப்படவேண்டும் என்று கோரப்படுகிறது. அப்படிச் செய்ய உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றி உத்தேசம் இருப்பதாகத் தெரிகிறது. பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. கரு. சிமைச்சாமி :** சார், இந்த மதுரை ஆஸ்பத்திரி குடிநீர் பற்றுக்குறை பற்றி கடந்த மூன்று ஆண்டுகளாகப் பேசப்படுகிறது. சென்ற தடவை கூட இது பற்றி பேசப்பட்டபோது, விரைவான ஏற்பாடு செய்வதாகச் சொல்லப்பட்டது. ஆகவே, கிணறுகள் தோண்ட உடனடியாக அமைச்சர் நடவடிக்கை எடுத்து, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஏற்பாடு செய்வார்களா என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. இந்த பட்ஜெட்டிலேயே ரூ. 70,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், இந்த மருத்துவ மனையிலும், ஹாஸ்டலிலும், குடிதண்ணீர் மிக, மிக அவசியம். கிணறுகள் தோண்டுவதை விட மதுரை முனிசிபாலிடியைக் கேட்டு, அதிகமாக தண்ணீர் குழாய்களைக் கொடுக்குமாறு ஏன் நாம் கேட்கக்கூடாது என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அதைப்பற்றி ஆலோசனை கொடுத்தால், சம்பந்தப்பட்ட நகர மன்றத்தை கலந்து நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வரலாம்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** துணைத் தலைவர் அவர்களே, மதுரை ஹாஸ்பிடலில் பேஷண்டுகளுக்கு குடிதண்ணீர் இல்லாமலும், மற்றும் ஆபரேஷன் வேலைகளுக்குத் தண்ணீர் இல்லாமல் நிறுத்தி வைக்கப்படுவதும் கஷ்டமாக இருக்கிறது. நகர சபையைக் கேட்டால், புது தனி ஏற்பாடு என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, உடனடியாக ஏதாவது தாற்காலிகமாகவாவது திட்டம் ஒன்றைச் செயல்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மருத்துவ மனையில் நோயாளிகளுக்கும், அறுவைச் சிகிச்சை கூடத்திலும், தண்ணீர் தட்டுப்பாடு என்கிற குற்றச்சாட்டு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படிக் குறைகள் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அதை நிவர்த்திக்க ஆவன செய்யலாம். கனம் உறுப்பினர் அதுபற்றித் தெரிவித்தால், பரிசீலனை செய்து நகரமன்றத்திற்குத் தெரிவித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.



1967 ஜூலை 5]

**திரு. சொ. கோவிந்தராசன் :** மதுரை ஆஸ்பத்திரியில் பிரேதத்தை வைக்கும் இடத்தில் குளிர்ப் பதன இயந்திரம் சீர்கெட்டு வேலை செய்யவில்லை. ஆதலால், பிரேதங்கள் அதிகமாக காலதாமதமாகி விட்டால் நாற்றம் எடுத்துப் போகின்றன என்பது சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அந்த இயந்திரம் சீர்திருத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் கொடுக்கும் விவரம் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படிப்பட்ட குற்றம் இருந்தால், கனம் உறுப்பினர் தெரியப்படுத்தினால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் குளிப்பதற்குத் தண்ணீர் இல்லாத நிலைமையிலே ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டார்கள் என்பதுபற்றி கனம் அமைச்சரவர்களுக்குத் தகவல் உண்டா ? ஆகவே, அப்பேர்ப்பட்ட மோசமான ஒரு நிலைமை ஏற்படாத வகையில் உடனடியாக ஏதாவது பரிகாரம் தீட்டப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குடி தண்ணீர் பிரச்சினை காரணமாக மாணவர்கள் அடிதடி செய்துகொண்டார்கள் என்ற விவரம் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. குழாயடிச் சண்டை கல்லூரிவரை வரவில்லை. கனம் உறுப்பினர் கூறிய கருத்து பரிசீலனைக்கு வருமானால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sri, is it a fact that a few patients have to be booked and therefore cases are unnecessarily booked upon and whereas an unusually large quantity of water is required for hospital use, will the Government issue suitable instructions to the Hospital authorities to have their own water pumping system from the local area, as is done in the Madras General Hospital, instead of depending on the Madurai Municipality?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : It is not correct to say that patients collapsed for want of water. Suitable action will be taken to provide drinking water to the Hospital.

### தாம்பரத்திற்கு பாலாற்று நீர்

* 172. வினு.—திரு. முனு. ஆதி :<br>திரு. கே. விநயகம் : } மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தாம்பரத்திற்கு பாலாறு நீரினைக் கொண்டு வரும் திட்டம் எந்த அளவு நிறைவேற்றப்பட்டுள்ளது ?

(இ) இன்றைய நிலைவரை இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(உ) இத்திட்டம் முழுமை பெற எத்தனை நாட்களாகும்?

(எ) இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பெற்ற மொத்தத் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) 1967-ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் முதல் முன்னோடித் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நீர்த் தேக்கத் தொட்டியும், குடிநீரை வடித்துப்பகுக்கும் அமைப்பும் நிறுவும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

(இ) 1967-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முடிய இத்திட்டத்தில் ரூ. 27.33 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

(உ) இத்திட்டம் இந்த ஆண்டில் முழுமைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(எ) ஏறத்தாழ இத்திட்டம் ரூ. 34.98 லட்சம் செலவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு இன்னும் 15 லட்சம் ரூபாய் தேவை என்று நகரமன்றத்திலிருந்து மனு வந்திருக்கிறதா ? பாதி வேலைகளோடு நின்று விட்டதால் ஏதாவது கூடுதலாகத் தொகையை இந்த பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நகரமன்றத்திலிருந்து யாதொரு மனுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM : As Tambaram happens to be a growing suburb of Madras City and a lot of houses have sprung up and most of the people who work in the City of Madras are living in that area, will the Government think of the possibility of giving house connections as early as possible and, if so, how many house connections will be given?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : As early as possible after the work is over, house connections will be given. The number of house connections that can be given cannot be said now.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, அதற்கு இன்னும் 15 லட்சம் ரூபாய் கொடுத்தால்தான் முடியும் என்ற தறுவாயில் இருக்கிறது. இதுபற்றி முதலமைச்சரவர்களைக்கூட பார்த்து நாங்கள் கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டு 15 லட்சம் ரூபாயைக் கொடுத்தால் உடனடியாக ஏதாவது வழிகாண முடியும். ஆகவே, அதைப் பரிசீலிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் நகரமன்றத்தின் கோரிக்கையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால் உரிய நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether the scheme was sponsored by the previous Government or the present Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme was sponsored by the previous Government.

DR. H. V. HANDE : First of all I rise on a point of order. Notice of this question was given by me also and I was given written information that my name also will be included. That has not been done.

The Palar Water Supply Scheme was originally estimated at Rs. 35 lakhs. But due to increase in the cost of materials and other factors, the completion of the scheme might involve some additional expenditure. This was brought to the notice of the Government. Two big reservoirs, one for East Tambaram and the other for West Tambaram, are now under construction. In view of all these factors, do the Government realise that unless extra amount is given, the scheme will not materialiss?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have nc information about the details given by my Friend. If my Friend puts a separate question, I will supply the necessary details.

**திரு. கே. விநாயகம் :** ஐயா, இப்பொழுது குழாய்கள் எல்லாம் தெருக்களிலே அமைந்திருக்கின்றன. அந்தக் குழாயைத் திறந்து விட்டால் வெறும் காற்றுத்தான் வருகிறது. ஒருவேளை தண்ணீர் வந்தால், அதில் மீன் குட்டியும், பாசியும், ஃபங்கஸ்தான் வருமென்று கேள்விப்பட்டேன். அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தண்ணீர் வருகிற குழாய்களில் தண்ணீர்தான் வரும். காற்று வரும் குழாய்களில் காற்றுதான் வரும். கனம் உறுப்பினர் குறிப்பிட்டதுபோல மீன் வருவதற்கான சாத்தியமில்லை. அதுபற்றி அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** கேள்வி எண் 160, 161, 162, 163 ஆகிய இந்த நான்கு கேள்விகளும் ஒரே பொருள்பற்றி இருக்கிற காரணத்தால், அவற்றை ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

## அரசு ஊழியர்களின் சம்பளமும் படியும்

*160 வினா.—திரு. டி. மார்டின் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை மறு பரிசீலனை செய்ய சம்பள கமிஷன் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

*161 Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to increase the City House Rent Allowance to the Government servants to be on a par with the Central Government servants?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

*162 Q.—Thiru K. RAMAMOORTHY :<br>Thiru V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to increase the salary and other emoluments to its Non-Gazetted Government Officers this year?

The Hon. Thiru C. N. ANNADURAI : No.

*163 Q.—Thiru B. MAHADEVAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the Government have taken any steps to bring parity in the pay scales of the employees of the State and Central Governments; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

Thiru T. MARTIN : Mr. Deputy Speaker, Sir, since the cost of living has gone up since the report of the previous Pay Commission, may I request the Hon. Chief Minister to state whether this Government will appoint a fresh Pay Commission at least in 1968?

The Hon. Thiru C. N. ANNADURAI : I have already stated that it is not the intention of the Government to appoint a fresh Pay Commission.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரின் கொள்கைகள்தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பதாலும், மேலும் மத்திய சர்க்கார் தொடர்ந்து அதே கொள்கைகளைப் பின்பற்றி வருவதாலும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு மத்திய சர்க்கார்தான் பொறுப்பேற்க வேண்டுமாதலால், தமிழக அரசின் ஊழியர்களின் சம்பளத்தையும், பஞ்சப்படியையும் மத்திய சர்க்கார் ஊழியர்களின் அளவிற்கு உயர்த்த ஆகும் செலவை மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டுமென்று இந்த சர்க்கார் கேட்டுக் கொண்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தப் பஞ்சப்படி உயர்வு விலைவாசி ஏற்றத்தின் தொடர்பாக ஏற்படுவதால், விலைவாசி ஏற்றத்திற்கு முழுப்பொறுப்பும் மத்திய சர்க்காருடையது என்பதால், இதற்கான பொறுப்பினை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

Thiru K. VINAYAKAM : Assuming that this Government has decided not to appoint any more pay commission to revise the pay structure of our employees, will the Government come forward to give at least dearness allowance and take action *suo motu* in view of Gajendragadker's report to the Centre and will the Government think of the possibility of giving City compensatory allowance which is direly needed by our employees as is given to the Central Government servants in the City?

The Hon. Thiru C. N. ANNADURAI : I am thankful for the explanation which is however already known. City Compensatory Allowance is under examination. As far as the Gajendragadker's Report is concerned, even the Central Government has not yet come to a decision on it. I have asked the Law Minister to go to Delhi and discuss the matter.

திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும் இடையேயுள்ள இந்த வீட்டு வாடகைப்படி மட்டுமல்லாமல், பல் வேறு இனங்களிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டுமென்று மாநில அரசு ஊழியர்கள் நீண்ட காலமாகவே கேட்டு வருகிறார்கள். இந்தச் சிக்கலை அவிழ்ப்பதற்கு, மாநில சர்க்காரின் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்ப்பதற்குத் தடையாக இருப்பது எது ? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய சிக்கலை இன்னொருவரைக்கொண்டு தீர்க்கச் சொன்னாலே அதனால் காலதாமதமாகும் என்பதை நண்பர்கள் அறிவார்கள்.

Dr. H. V. HANDE : Sir, City Compensatory Allowance, especially house rent, has been a great source of irritation to the State Government employees for the past several years, ever since the City was declared an 'A' Class City. Whenever there has been a clear-cut disparity between the Central and the State

[1967 ஜூலை 5

employees, the Finance Commissions have examined this question sympathetically and have pressed the Central Government to bring about parity of pay. Will this Government tell the Finance Commission that we want some extra amount for the sake of the State Government employees and compel them to recommend some extra grant for bringing about parity?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Finance Commission gets its existence only once in five years. That is why I have said on the floor of this House that the Finance Commission should be a permanent commission. If I want to press the Finance Commission about the intricacies of the problem, I have to wait till the Finance Commission comes into existence. In the meantime, this Government have been pressing upon the Central Government the necessity to solve this problem.

**திரு. பெ. மலைச்சாமி :** மத்திய அரசு, தங்களுடைய ஊழியர்
மு.ப. 9-30 களுக்குச் சம்பளங்களை உயர்த்துகிறபோது, மாநில சர்க்காரின் ஒப்புதலைக் கேட்டதற்குப் பிறகு உயர்த்தவேண்டும் என்ற செயற் குறிப்பை மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பியுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதை மத்திய சர்க்காரே மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

**திரு. க. ரா. நல்லசிவம் :** மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு—நகரங்களில் வசிக்கக்கூடியவர்களுக்கு—நகர ஈட்டுப்படி கொடுக்கப் படும் என்று முன்பிருந்த சர்க்கார் ஏதோ உத்தரவு பிறப்பித்த தாகவும், அது இன்னும் அமலுக்குக் கொண்டுவரப்படாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறதே, அதில் ஏதாவது உண்மை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் கேள்விப்பட்ட வரையில், இந்த ஸிட்டி காம்பென்ஸேடரி அலவன்ஸ் என்பதைக் கொள்கை ரீதியாகக் கூட போன சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை என்று அறிகிறேன்.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** வீட்டு வாடகைப் படி, சம்பளம் முதலியவற்றில் மாநில அரசாங்கப் பணியாளர்களுக்கும், மத்திய அரசாங்கப் பணியாளர்களுக்கும் இடையே பலவித மாறுபாடுகள் இருக்கிற காரணத்தால், அரசாங்கம் சிந்தனை செய்து, அதைச் சமப்படுத்திக் கொடுக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவர் ஒரு வேண்டு கோள் விடுத்திருக்கிறார். அதைக் கேள்வியாகவே கருதிக்கொண்டு அவர்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறேன். மத்திய சர்க்கா ருடைய பஞ்சப்படி அளவிற்கு மாநில சர்க்காருடைய பஞ்சப்படி ஈடு செய்யப்பட வேண்டும் என்பதில் இந்தியாவிலேயே நம்முடைய மாநில அரசு மிகத் தீவிரமான முறையில் மிகுந்த அக்கறையோடு, கவனம் செலுத்திக்கொண்டு வந்திருக்கிறது.



1967 ஜூலை 5]

**திரு. எம். சுரேந்திரன் :** இப்பொழுது சம்பளம் என்பது, குறைந்த பட்சம் உயிர் வாழ்வதற்குத் தேவையான வருமானம் என்று கணக்கிடப்படுகிறது. உயிர்வாழ்வதற்கும், சமுதாயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சுயகௌரவத்திற்கும் பாதகம் இல்லாமல், தகுதியுள்ளதாக இருக்கிறதா என்பதைப்பற்றி இந்த சர்க்கார் புது நோக்குடன் ஆராயுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், உயிர் வாழ்வதே முடியுமா என்ற பிரச்சினையில் பெரும்பாலான மக்கள் இன்றையதினம் இருந்துகொண்டிருக் கிறார்கள்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** பெருவணக்கத்திற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சர்க்கார் சிப்பந்திகளுக்குத் தொடர்ந்து விலையுயர்வு ஏற்படுகிற நிலையை நீக்கும் பொருட்டு, காரணத்தால், பொருள்களினுடைய விலையும் கூடவே உயர்ந்து, தொடர்ந்து விலையுயர்வு ஏற்படுகிற நிலையை நீக்கும்பொருட்டு, நம்முடைய சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கூட்டுறவுப் பண்டகசாலை மூலம் குறைந்த விலையில் தேவைப்படும் சரக்குகளைக் கொடுக்க இந்த சர்க்கார் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதை அந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்களே கூட இன்னும் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, to clinch this point to a definite conclusion, will the Hon. Chief Minister let us know whether he wants to perpetuate the disparity between the Central Government employees and the State Government employees in the matter of dearness allowance, pay structure, City compensatory allowance and house rent allowance. Is there no panacea for all these evils even in this benevolent Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am thankful to the Hon. Member for using the word 'even'. If he has got any confidence in that word 'even', he should wait for this Government to act.

**புலவர் க. முருகையன் :** இன்று அரசு ஊழியர்களுக்கு இருக்கிற வருமானத்திலே, விலைவாசி ஏற்றத்தின் காரணமாகத் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியவில்லை. இப்பொழுது துணியின் விலையும் ஏற்றப்பட்டிருக்கிறது. அவற்றை உத்தேசித் தாவது மத்திய சர்க்கார் இரக்கம் காட்டும்படி நம்முடைய சர்க்கார் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்தப் பிரச்சினை களினுடைய நிலைமைகளையெல்லாம் மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் அவ்வப்போது வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு வருகிறது.

**திரு. கெ. இரா. ஞானசம்பந்தன் :** தாலூக்கா தலைநகரில் உள்ளவர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுகிறது. திருவாரூர், பேரளம், பொறையார் போன்ற இடங்களில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படுவதில்லை. அந்த இடங்களில் உள்ளவர்களுக்கும் வீட்டு வாடகைப் படி கொடுக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா? வீட்டு வாடகைப் படியை மூன்று பிரிவாகப் பிரித்து வைத்திருப்பதை மாற்றி, எல்லோருக்கும் ரூ. 13 அளவிற்குக் கிடைக்க அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சர்க்கார் ஊழியர்களுக்கு எந்தெந்த விதமான சலுகைகள், வசதிகள் செய்து தரவேண்டுமோ, அதிலே இந்த சர்க்கார் அக்கறையோடு இருக்கிறது. அதனை எந்த எந்த நேரத்தில், எந்த எந்த அளவு, எந்த எந்த முறையிலே செய்ய முடியுமோ அப்படிச் செய்வதாக உறுதி எடுத்திருக்கிறது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்த சர்க்கார் ஊழியர்களைப்பற்றி மாத்திரம் கவலைப்படுகிறார்களே, சட்டசபை மெம்பர்களுக்குப் பஞ்சப்படி முதலியவை கொடுக்கப்படுமா? (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொதுவாக நாட்டில் சட்டசபை உறுப்பினர்களுக்கு அதிகப் பணம் கொடுப்பதால் பஞ்சம் வந்துவிட்டதோ என்று கூட யோசிக்கிறார்கள். (சிரிப்பு.)

**திரு. எஸ். முருகையன் :** சென்ற காலத்தில் மத்திய அரசிலும் காங்கிரஸ் நிர்வாகத்தில் இருந்தது. மாநில அரசிலும் காங்கிரஸே நிர்வாகத்தில் இருந்தது. 1967-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பு, இங்கு காங்கிரஸ் நிர்வாகத்தில் இருந்துகொண்டு வந்தது. அப்பொழுது அவர்கள் அதுபோன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதினார்களா, அது சம்பந்தமாக என்ன பதில் வந்தது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மத்திய சர்க்கார் காங்கிரஸ் கட்சியால் நடத்தப்பட்டு, மாநில சர்க்காரும் காங்கிரஸ் கட்சியால் நடத்தப்பட்டு வந்த நாட்களில் என்னென்ன நடந்தது என்பதை, நம்முடைய கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் ஓய்வு நேரத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சமீபத்தில் என்.ஜி.ஓ. அஸோஸியேஷனைச் சேர்ந்த தூதுகோஷ்டியினர் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததாகவும், அப்பொழுது 'நாள் கணக்கில் கவனிக்கப்படும்' என்று சொன்னதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியென்றால், எத்தனை நாட்களில் கவனிக்கப்படுவதாக உத்தேசம்?





**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒரு தூதுக் குழு சந்தித்தது உண்மை. 'கவனிப்போம்' என்று இந்த சர்க்கார் சொன்னதும் உண்மை. 'நாள் கணக்கில்' என்பது கனம் உறுப்பினருடைய ஆவலைக் காட்டுகிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** சர்க்கார் ஊழியர்களுக்குக் குடியிருப்பு கிடைப்பது கஷ்டமாக இருப்பதைச் சர்க்கார் ஆலோசித்து, தனிக் காலனிகள் அல்லது மாடி மாதிரி கட்டி அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவையெல்லாம் இந்தச் சர்க்கார் எண்ணிக்கொண்டிருக்கிற இன்பத் திட்டங்கள். உரிய நேரத்தில் நிறைவேற்றப்படும்.

**திரு. தி. பொன்னுமலை :** ஐயா, சர்க்கார் ஊழியர்களுக்குப் புறம்போக்கு நிலத்தை மறைமுகமாகப் பட்டா செய்வதை, நேரடியாக பட்டா செய்துகொடுப்பதுபற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?

(பதில் இல்லை.)

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி சென்னை நகரில் கொடுப்பதால் சர்க்காருக்கு நஷ்டம் எவ்வளவு ஆகிறது? என்.ஜி.ஓ.-க்களுக்கு அதனால் ஆதாயம் கிடைக்கிறது என்பது உண்மைதானா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதனால், என்.ஜி.ஓ.-க்களுக்கு ஆதாயம் கிடைப்பது உண்மை. ஆனாலும், அதற்கான உரிய கணக்கு ஓர் ஆண்டுக்குப் பிறகுதான் தெளிவான முறையில் தெரிய முடியும். குத்துமதிப்பாகப் பார்க்கும்போது, என்.ஜி.ஓ. போன்ற நடுத்தரக் குடும்பத்தினருக்கு ஒரு மாதத்திற்கு ஏழு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரையிலும் இதனால் ஆதாயம் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது.

## நீதி மன்றங்கள்

* 168 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நடமாடும் கோர்ட்டுகள் எங்கெங்கே இயங்கி வருகின்றன?

(இ) அவைகளை மேலும் மாவட்டந்தோறும் விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இயங்கும் நீதி மன்றங்கள் Mobile Courts சென்னை மாநகரில் மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

(இ) ஏனைய மாவட்டங்களிலும் இத்தகைய நீதிமன்றங்களை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசிற்கு இல்லை.

(உ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இயங்கும் நீதிமன்றங்கள் மாவட்டந்தோறும் தற்சமயம் இல்லையென்று சொன்னாலும், சென்னை நகரத்திற்கு அடுத்தாற்போல் ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட மதுரை, கோயமுத்தூர், திருச்சி போன்ற இந்த முக்கிய மான மிகப் பெரிய நகரங்களிலாவது அப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபோன்ற இயங்கும் நீதி மன்றங்கள் சிறு சிறு குற்றங்களுக்காக விரிவுபடுத்தப்பட வேண்டும், எளிதில் நீதி கிடைப்பதற்காக, என்ற கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது. மதுரையில் அமைக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திலிருந்து ஒரு ப்ரொபோஸல் இங்கே அனுப்பப்பட்டது. இப்போதுள்ள நிதி நிலையைப் பொறுத்து, அதைப் பின்னாலே யோசிக்கலாம் என்று தள்ளி வைத்திருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'மொபைல் கோர்ட்' என்பதைவிட 'காம்ப் கோர்ட்' (முகாம் கோர்ட்) அந்தந்த இடங்களில் போடுவது, ஆங்காங்கு இருக்கும்படியான மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்பதைச் சர்க்கார் உணருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 'காம்ப் கோர்ட்' என்பது பொதுவாக மற்ற கோர்ட்டுகளைப் பொறுத்திருக்கிறது. இயங்கும் நீதி மன்றம் என்பது ட்ராபிக் அஃபென்ஸஸ்-க்காக உள்ளது. பெரிய நகரங்களில் இத்தகைய இயங்கும் நீதி மன்றங்களை அமைத்தால் எளிதில் தீர்ப்பு கூறிவிடலாம் என்ற அடிப்படையில்தான் இந்த இயங்கும் நீதி மன்றம் அமைக்கப்படுகிறது.

**திரு. செ. பாலசுப்ரமணியன் :** இம்மாதிரியான இயங்கும் நீதி மன்றங்களில், துரிதமாக வழக்குகள் பைசல் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, சட்டபூர்வமான முறைகள்கூட அனுஷ்டிக்கப்படுவது இல்லை, குற்றவாளிகள் வக்கீல் வைத்து வழக்காடுவது போன்ற காரியங்கள் செய்வதற்குக் கூட அவகாசம் கொடுக்கப்படுவதில்லை என்று சர்க்காருக்கு ஏதேனும் புகார் வந்திருக்கிறதா ? அதைப் போக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட புகார் எதுவும் எங்களுக்கு வரவில்லை. அப்படிச் சொல்லுவதும் தவறு என்று நான் கருதுகிறேன். காரணம், இதுபோன்ற ட்ராபிக் அஃபென்ஸைப் பொறுத்து, பெரிய விவாதத்திற்குரிய பிரச்சினை எதுவும் இல்லை. அவர்கள் வாதிட வேண்டுமென்றால் அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது.



THIRU B. VENKATASWAMY : May I request the Minister for Law to state whether there is any proposal to open panchayat Courts in our State?

THE HON. THIRU S. MADHAVAN : It is a different problem which comes under the Madras Panchayats Act. We will consider it.

DR. H. V. HANDE : Because there is a bus for the mobile court and the bus has to support itself, a certain number of cases have to be booked and therefore cases are unnecessarily booked and fines levied—there is such a fear among the public.

THE HON. THIRU S. MADHAVAN : I cannot agree with the hon. Member. According to the figures given to us by the High Court, we have no income at all from criminal justice.

THIRU K. VINAYAKAM : Is the Minister for Law aware of the fact that in these mobile courts no legal aid or assistance is procured by the accused, that it results in the ends of justice not being meted out and that this is termed by the local people as 'highway robbery'?

THE HON. THIRU S. MADHAVAN : I object to the words 'highway robbery'; a court is a judicial body. My hon. Friend can give the legal help. There is no bar to legal aid.

**திரு. சி. கோவிந்தராசன் :** நீதிமன்றங்கள் வழக்குகளை எடுத்துக் கொள்வதிலும், துரிதமாகப் பைசல் செய்வதிலும், தீர்ப்பு வழங்கு வதிலும் காலதாமதம் ஆகிறது. சிவில் கோர்ட்டில் ஆண்டுக் கணக்கில் ஆகிறது. இதனால் மக்களுக்குப் பணச் செலவும் அதிகம் ஆகிறது. அந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி பைசல் செய்வதையோ, தீர்ப்பு வழங்குவதையோ காலதாமதமின்றி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது இயங்கும் நீதி மன்றங்களைப் பொறுத்த விஷயம். சிவில் நீதி மன்றங்களைப் பொறுத்த அளவில் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டுமென்று இந்த அரசு உயர்நீதி மன்றத்தோடு கலந்து பேசித் தெரிவித்து வருகிறது. உயர்நீதி மன்றமும் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்திய நாட்டிலேயே தமிழகத்திலேதான் வழக்குகளைப் பைசல் செய்வதில், தீர்ப்பு வழங்குவதில் காலதாமதம் அதிகம் இல்லை என்று 'லா கமிஷன்' கருத்துத் தெரிவித்திருக்கிறது.

**திரு. என். சங்கரய்யா :** அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதிலளிக்கையில் இயங்கும் நீதி மன்றங்களினால் அதிகம் செலவாகிறது என்று சொன்னார்கள். சென்னையில் அமைக்கப்பட்டுள்ள இயங்கும் நீதி மன்றங்களுக்கு என்ன செலவாகி வருகிறது என்கிற விவரத்தை அரசாங்கம் தெரிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சென்னையில் உள்ள இயங்கும் நீதி மன்றங்களுக்கு என்ன செலவாகிறது என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. நான் கூறினது புதிதாக இப்படிப்பட்ட

திட்டங்களை எடுத்துக்கொள்கிறபோது அதற்கு செலவாகிறது. அதனால் அதை ஒத்திப்போடலாம் என்று உயர்நீதி மன்றம் தெரிவித்திருக்கிறது என்பதுதான். போலீஸ்துறைத் தலைவர் அவர்கள் மதுரையில் இதுபோன்ற இயங்கும் நீதி மன்றம் ஒன்றைத் துவக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி உயர்நீதி மன்றத்துடன் கலக்கப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சிறு குற்றங்களை உடனுக்குடன் விசாரித்துத் தீர்ப்பு வழங்க இத்தகைய இயங்கும் நீதி மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. இதில் நியூசென்ஸ், 'க்ரூயல்டி டு அனிமல்ஸ்' போன்ற இனங்களில் வருகிற சிறு குற்றங்களையும் விசாரிப்பதற்கான முறையில் விரிவான அதிகாரம் இவற்றுக்கு வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மற்ற சிறுசிறு குற்றங்களைக் கவனிப்பதற்காகத்தான் பெஞ்சு கோர்ட், ஆனரரி மாஜிஸ்ட்ரேட் கோர்ட் போன்ற அமைப்புக்களை நீதிமன்றத் துறையில் வைத்திருக்கிறோம். இந்தத் துறை அதற்கு சம்பந்தமில்லாத துறை. எங்கெங்கே சிறுசிறு குற்றங்கள் அதிகமாக வருகின்றனவோ அங்கங்கே பெஞ்ச் கோர்ட், ஆனரரி மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

THIRU K. VINAYAKAM : May I know from the Minister as to who presides over these courts? Are they stipendiary magistrates or honorary magistrates? What are the receipts from these courts monthwar up to this date? What is the receipt collected by way of fine—is it not self sufficing?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த நீதி மன்றங்களில் எவ்வளவு வருமானம் வருகிறது என்கிற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இவை ஸ்பெஷல் ஆனரரி மாஜிஸ்ட்ரேட் தலைமையில்தான் நடைபெறுகின்றன. நான் கூறியது க்ரிமினல் ஜஸ்டிஸ் வழங்குவதில் நமக்கு செலவு அதிகமாகிறது. சிவில் ஜஸ்டிஸ் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம்தான் அதில் வரும் அதிகச் செலவை ஈடுகட்டிக்கொள்கிறது என்பதாகும். இயங்கும் நீதி மன்றங்களினால் நமக்கு அதிக லாபம் வருகிறது என்று நினைப்பது தவறு.

* 169 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மதிப்பிற்குரிய சட்ட-கட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குளித்தலையிலாவது அல்லது கரூரிலாவது சப்கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, குளித்தலையில் சப்கோர்ட் ஒன்றை வைக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு மனு அனுப்பப்பட்டிருக்கிறதா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட வேண்டுகோள் ஒன்று வந்தது. 1964-இலும் வேண்டுகோள் வந்தது. அதுபற்றி உயர்நீதி மன்றத்தின் கருத்தைக் கேட்டோம். அதுபோல அமைப்பதற்குப் போதுமான வழக்குகள் அங்கே வருவதற்கு இல்லை என்று கூறிவிட்டார்கள்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** இந்த சப்கோர்ட்டை கரூரில் வைப்பது நல்லது, குளித்தலை, கரூர் ஆகிய இரண்டு தாலூக்காக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்ற கருத்தை இரண்டு பார் அசோசியேஷன்களும் சேர்ந்து விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்களே, அரசாங்கம் அதை முன்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது தெரியும். அதைக் கைவிட்டுவிட்டார்கள் என்றால் மீண்டும் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கரூரில் சப்கோர்ட் வைக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திருச்சியில் உள்ள துணை நீதி மன்றத்தில் ஒன்றை கரூருக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டது. ஆனால் ஓர் இடத்தில் ஒரு சப்-கோர்ட்டை வைப்பது என்றால் அதற்குப் போதுமான வழக்குகள் அந்த ஏரியாவில் இருக்குமா என்பதைப் பரிசீலனை செய்வது உயர்நீதி மன்றம். அவர்கள் இதையும் பரிசீலனை செய்து கரூரில் போதுமான வழக்குகள் இருக்காது, அதன் காரணமாக அங்கே வைப்பதற்கில்லை என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

**திரு. என். வரதராஜன் :** நீதி மன்றங்கள் பரவலாக இருக்க வேண்டுமென்பது கிராம மக்களுடைய அவா. ஆனால் வழக்கறிஞர்கள் தங்களுக்குத் தோதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இப்படிப் பரவலாக ஏற்படுவதை எதிர்க்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதுபற்றி அமைச்சர் அவர்களுடைய அபிப்பிராயம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நீதி மன்றங்கள் பொது மக்களுடைய வசதிக்கேற்றபடி அமைய வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. புதிய நீதி மன்றங்களைத் தொடங்குகிறபோது போதுமான வழக்குகள் இருக்குமா, செலவு செய்யக்கூடிய பணத்திற்கு ஏற்ற நன்மை ஏற்பட்டதா என்பதை உயர்நீதி மன்றம்தான் பரிசீலனை செய்து தெரிவிக்கிறது. அவர்களுடைய கருத்தை ஏற்று இந்த அரசாங்கம் நடைபெறுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஏற்கெனவே பரிசீலித்து கைவிட்ட இந்தத் திட்டத்தை அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மீண்டும் கவனிக்கப்படும், உயர்நீதி மன்றம் ஏற்றுக்கொண்டால்.

[1967 ஜூலை 5

*170 வினு.—திரு. வெ. முனுசாமி : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செஞ்சியில் மாவட்ட சிவில் நீதி மன்றம் (District Munsiff Court) ஏற்படுத்தும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திடம் அத்தகைய செயற்குறிப்பு எதும் இல்லை.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : வினுக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) சென்னையில் குடிசைப் பகுதிகளில் தொடர்ந்து தீ விபத்துக்கள்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : சென்னை நகரில் தொடர்ந்து நடைபெற்று வரும் தீ விபத்துக்கள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் படித்துவிட்டு, அதைப்பற்றிய சில கருத்துக்களை மட்டில், ஒருசில வாக்கியங்களில் வழங்கி முடித்துவிடுமாறு இருவரையும் நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

THIRU P. G. KARUTHIRUMAN : I wish to raise the following adjournment motion—

'That the House do stand adjourned to discuss a matter of public importance, namely—

The continuous fire accidents taking place at early hours on 5th July 1967 at Nattuthottam and Slaterpuram in the Madras City, the failure of the Government to institute proper enquiry regarding the cause of fire accidents, taking proper steps to afford relief to the victims and the failure of the Fire Service Brigade to give timely help and service due to their negligence.

* திரு. ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்களே, கடந்த நான்கு நாட்களில் நாள்தோறும் தொடர்ந்து சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக,

(1) இராயபுரம் கடற்கரைப் பிரதேசத்தில் மீனவர் வாழ் பகுதியிலும் ;

(2) தேனும்பேட்டை சிவசண்முகபுரத்திலும் ;

(3) மயிலாப்பூர் லஸ் கார்னரை அடுத்துள்ள பட்டுநூல்காரன் தோட்டத்திலும் ;



1967 ஜூலை 5] [திரு. ம. பொ. சிவஞானம்]

(4) நுங்கம்பாக்கத்தில் கோடம்பாக்கம் ஐரோட்டிலுமாக நான்கு இடங்களில் பெரிய அளவில் தீ விபத்துக்கள் ஏற்பட்டு ஏராளமான பொருள் சேதமும், நான்கு பேர் உயிரிழக்கவும் நேர்ந்துள்ளன.

இந்த விபத்துக்களுக்கு ஏதேனும் சதித்திட்டம் காரணமாக இருக்குமோ என்ற ஐயமும் பீதியும் சரியாகவோ, தவருகவோ மக்களிடையே ஏற்பட்டு, குடிசைப் பிரதேசங்கள் சிலவற்றில் மக்கள் தத்தம் வீடுகளில் தங்கி வாழப் பயந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, அதுபற்றி விவாதித்து தக்க பரிகாரம் காண சட்டப் பேரவை நடவடிக்கைகளை ஒரு மணி நேரம் ஒத்திவைக்கக் கோரி என்னுடைய தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

* திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நான் மாண்புமிகு திரு. ம. பொ. சி. சொன்னது மாதிரியாக சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை ஒரு மணி நேரம் ஒத்தி வைத்துவிட்டு விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், இது மிகவும் மனதிற்கு வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. சதி செய்வதுபோல தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்கிற எண்ணம் மக்களிடத் தில் பரவி வருகிறது. அதுவும் தீப்பிடித்துக்கொண்ட செய்தி கிடைத்தவுடனே ஃபயர் சர்விஸ் பிரிகேட் அந்த இடத்திற்குப் போய் இருக்கிருர்கள். ஒன்றரை மணி நேரம் தண்ணீர் கிடைக்க வில்லை என்று அவர்கள் தாமதித்ததன் காரணமாக அதிகமான வீடுகள் நாசமாகியிருக்கின்றன. இன்று விடியற்காலை நடுத் தோட்டம், ஸ்லாடர்புரம் பகுதியில் தீப்பிடித்துக்கொண்ட விவரம் எனக்கு டெலிபோனில் சொல்லப்பட்டது. உடனே போய்ப் பார்த்து, காலையில் அதிகாரிகளையும் பார்த்துவிட்டு வந்தேன். அங்கே தீ அணைப்புப்படை போனவுடன் சாவியை வைத்துவிட்டு வந்ததாகச் சொல்லி திரும்பி வந்திருக்கிருர்கள். திரும்பப் போவதற்குள் 1½ மணி நேரம் தாமதமாகியிருக்கிறது. இந்தக் காரணத்தினுல் நூற்றுக்கணக்கான வீடுகள் சாம்பலாகிவிட்டன. நேற்று மாலை மைலாப்பூரில் இங்கே தீ வருகிறது, அங்கே தீ வருகிறது என்பதாக இரவு 9 மணிக்குச் செய்தி பரவி, அதன் காரணமாக பலர் தங்கள் சாமான்களை குடிசையைவிட்டு வெளியே எடுத்து வைத்துக்கொண்டு இருந்திருக்கிருர்கள். இது திட்ட மிட்டு யாரோ சிலர் நடத்துகிருர்களோ என்கிற எண்ணம் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. இந்தத் தீ விபத்தின் காரணமாக குடிசைகள் மட்டும் அல்ல, கொஞ்சம் நடுத்தரக் குடும்பங்கள் கூட வீடிழந்து இருக்கின்றன. அரசாங்கம் குடிசை இழந்தவர்களுக்கு நிவாரணமாகக் கொடுக்கிற தொகையை 100 ரூபாய் அளவுக்காவது கூட்டிக் கொடுக்கவேண்டும். தொடர்ந்து நான்கைந்து தீ விபத்துக்கள் நகரில் நடந்துவிட்ட காரணத்தினுல் சபை நிகழ்ச்சிகளை 1 மணி நேரம் ஒத்தி வைத்து முதல் அமைச்சர் அவர்கள் சபை உறுப்பினர்கள் தெரிவிக்கிற

ஆலோசனைகளையும் கேட்டு தக்க பரிகாரம் எடுத்துக் கொள்வதற்கு என்னுடைய ஒத்திவைப்புப் பிரேரணையை நான் கொடுத்திருக்கிறேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக் காட்டியதுபோல, கடந்த 1-ஆம் தேதி முதல் தினமும் தீ விபத்துக்கள் நகரில் நடந்து கொண்டிருக்கின்றன. மொத்தத்தில், சிறியனவாகவும், பெரியனவுமாக பத்து இடங்களில் நடந்திருக்கின்றன. அவற்றுள் நான்கு இடங்களில் மிகப்பெரிய அளவில் நடந்திருக்கின்றன. குறிப்பாக, 3 தீ விபத்துக்கள் தியாகராயநகர் தொகுதியில் நடந்திருக்கின்றன. நூற்றுக் கணக்கான மக்கள் வீடிழந்து நிற்கிறார்கள். போலீஸ் ஐ.ஜி. அவர்கள், "இந்த விபத்துக்களுக்கு அரசியல் நோக்கம் எதுவும் காரணமில்லை" என்பதாக ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதியைக் குறைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கை ஆதலால், அதை நான் வரவேற்கிறேன். அதுமட்டும் போதாது; உடனடியாக அரசு இதுபற்றி ஆராய்ந்து, விபத்துக்கான உண்மைக் காரணங்களைக் கண்டறிந்து, பொய் வதந்திகளுக்கு இடமில்லாதபடி அதிகார பூர்வமான அறிக்கையை வெளியிட்டால்தான் மக்களிடத்திலே பீதி ஏற்படாமல் இருக்கும். நானே நேரில் பார்த்தேன், மக்கள் இரவு நேரங்களில் குடிசையில் உள்ள சாமான்களை ரோடில் கொண்டு வந்து வைத்துக் கொண்டு நிற்கிறார்கள். காரணம், இந்தத் தீ விபத்திற்குக் காரணம் சதித் திட்டம் என்கிற சந்தேகம்தான். தீ விபத்துக்களில் உடனடியாகத் தீயை அணைத்து சேதத்தைக் குறைக்க முடியாததற்குக் காரணம், குடிசைகள் நெருக்கமாகவும், தீ அணைப்பு மோட்டார் உள்ளே போக முடியாத அளவிலும் இருந்திருப்பதுதான். ரோடு வசதியின்றி, 200, 300 குடிசைகளை நெருக்கமாக அமைத்துவிடுவதன் காரணமாக, தீ விபத்துக்கள், ஏற்பட்டால், ஓரிரு குடிசைகளைக் கூட காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, இப்போது தீ விபத்து ஏற்பட்டுள்ள இடங்களைப் புனர் அமைப்புச் செய்கிறபோது இதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு, போதிய வசதிகளுடன் குடிசைகள் அமைத்துக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

மற்றொன்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதில், பல்வேறு அமைப்புக்கள், பல்வேறு முனைகளாக ஈடுபட்டு வருவதைப் பார்க்கிறோம். ஆட்சிப்பொறுப்பை ஒரு கட்சி ஏற்று நடக்கிற ராஜ்யம் இது. ஆகவே, நிவாரணம் அளிப்பதற்குப் பணியாற்றுகிற பல்வேறு அமைப்புக்களையும் ஒருமைப்படுத்தி, அரசினர் மூலமாகவே இந்த வேலை சரியான முறையில் நடைபெற வழிவகை செய்யப்பட வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்த விபத்துக்களுக்குக் காரணம் சதித் திட்டம் இல்லையானால், நான் மகிழ்ச்சி அடைவேன். இருக்குமானால், கொஞ்சம் கூடத் தயக்கம் காட்டாது, நிர்த்தாட்சண்யமாக





அத்தகைய சதியில் ஈடுபட்டவர்களின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் சில நாட்களாகத் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டு வருகிற இந்தத் தீ விபத்துக்கள் எல்லா மக்களுடைய மனதையும் வெகுவாக வாட்டியிருக்கிறது. அதனால் பாதிக்கப்படுகிற மக்கள் ஏழை எளியவர்கள் என்பதையும், அதனால் பெருத்த நஷ்டத்திற்கு அவர்கள் ஆளாகித் தவிக்கிறார்கள் என்பதையும், சிலர் உயிரிழந்து இருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கிற நேரத்தில் வேதனை அடைய வேண்டியதாக இருக்கிறது. ஆயினும் நாம் அடைகிற வேதனையை மக்களுக்கு உணர்த்துவதற்கும், தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அங்கே உள்ள மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு என்ன என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துச் சபை முடிந்த பிறகு தனித்தனியாகவும், கூட்டாகவும் நாம் ஒவ்வொருவரும் செயல்பட்டோமானால் நிவாரண வேலைகள் வெகு துரிதமாக நடைபெறக்கூடும். பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிவாரணத்திற்காக பல்வேறு முனைகளில் இருந்து, பல்வேறு அமைப்புக்கள் பணியாற்றிக்கொண்டிருப்பதைவிட எல்லாவிதமான அமைப்புக்களையும், தனிப்பட்டவர்களையும் ஒருமைப்படுத்தி சர்க்கார் மூலமாகவே இந்தக் காரியத்தைச் செய்யலாம் என்கிற யோசனையை திரு. ம. பொ. சி. அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது மிகவும் கவனிக்கத் தக்கது.

இந்தத் தீ விபத்துக்களுக்குப் பின்னாலே ஏதாவது சதித் திட்டம் இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்கக்கூட கூச்சமாக இருக்கிறது. ஏனென்றால் அந்த அளவுக்குச் சமுதாயத்தில் சீர்கேடானவர்கள் இருப்பார்கள் என்று ஒப்புக்கொள்வது கூட நமக்கு நாமே வெட்கத்தை உண்டுபண்ணக்கூடியதாக இருக்கிறது. சதித் திட்டங்கள் இருக்குமானால் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் போலீஸ் இலாக்கா முழுத் திறமையுடன் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சமூக விரோதிகள் இருப்பார்களேயானால் ஒரு துளியும் தயவு தாட்சண்யம் இல்லாமல் தண்டிக்கப்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து இருக்கிற தீ விபத்துக்கள் சதித் திட்டத்தின் அடிப்படையில் நடந்திருக்கின்றன என்று பொதுவாக வதந்தி பரவிக் கொண்டிருக்கிறதே தவிர திட்டவட்டமான முடிவு தெரியவில்லை. பொது மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு போலீஸ் துறையினர் ஏற்கனவே சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் வான்களில் ஏழை எளியவர்கள் குடியிருக்கின்ற பகுதிக்குச் சென்று தகுந்த பாதுகாப்புத் தரப்படும் என்பதாக மக்களுக்கு ஆறுதல் மொழியை

அளித்துக்கொண்டு வருகிறார்கள். அந்த ஏழைகள் வாழ்கிற குடிசைப் பகுதிகளில் முன்பின் பழக்கமில்லாதவர்கள் யார் வந்தாலும் வீட்டில் சேர்க்காதீர்கள், உடனுக்குடன் போலீசுக்குத் தகவல் கொடுங்கள் என்று அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குச் சொல்லப்படுகிறது. அதோடு நில்லாமல் சீருடை இல்லாத போலீஸ்காரர்கள் ஆங்காங்கே சுற்றி வருகிறார்கள், இப்படிப்பட்ட சமூக விரோதமான காரியங்களில் யாராவது ஈடுபடுகிறார்களா என்று கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்தத் துறையில் போதுமான அக்கறை காட்டப்பட்டு வருகிறது. இப்போது அது இன்னும் சுறுசுறுப்பாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் தீ அணைக்கும் படையினர் ஒரு மணி நேரம் சாவி இல்லை என்று சொல்லிவிட்டு திரும்பிச் சென்று வந்தார்கள், அதனால் பல வீடுகள் நாசமாகிவிட்டன என்று சொன்னார்கள். குறிப்பிட்டு எந்தப் ஃபையர் என்ஜின் என்றும், எந்தப் பகுதியில் இது நடந்தது என்றும் விவரம் தெரிவித்தால் அவர்களைத் தக்கபடி கண்டிப்பதற்கும், திருத்துவதற்கும் இந்தச் சர்க்கார் தயாராய் இருக்கிறது. ஒரு சமயம் யாரோ சொல்லக் கேட்டு சொல்வதானால் அவ்வளவு பொருத்தமுடையதாக இருக்காது.

அதுவும் சென்னை நகரத்தில் இப்படிப்பட்ட குடிசைப் பகுதிகள் மிக நெருக்கமான அளவில் கட்டப்பட்டு இருப்பதும், விபத்துக்கள் ஏற்பட்டால் உடனே சென்று தடுப்பதற்கு போதிய வழிவகை இல்லாமல் இருப்பதும் விளைவின் தன்மையை அதிகப்படுத்துகின்றன. அதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட விபத்துக்கள் நேரிடுகிறபோது தீ அணைப்புப் படையினர் இன்னமும் சுறுசுறுப்பாகப் பணியாற்ற சர்க்கார் மூலமாக என்ன
மு.ப. 10-00 என்ன தேவை என்றாலும் அதையும் கூடச் செய்வதற்கு இந்தச் சர்க்கார் தயாராய் இருக்கிறது. நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தீ விபத்துக்களினால் வீடு இழந்தவர்களுக்கு 100 ரூபாய் அளவுக்காவது உதவித் தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாக அவர்கள் இன்னும் கூடுதலாகத் தர வேண்டுமென்று கூறியதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் சார்ந்த கட்சி நடத்திய சர்க்காரில், தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30 ரூபாயும், அவர்களுடைய துணிமணிகளுக்காக 10 ரூபாயும் என்ற அளவிலேதான் கொடுத்து வந்தார்கள். போன வாரத்திலே நான் இந்த அளவை உயர்த்தி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 60 ரூபாயும், அவர்களுடைய துணிமணிகளுக்காக 20 ரூபாயும் ஆக மொத்தமாக 80 ரூபாய் தர வேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறேன். ஒரு சமயம் 80 ரூபாய் என்று சர்க்கார் சொல்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் யூகித்து அறிந்துதான், 100 ரூபாய் என்று சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு 100 ரூபாய் என்ற அளவு கூடப் போதுமா என்பதை எண்ணிப் பார்த்தால்,



நிச்சயமாகப் போதாது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்கள் ஸ்தாபனங்களும் முன்வந்து நிவாரணத்தையும் உதவிகளையும் செய்துகொடுப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக நாம் சபையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை. சட்டசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நம்முடைய வேலை நேரம் போக மீதம் உள்ள நேரத்தில் கருத்தாகப் பாடுபடுவார்களானால் நிச்சயமாக அது நிறைவேற்றப் படும் என்று கருதுகின்றேன். இதற்காகச் சபை நடவடிக்கையை ஒத்தி வைக்கத் தேவையில்லை.

**திரு. ம. பொ. சிவஞானம்:** துணைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தைக் கொண்டுவந்த இருவரும் விளக்கியதைக் கேட்டும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதி மொழிகளை ஏற்றும், என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த நான் விரும்பவில்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** சார், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு வழக்கமான முறையிலே, வழக்கமான சடங்கு மாதிரிதான் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, நாங்கள் தகுந்த முடிவு எடுக்கப் போகின்றோம் என்று கூறினார்கள். நான் வற்புறுத்த விரும்புவது என்னவென்றால், இந்தத் தீ விபத்துக்கள் கடந்த நான்கு தினங்களாகத் தொடர்ந்து நடந்திருப்பதனால், இந்தச் சபையை மத்தியானம் வரையில் ஒத்திவைத்து, அனுதாபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, மத்தியானத்திற்குமேல் சபை நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தீ விபத்து நடந்த இடத்திலே பல வேலைகள் ஒழுங்காக நடந்துகொண்டிருக்கின்றன. தீ விபத்து நடந்த இடத்திற்கு வெகுதூரத்திற்குப் பின்னாலே இருந்து கொண்டிருப்பவர்கள் சபை நடவடிக்கைகளைத் தள்ளி வைக்க வேண்டியதில்லை. கனம் உறுப்பினர் சொன்னால், மன்றத்தின் நடவடிக்கைகள் 1½ மணிக்கு முடிந்ததும், சபை கலைந்ததும், நாம் எல்லாம் சேர்ந்து தீ விபத்து நடந்த இடத்திற்குச் சென்று இரண்டு மணி நேரத்தைச் செலவழிக்கலாம். அதற்கு உறுப்பினர்கள் தயாராக இருப்பார்களானால், நான் பின் தொடரக் காத்திருக்கிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர்:** ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்த இரு உறுப்பினர்களும் தாங்கள் கூற வேண்டிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நல்ல விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். மேலும், இன்று நடைபெறுகின்ற மானியம் போலீஸ் இலாகா பற்றியது. கனம் உறுப்பினர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்கள் ஏதாவது எஞ்சியிருந்தால், அதை அதில் எடுத்துக்கூற அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கிறேன்.

### (இ) திருவள்ளூர் ஸ்பீட் லீவர் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலைநிறுத்தமும், உண்ணாநோன்பும்.

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி கோவிந்தராஜன் அவர்கள் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் அதில்.

"திருவள்ளூர் ஸ்பீட் லீவர் தொழிலாளர்கள் ஒப்பந்தப்படி அவர்களுக்குச் சேர வேண்டிய கூலி உயர்வு கிடைக்காததால் 200 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதுபற்றியும், திருவள்ளூரில் 3—7—1967 முதல் சங்கக் காரியதரிசி உட்பட பீடித் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்துவருவதைப்பற்றியும் விவாதிக்க." என்று கண்டிருக்கிறது.

இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இந்த மன்ற மரபுப்படி அவ்வளவு முக்கியம் அல்லவென்று நினைக்கிறேன். உண்ணா நோன்பு என்ற காரணத்திற்காக இந்தப் பேரவை ஒத்திவைக்கப் பட மாட்டாது என்பதற்கு இந்த மன்றத்திலே மேற்கோள்கள் இருக்கின்றன. 15—7—1953-ல் சென்னை சுவாமி ஆயில் மில் தொழிலாளர்கள் உண்ணாநோன்பு பற்றி அனுமதி மறுத்ததும், அடுத்து, 6—8—1954-ல் ஒன்றும், 25—11—1954-ல் ஒன்றும் அனுமதி மறுக்கப் பட்டுள்ளன. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### (உ.) அம்பத்தூர், ஊரகாஸ்—டி.வி.எஸ். தொழிற்சாலையில் கதவடைப்பு.

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் 42-வது விதியின் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள். அதில்

"அம்பத்தூர் சமீபம் பாடியிலுள்ள ஊரகாஸ் டி.வி.எஸ். லிமிடெட் தொழிற்சாலையில் வேலை செய்யும், தொழிலாளர்களை, கம்பெனி முதலாளி ரௌடிகளை வைத்துத் தாக்கியதைப்பற்றியும், அது விஷயமாகப் பல முறை புகார் செய்தும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருந்து வருவதைப்பற்றியும், இப்போது மேற்படி தொழிற்சாலையை முதலாளி கதவடைப்புச் செய்துவிட்டு, மேலும் ரௌடிகளைக் கொண்டு தொழிலாளர்களைத் தாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள விஷயத்தைப்பற்றியும் விவாதிக்க." என்று கண்டிருக்கிறது.

கம்பெனி மூடுவதுபற்றி, சபையில் ஒத்திவைப்புக் கேட்டு, 12—12—1952-ல், 24—2—1954-ல் ஆக இப்படிப்பட்ட தீர்மானங்கள் வந்தன. இந்தக் காரணங்களுக்காகக் கொண்டு வரப்பட்ட அந்தத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானத்திற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.



## 3. ஒழுங்குப் பிரச்சினை

### பேரவை நடவடிக்கைக் குறிப்பு நகல் நூலகத்தில் வைக்கப் படாமை.

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் :** அடுத்து, இரண்டு நாட்களுக்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்ட சபை உறுப்பினர்கள் இங்கே பேசுகின்ற பேச்சுக்கள் நூல் நிலையத்திலே வைக்கபட்டுவதில்லை என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். என் கருத்தைப் பின்னால் கூறுகிறேன் என்றேன். அதைப்பற்றிக் கூற விரும்புகின்றேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர்களுடைய பேச்சுக்கள் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக்கம் செய்யப் படுகின்றன. உறுப்பினர்களுடைய பேச்சுக்கும், எடுக்கப் படுகின்ற குறிப்பிற்கும் சில சமயம் மாறுபாடுகள் இருக்கலாம். அவற்றை அப்படியே நூல் நிலையத்தில் வைப்பதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சின் நகல் உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் திருத்தி அவர்களுடைய ஒப்புதலோடு வைக்க வேண்டுமென்ற காரணத்தால் இடையிலே சில நாட்கள் ஆகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திருத்தப் பட்ட பேச்சுக்கள் நூல் நிலையத்தில் வைக்கப்படும் என்ற உறுதியைக் கூறுகிறேன்.

## 4. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் XII— போலீஸ்.

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் :** அடுத்து, 1967–68-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. முதலில் கோரிக்கை எண் XII போலீஸ் மானியம் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XII போலீஸ் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,73,08,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** இப்போது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழியலாம்.

**THIRU T. M. NALLASWAMY:** Sir, to discuss about the conduct of the police towards the public and political parties, I move the following cut motion—

'That the allotment of Rs. 10,73,08,100 under Demand No. XII – Police be reduced by Rs. 100.

**திரு. க. ர. நல்லசிவம் :**
**திரு. செ. பாலசுப்பிரமணியம் :** } துணைத்தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கும் போலீசுக்கும் நல்லுறவு ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XII— போலீஸ் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 10,73,08,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், விவசாயிகள் போராட்டத்தில் முதலாளிகளுக்கு ஆதரவாகப் போலீசார் தலையிடக் கூடாதென்று விவாதிக்க—

"கோரிக்கை எண் XII— போலீஸ் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 10,73,08,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், குடியிருப்போர் ரெண்ட் கண்ட்ரோல் சட்டம், சொத்து சம்பந்தப்பட்ட சிவில் விவகாரத்தில் போலீஸ் தலையிடுவதைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XII போலீஸ் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 10,73,08,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் துறை மானியத்திற்கு இப்போது நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** இந்தச் சபையினுடைய நேரம் அருமையாகப் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக எந்தெந்த மானியத்திற்கு வெட்டுத் தீர்மானம் கொடுப்பதாக இருந்தாலும் முன்கூட்டியே கொடுக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முன்பே அவ்விதம் செய்யாத காரணத்தினால் இப்போது அனுமதிப்பதற்கில்லை. போலீஸ் மானியத்தின் மீது பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு நிரம்ப இருக்கிறது.

**திரு. தோ. மு. நல்லசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்லலாம் . .

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** முதலில் முதலமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் சொல்ல வேண்டியவைகள் எல்லாம் இந்தத் தாளிலே தரப்பட்டிருப்பதாலே உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்க ஆவலாக இருக்கிறேன்.

---

* 104–111-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





* **திரு. தோ. மு. நல்லசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் துறை மானியத்தின் மீது வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டு அதன் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள முன்வருகிறேன். இந்தத் துறையினுடைய அவசியத்திலே யாருக்குமே இரண்டு விதமான கருத்துக்கள் இருக்க முடியாது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இன்றியமையாத இந்தப் போலீஸ் துறையின் சேவைகளை நாம் உணர்ந்திருக்கிறோம். எல்லாச் சந்தர்ப்பங்கள் என்று சொல்லும்பொழுது நல்ல காரியங்களாக இருந்தாலும், மக்களுக்குப் பாதகமான காரியங்களாக இருந்தாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சமுதாயத்தினுடைய, நாட்டினுடைய நலன்களைப் பாதுகாப்பதில் இந்தத் துறை மிகவும் அத்தியாவசியமான துறை. இந்தத் துறை இயங்குவதைப் பொறுத்துத்தான் பலாபலன்கள் இருக்க முடியும். இந்தத் துறை இயங்குவது என்று நான் சொல்லும்பொழுது இந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள், ஊழியர்கள் எல்லாம் அவர்களுடைய பொறுப்புணர்ந்து, கடமையுணர்ச்சியோடு வேலை செய்து வந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும். இந்தத் துறையை இயக்கி வைக்கக்கூடிய முறையிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இயக்கி வைக்கக்கூடிய தன்மையிலே நாட்டு மக்களுக்கு இந்த இலாகாவினால் நன்மைகளும் அதே மாதிரி தீமைகளும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

இந்த இலாகாவானது தவறாக நடந்தால் வேலியே பயிரை மேய்கிறது என்று சொல்வதைப்போல்தான் நாட்டிலே நிலைமை ஏற்பட்டுவிடும். சட்டம் பாதுகாக்கப்படுவது இந்தத் துறையினால்தான் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இந்தச் சட்டங்களுக்கு முரணாக யார் நடந்தாலும் சட்டப்படி உண்டான நடவடிக்கைகளை இந்த இலாகா மேற்கொள்ள வேண்டும். அதில் எந்தவிதமான தாட்சண்யமும் காண்பிக்கப்பட வேண்டியதில்லை என்பதை நான் மட்டும் இப்பொழுது சொல்லவில்லை. இப்பொழுது ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்களும் கடந்த காலத்திலே எதிர்க்கட்சித் தரப்பிலே இருந்த பொழுது சுட்டிக்காட்டினார்கள். தவறு எங்கு நடந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய தன்மைதான் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அப்படிச் சுட்டிக்காட்டியவர்கள் இன்றைக்கு ஆட்சியிலே இருக்கின்ற நேரத்திலே இலாகாவினர் சிற்சில இடங்களிலே கடந்த இரண்டு மூன்று மாதங்களிலே தவறுதலாக நடந்து கொண்டதாகச் சில செய்திகள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. எல்லாப் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்திருப்பதைப் பார்க்கிறோம். தேனிப் பகுதியில் வெங்கடாசலபுரம் என்ற ஊரில் காங்கிரஸ்காரர்கள் கையில் விலங்கு மாட்டப்பட்டு அவர்களைத் தெருவழியாக அழைத்துச் சென்றார்கள் என்ற செய்தியை நான் பத்திரிகையிலே—பூரா விவரங்களும் தெரியாது, மேலெழுந்த வாரியாக நான் பார்த்ததைச் சொல்கிறேன். அதே மாதிரி சேலத்திலே காங்கிரஸ்காரர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுகின்றன. போலீஸ் துறை

யினர் ஆளுங்கட்சிக்குச் சாதகமாக இருக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வரவில்லையென்றாலும், நம்பகமான செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது. அதே மாதிரி என்னுடைய தொகுதியிலே கூட ஒரு காங்கிரஸ் ஊழியர் வீட்டில் அன்றாடம் சமூக விரோத எண்ணங் கொண்ட ஒருவர், வீட்டிலே தாய் மார்கள் இருக்கிறார்கள் என்று கூடப் பார்க்காமல் கண்ட படி திட்டுவதும், இரவு நேரங்களில் கதவைத் தட்டுவது மாக இருப்பதால் இதைப்பற்றி ஊரிலுள்ள முக்கியஸ்தர்கள் போலீசாருக்குத் தகவல்கள் கொடுத்தும் இன்னும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் உள்ளூர் வாசி என்ற முறையிலே, பாதிக்கப்படுபவர்கள் காங்கிரஸ் காரர்கள் என்ற முறையிலே, போலீஸ் துறையினர் பாரபட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்த நிலை போக்கப்பட வேண்டும். நாம் எல்லோரும் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள வர்கள். இந்த நிலை நீடிக்கப்படுமானால் ஜனநாயக அமைப்பே பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

இந்தத் துறையை இயக்கி வைக்கக் கூடிய முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். இந்தப் போக்கு இருக்கக் கூடாது, ஆளுங்கட்சிக்கு வேண்டிய வர்கள் என்பதால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்ப தற்குத் தயக்கம் காட்டக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நான் இந்தச் சபைக்கும் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் துறையிலே இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் இந்தத் துறையில் தலையிடாமல் இருந்தால்தான் நல்லது. சட்ட மன்ற உறுப்பினர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு கோட் ஆப் காண்டக்ட் ஏற்படுத்திக் கொண்டால் கூட நல்லது என்று கருதுகிறேன். இந்தத் துறை யின் அவசியத்தைப்பற்றி எவருக்கும் இரண்டுவிதமான கருத்துக் கள் இருக்க முடியாது என்பதை நான் முன்பே குறிப்பிட்டேன். கடந்த மூன்று மாத காலத்தில் ஆளுங்கட்சிக்கு எதிரான கோரிக் கைகள், அவை நியாயமானவையாக இருந்தாலும்கூட புறக்கணிக் கப்படுகின்றன. நியாயங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, இந்தத் துறையினரால் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மற்றொரு விஷயத்தைப்பற்றியும் சொல்ல விரும்புகிறேன். இந்த இலாகாவினுடைய அவசியம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்து இருக்கிறது. இந்த இலாகாவி னுடைய தலையாய கடமை சட்டம், ஒழுங்கு இவற்றை நிலை நிறுத்துவதோடுகூட, குற்றங்கள் அதிகரித்து வருவதையும் தடுக்க வேண்டும். குற்றங்கள் தடுக்கப்பட வேண்டுமென்பது இந்தத் துறையின் முக்கியமான பணி என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 1963-ஆம் ஆண்டில் நீதிமன்ற வரம்புக்குட்பட்ட குற்றங்கள், தனித்தன்மை வாய்ந்ததும் உள்நாட்டு சம்பந்தப் பட்ட சட்டங்கள், நியூசன்ஸ் போன்ற கேஸ்கள் அண்டர்



செக்ஷன்ஸ் ஆஃப் இந்தியன் பீனல் கோட் என்றெல்லாம் இருக்கிறதே அவை நீங்கலாக 1963-ஆம் ஆண்டிலே 46,934 குற்றங்கள்; 1964-ஆம் ஆண்டிலே 48,974 குற்றங்கள்; 1965-ஆம் ஆண்டிலே 49,151 குற்றங்கள்; 1966-ஆம் ஆண்டில் 56,836 குற்றங் கள் 1965-66-க்கும் இடையே கிட்டத்தட்ட ஏழாயிரம் குற்றங்கள் அதிகமாக வளர்ந்திருக்கக்கூடிய நிலைமை அவர்கள் கொடுத்துள்ள புள்ளிவிவரங்கள் வாயிலாக நாம் புரிந்துகொள்கிறோம். இப்படி 1965-க்கும் 1966-க்கும் இடையிலே கிட்டத்தட்ட ஏழாயிரம் குற்றங் கள் அதிகரித்திருக்கக்கூடிய நிலையில் துப்பு துலக்குவதிலேகூட கணிசமான அளவுக்கு அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்ப தையும் பார்க்கிறோம். 1963-ஆம் ஆண்டில் 55.3 சத விகிதம்; 1964-ஆம் ஆண்டில் 55.4 சத விகிதம்; 1965-ஆம் ஆண்டில் 56.1 சத விகிதம்; 1966-ஆம் ஆண்டில் 66.1 சத விகிதம் என்ற அளவுக்குத் துப்பு துலக்குவதிலேயும் அதிகப்படியான முன்னேற்றம் கண்டிருக் கிறார்கள். இந்த நிலையில் இன்றைக்கு இந்த இலாகாவில் பதவி கள் நீக்கப்படுவது, அதற்காக உத்திரவிடுவது சரிதானா என்பதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குற்றங்கள் அதிகரித்துக்கொண்டு வருவதும், துப்புத் துலக்கு வதிலே வளர்ச்சி காணுகின்ற நிலை இருக்கும்பொழுது அங்கே அதிகாரிகள், ஊழியர்கள் அதிகமாகத் தேவைப்படுகிற நிலையில் சிக்கனத்தை ஒட்டி பதவிகளை எடுப்பது, ஆட்குறைப்புச் செய்வது அவசியந்தானா என்பதை யோசிக்க வேண்டும். இதையும் ஆலோசனை செய்து பார்த்து, போலீஸ் துறையினர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தேவைப்படுகிறார்கள் என்பதையும் சேர்த்து ஆலோசிக்க வேண்டும். ஒரு கிளர்ச்சி ஏற்படுகிறது என்றால், எதிர்பார்த்த சந்தர்ப்பத்தில் நடப்பதில்லை; எப்போது வரும் என்ன மாதிரி ஆட்கள் தேவைப்படும் என்றெல்லாம் நாம் யூகிக்க முடியாது என்பதை கடந்த கால நிகழ்ச்சிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. 1963-லிருந்து 1966 வரைக்கும் படிப்படியாக குற்றங்கள் அதிகப்பட்டுக்கொண்டு வருகிற நேரத்தில் பதவி நீக்கம் ஆட்குறைப்புச் செய்வது அவசியந் தானா என்பதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் காரணங்களுக்காக ஆளுங்கட்சிக்கு புறம்பாக உடையவர் கள் என்பதற்காகப் பாரபட்சம் காட்டுவதோ அல்லது ஆளுங் கட்சிக்கு வேண்டியவர்கள் என்பதற்காக நடவடிக்கை எடுப்ப தற்குத் தயக்கம் காட்டுவதோ முறையானதல்ல என்பதைச் சொல்லிக்கொண்டு நான் இந்த வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. நா. கிருட்டிணன்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் போலீஸ் மானியத்தை ஆதரிக்கின்ற வகையில் பேச எனக்கு வாய்ப்புத் தந்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். போலீஸ் துறை நாட்டுக்கு எந்த அளவிலே பயன்படப் போகிறது, பயன்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் வகையிலேதான் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு 'உங்கள் நண்பன்' என்ற விளக்கப் படம் காட்டப்பட்டது. அந்த வகையில்

போலீஸ் துறையினர் நாட்டு மக்களுக்கு, நாட்டு மக்கள் நல் வாழ்வு வாழ வேண்டுமென்பதற்கு எந்தெந்த வகையில் பயன்பட வேண்டுமென்பதைப் போலீஸ் துறையினர் உணர்ந்து நடந்து கொண்டு வருகிறார்கள், நடந்து கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் துறையிலே தியணைப்புப் படை என்று தனித் துறை இருந்து வருகிறது. அந்தத் துறையின் மூலம் முக்கியமான நகரங்களில் எல்லாம் தீ அணைப்புப் படையை நிறுவி தீ அணைப் புப் பணியைச் செவ்வனே செய்து வருவதாகக் கூறப்படுகிறது. வருங்காலத்தில் எந்தெந்த நகரங்களில் மேற்கொண்டு தீயணைப்புப் படையை நிறுவ வேண்டுமென்பதற்காக முறை வைப்புப் பட்டியல் ஒன்றை இந்த அரசு வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. 'வருமுன் காக்க' என்பதற்கு இணங்க எல்லா நகரங் களிலும் ஒவ்வொரு தீ அணைப்புப் படையை முறை வைப்புப் பட்டியலுக்கு மாறாக உடனடியாக அமைத்துத் தந்தால் தீ அணைப்பு வேலையைச் செவ்வனே செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிச்சைக்காரர்கள் தொல்லை பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. போலீஸ் நிறுவனத்தார் மூலம் எந்த அளவுக்கு இது நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனைப்படக்கூடிய நிலைதான் இருக்கிறது என்று கூறிக் கொள் கிறேன். எங்கள் நகரத்தில் பள்ளி முற்றங்களிலும், ரயிலடியிலும் வந்து பார்த்தால் பிச்சைக்காரர் தொல்லை நாட்டிலே எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் காலையில் அங்கு செல்லும்போதுகூட அந்தப் பிச்சைக்காரர்கள், குஷ்டரோகம் பிடித்தவர்கள் அந்த வாயிற் படியிலே அமர்ந்திருக்கிறார்கள். அவர்களைத் தாண்டிப் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லும் நிலை இருக்கிறது. போலீஸ் துறை இதை விரைவில் நீக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கு விஷயத்திலே போலீஸ் துறையினர் எந்த அளவுக்கு நாட்டு மக்களிடத்திலே நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அதைச் சொல்லுகின்றபோது, மதுவிலக்குத் துறையிலே ஈடுபட் டிருக்கும் போலீஸ் நிறுவனத்தார் கிராமங்களுக்குச் சென்று வேட்டையாடுகின்ற நேரத்தில் அவர்கள் மனிதர்கள் என்ற நினைவே இல்லாமல் வேட்டையாடுகிறார்கள். குறிப்பாக, வீட்டுக் குள் நுழைந்து சட்டி பானைகள் எல்லாம் உருட்டி உடைக்கிறார்கள். இந்த நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும். இப்போது நல் லாட்சியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்ற நிலையில் இதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மானால் வேடல் என்ற கிராமத்தில் போலீசார் சென்று குடி மக்களை விரட்டியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அந்த ஊர்ப் பள்ளி ஆசிரியர் போலீஸ்காரர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார். போலீஸ்காரர்கள் 'நீ என்ன குடிகாரர்களுக்கு ஏஜெண்டா?'





என்று அவரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். இந்த முறை களை அகற்றி சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் நகரில் இருந்து 10 மைல் தொலைவு வரை எந்தவித போலீஸ் நிலையமும் இல்லை. பத்தாவது மைலில் உள்ள தொடூர், நீர்வளூர் கிராமங்களில் கலவரம் ஏற்பட்டால் காஞ்சி நகரத்தி லுள்ள தாலுகா போலீஸ் நிலையத்திலிருந்து போலீஸ் செல்ல வேண்டியிருக்கிறது. காஞ்சிபுரத்திலுள்ள கம்மவார்பாளையம், கோவிந்தவாடி கிராமங்களுக்குப் போலீஸ் செல்லவேண்டுமென்றால் 13 மைல் தொலைவிலுள்ள பாலுச்செட்டிசத்திரத்தில் இருந்து போலீஸ் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த நிலையைத் தவிர்க்க காஞ்சிபுரத்திலிருந்து 5-வது மைலில் உள்ள ராஜாகுளம், 8-வது மைலில் உள்ள கம்மவார்பாளையம் ஆகிய இடங்களில் போலீஸ் அவுட் போஸ்டாவது நிறுவித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய குறைகளைச் சுட்டிக்காட்டிய நான் போலீசாருக் குள்ள குறைகளைச் சுட்டிக்காட்டத் தவறினால் என் கடமையில் இருந்து தவறியவனாவேன். போலீஸ்காரர்களுடைய சம்பளம் 65—90 என்று வைக்கப்பட்டிருக்கிறது. ஹெட் கான்ஸ்டபிள் சம்பளம் 85—105 என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதே துறை யில் லஸ்கர் என்ற துறையினர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூட 70—95 ரூபாய் என்று வைக்கப்பட்டிருக்கிறது; ஆனால் போலீஸ்காரர்களுக்கு 65—90 என்று வைத்திருக்கிறார்கள். இந்தப் பஞ்ச காலத்தில் விலைவாசிகள் அதிகவிலையாக இருக்கும் இந்த நேரத்தில் ஒரு போலீஸ்காரர் 65 ரூபாய் சம்பளத்தை வைத்துக் கொண்டு ஆறு குழந்தைகளோடு, மனைவி மக்களோடு எப்படி வாழ முடியும் என்பதை உணர்ந்து பார்த்து இந்த அரசு அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து சம்பள விகிதங்களை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையில் இருக்கும் போலீஸ்காரர்களுடைய கஷ்டங்களை இன்று ஆட்சியை ஏற்றுக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள வர்கள் நன்றாக உணர்ந்துள்ளார்கள் என்பதற்கு உதாரணம், நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கிற கலைஞர் அவர்கள் எழுதி நடித்த "உதய சூரியன்" நாடகத்தில் போலீஸ்காரர்களுடைய குறைகளைத் தாலாட்டுப் பாட்டு மூலம் கூறியிருப்பதே சான்றாகும். அந்த அளவுக்கு அவர்களுடைய குறைகளை நன்றாக உணர்ந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றி ருக்கிறார்கள். ஆகவே, இந்த நாட்டுக்கு நல்லது வரும்; எல்லோரும் நல்வாழ்வு பெறுவார்கள் என்ற உறுதியை இந்த நேரத்திலே கூறி இந்த மானியத்தை ஆதரித்து எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்தப் போலீஸ் மானியத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். போலீஸ் இலாகா சமுதாயத்திற்குச் செய்கிற சேவையை நான் பாராட்டுகிறேன்.

துணைச் சபாநாயகர் அவர்கள் தீ விபத்து பற்றிய ஒத்திவைப்புப் பிரேரணை எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அந்த தீ விபத்தைப் பற்றி மானியத்தின் போது பேசலாம் என்று சொன்னார்கள். கடந்த நான்கு நாட்களாக பெருவாரியான தீ விபத்துக்கள் ஏற்பட்டு பொதுஜனங்களிடையே பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. சென்னையில் அடிக்கடி இந்த மாதிரி தீ விபத்துக்கள் நடந்து வருகின்றன. தகுந்த முறையில் இதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லும்போது முதலமைச்சர் அவர்கள் இதிலே சதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். சதியின் காரணமாகத்தான் இந்த விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றால் சதி செய்தவர்கள் எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் தண்டிக்கப் படுவார்கள் என்றும் கூறினார்கள். என்னைப் பொருத்தவரை இதிலே நிச்சயமாகச் சதி இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தினமும் தீ பிடிக்கப் போகிறது என்று மக்கள் சாமான்களை எல்லாம் வெளியிலே போட்டுவிட்டு நிலையற்று இருந்து கொண்டிருப்பதால் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும் ஐ.ஜி. அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் பத்து பதினைந்து நாட்களாகவே திருடர்கள் பயம் அதிகமாக இருக்கிறது. 3,000 திருடர்கள் வெளியிலே இருப்பதாகப் பத்திரிகை மூலம் பார்த்தேன். என்னுடைய நண்பர் ஒருவர் கோடம்பாக்கத்தில் இருக்கிறார். மாலை ஆறு மணிக்கு மேல் கணவன் வரவில்லையென்றால் பயமாக இருக்கிறது என்று அவருடைய மனைவி கூறுகிறார்கள். பண்ட பாத்திரங்களை
மு. ப. 10-30 யெல்லாம் ரூம்களில் போட்டு பெரிய பெரிய பூட்டாகப் பூட்டி வைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இரவில் 9, 10 மணிக்கு மேல் ஜனங்கள் நடக்க அஞ்சுகிறார்கள். மாணவிகள் சங்கிலிகள் அறுக்கப்படுகின்றன. இவையெல்லாம் பத்திரிகையில் வந்த செய்தியாகும். இவ்வாறு பொதுமக்களிடையே நிலவுகின்ற பீதியை அகற்றுகின்ற முறையில் போலீஸ் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வருகிறவர்கள்மீது சந்தேகக் கேஸ்கள் போட்டு தண்டிக்கப்படுகிற நிலை இருக்கிறது. அவர்களைப் போலீஸ் ஸ்டேஷன்களில் இரண்டு மூன்று நாட்கள் விசாரணை இல்லாமல் காவலில் வைத்திருக்கக்கூடிய நிலை இருக்கிறது. கிராமங்களில் இருந்து வருகிறவர்கள் இரவில் சினிமாவுக்குப் போய்விட்டோ அல்லது இரவு 3 மணி ரயிலைப் பிடிப்பதற்கோ சென்றாலும் அவர்களைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த மாதிரி சந்தேகப்படும் படியான கேஸ்களைத் தவிர்க்க வழி செய்ய வேண்டும். இவ்வாறு சந்தேகக் கேஸ்கள் போடப்படுவதால் பெரும்பாலான விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நமது முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த அறிக்கையில் மதுவிலக்கு சம்பந்தமாகக் கூறியிருக்





கிறார்கள். அதில் கிட்டத்தட்ட சென்ற ஆண்டை விட 15.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கிட்டத்தட்ட 1,60,029 கேஸ்கள் பிடிபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனது சொந்தக் கருத்தைச் சொல்கிறேன். மதுவிலக்கு வெற்றிகரமாக நடந்திருக்கிறதா என்று சொன்னால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அத் திட்டத்திற்குத் தோல்விதான் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களில் மதுவிலக்குத் திட்டத்தை எந்த அளவிற்கு மக்கள் வரவேற்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக மதுவிலக்கைப் பொறுத்தவரையில் முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டத்தை கண்டு பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் குடிப்பதால் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. குடிசை வாழ் மக்கள்தான் கள்ளச் சாராயம் சம்பந்தமாகப் பிடிக்கப்படுகிறார்களே தவிர பெரிய மனிதர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். எப்படித் தப்பித்துச் செல்கிறார்கள் என்பதை நான் சொல்வதற்கில்லை. மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்துள்ளது. அதற்காகச் செலவு செய்யப்படும் பணம் விரயமாக்கப்படுகிறது. சிறைகளில்கூட பெரும்பாலானவர்கள் மதுவிலக்குக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு அவர்களுக்குச் சாப்பாடு போடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மது விலக்கை ரத்து செய்துவிடவேண்டும். போலீஸ் இலாகாவிடமிருந்து அதை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் ஏதாவது குற்றங்கள் நடந்தால் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அந்தக் கிராமத்தில் உள்ள அத்தனை பேர்களையும் ஸ்டேஷனுக்கு வாவேண்டுமென்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட ஐம்பது அல்லது நூறு பேர்கள் ஸ்டேஷனுக்குப் போகிறார்கள். அப்படி அவர்களை வரச் சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் கோர்ட்டுக்குச் சென்று விடுகிறார்கள். இரவு 11 மணிக்கு வருகிறார். அதுவரை அந்தக் கிராம மக்கள் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கிராமங்களில் ஒரு குற்றம் நடந்தால் சப்-இன்ஸ்பெக்டரோ அல்லது சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ கிராமத்திற்குச் சென்று விசாரணை நடத்தி யார் குற்றம் செய்திருக்கிறார்களோ அவர்களை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று தக்க நவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எல்லா இலாகாக்களிலும் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். ஆனால் சில பதவிகளிலிருந்து ஓய்வுபெற்றவுடனே மீண்டும் அவர்களுக்குப் பதவி நீடிப்பு கொடுக்கப்படுகிறது. எந்த இலாகாவாக இருந்தாலும் சரி, அது போலீஸ் துறையாக இருந்தாலும் சரி, அல்லது விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி ஓய்வுபெற்றவர்களுக்கு மீண்டும் பதவி நீடிப்பு கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற தடவை எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் போலீஸ் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும், அவர்களுக்குச் சம்பளம்

போதவில்லை, ஆகவே அவர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் முன்பிருந்த பேரவையின் எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதை முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து தற்போதுள்ள விலைவாசி உயர்விற்கேற்ப அவர்கள் சம்பள விகிதங்களை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்களுக்கு மூன்றாம் ஐந்தாண்டு திட்டத்தில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்பது திட்டம். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. கூடுமான வரையில் போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க முதல் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டாய நெல் கொள்முதல் பொறுத்து, நெல் கடத்துவது சம்பந்தமாக அவர்களைப் பிடிக்க ஒரு பிரிவு இருக்கிறது. நெல்லை லாரிகளில் கொண்டு செல்பவர்களைப் பிடிப்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால், சாதாரணமாக செங்கல்பட்டிலிருந்து சென்னைக்குப் பத்து படி அரிசி கொண்டு வருகிறவர்கள் பிடிக்கப்படுகிறார்கள். செகரட்டேரியட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். உணவுத் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்க கிட்டத்தட்ட 250 பேர்கள் தங்கள் பிள்ளைகளோடு அங்கு வந்து படுத்துக் கொண்டிருந்தார்கள். நான் ஏன் இங்கு படுத்திருக்கிறீர்கள் என்று கேட்டவுடன் ஐந்து படி பத்து படி அரிசி கொண்டு வந்தோம். எங்களைப் பிடித்து விட்டார்கள். எங்களுக்கு வேறு வழியில்லாததால் படுத்திருக்கிறோம் என்று சொன்னவுடன், உணவு அமைச்சருக்குத் தர்ம சங்கடமாகப் போய் அவர்களைப் போகச் சொல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நான்கு படி அரிசியைக் கொண்டு வந்து சென்னையில் விற்று வயிற்றுப் பிழைப்பு நடத்தும் சூழ்நிலையில் உள்ளவர்களை விட்டு விட்டு லாரிகளில் கடத்திச் செல்லுகிறவர்களைப் பிடித்து தண்டிக்க வேண்டும். லாரியையும் பறிமுதல் செய்ய வேண்டும்.

போலீஸ் துறைக்கும் பொது மக்களுக்கும் ஒரு நல்ல சுமுகமான நிலையை ஏற்படுத்திக் கொடுக்க இந்தப் புதிய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு குற்றம் நடந்திருந்தால் உடனே போலீஸ் அதிகாரிகள் மக்களை அணுகி உண்மையில் யார் குற்றம் செய்திருக்கிறார்கள், எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையெல்லாம் அந்தந்த பொது மக்களை கணிசமான அளவிற்கு அணுகி அவர்களிடம் அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் அவர்களிடம் அன்போடு நாங்கள் என்ன செய்ய வேண்டும், யார் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று கேட்டுச் செய்யக்கூடிய ஒரு நல்முறையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை:** சட்டமன்ற அவைத் தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியத்தின்மீது என் நல்லெண்ணத்தைத் தெரிவிக்கிற அதே நேரத்தில் இந்த துறையினர்மீது இன்று பொறுப் பேற்றுள்ள ஆட்சியினர் எத்தகைய நல்லெண்ணத்தோடு இருக்கிறார்கள் என்பதையும் இந்தத் துறையினருக்கு எத்தகைய



சலுகைகள் நிச்சயமாக கிடைக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் எனது விளக்கங்களை சுருக்கமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள் ஒருவரை— அவர் பெயரைக் கூட குறிப்பிட முடியாத அளவிற்கு—யாரோ ஒருவரை பட்டப்பகலில் கைவிலங்கிட்டு பழி வாங்கக்கூடிய நிலையில் காவல் துறையினர் நடந்து கொண்டதாக இங்கு அவர்கள் ஆத்திரப்பட்டார்கள். ஆட்சிப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்புயர்வற்ற தலைவர் எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டு மாதங்கள் மூன்று கூட ஆகவில்லை. இதற்குள்ளாக நீண்ட நெடுங்காலமாக அதிகாரத்தின் உச்சியில் இருந்து கொண்டு காவல் துறையா, காங்கிரஸின் பாகமா என்று பிரித்துக் காட்டமுடியாத வகையில் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட தன்மையில் இருந்து கொண்டு பணி புரிய வேண்டிய தூய படையினரின் மேல் ஒரு கறையை ஏற்படுத்தி இன்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எங்கள் ஆட்சி காலத்தில் ஏதோ அவர்களுக்கு பெரிய அநீதி இழைப்பதுபோல் குற்றச்சாட்டுகளை இங்கு எடுத்துப் பார்த்தார்கள். அவர்கள் ஆட்சியில் நடந்த கொடுமைகளைப் பற்றியெல்லாம் உள்ள பட்டியலை எடுத்துப் படிக்கவேண்டுமென்று சொன்னால் இங்கு சட்டமன்ற அவைத் தலைவர் அவர்கள் என்னை அமர்த்திவிடுவார்கள், நேரம் தரமாட்டார்கள்.

அதுமட்டுமல்ல. எங்கள் இதயநாடு என்று கருதப்படுகிற எங்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களை எந்த அளவிற்கு அவர்கள் ஆட்சி காலத்தில் போலீசை ஏவி பழிவாங்கியது என்ற பட்டியலை நான் படித்தால் உண்மையில் நீங்கள் அயர்ந்து போவீர்கள் என்பதால் அதைப்பற்றி நான் இப்போது விளக்கம் கூறப் பிரியப்படவில்லை. எங்களை எல்லாம் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடத்தியதைப் போல் அவர்களை நடத்த வேண்டுமென்று தமிழக முதல் அமைச்சரான எங்கள் அண்ணாவிற்கு எண்ணம் இருக்குமானால் நிச்சயமாக அத்தகைய வகையில் ஈடுபடுவார்கள். ஆனால் குற்றத்தைப் பொறுத்துக் கொள்கிற உயர்ந்த பண்பைக் கொண்டுள்ளவர் எங்கள் அண்ணா அவர்கள்,

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற பாவைத் தெரிந்து கொண்டவர் எங்கள் அண்ணா, ஆதலால் நல்லது செய்து உங்களை நாண வைக்க வேண்டுமென்ற உயர்ந்த பண்போடு இந்த அரசு இயங்குகிறது என்பதை நான் எடுத்துக் காட்டவிரும்புகிறேன். 1938-ல் இருந்து 1964-ம் ஆண்டு வரை எங்களைக் கைது செய்திருக்கிறார்கள் அவர்கள் ஆட்சிக் காலத்தில். அவர்கள் ஆட்சியில் போலீஸ்காரர்கள் எவ்வளவு வைபோகமாக எங்களை அழைத்துச் சென்றார்கள். எப்படி கழுத்தைப் பிடித்துத் தள்ளியிருக்கிறார்கள், எப்படி விலங்கு போட்டு அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். தமிழக முதல் அமைச்சராக இன்று பொறுப் பேற்றிருக்கிற எங்கள் மாபெரும் தலைவர் அவர்களை உங்கள் ஆட்சிக்காலத்தில் காவல் துறைக்கு

அழைத்துச் சென்ற பிறகு கூட கருணை உள்ளத்தோடு நடத்துகிற அளவிற்கு காவல்துறையினரை அவர்கள் வைக்கவில்லை, உங்கள் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நீங்கள் அவர்களை வழி நடத்திச் சென்றிருக்கிறீர்கள்.

ஒன்று நான் பணிவோடு தமிழக முதல் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் அமைச்சர் அண்ணா அவர்களே, உங்கள் நல்லாட்சியில் காவல் துறையில் அடித்தளத்தில் உள்ள அத்தனை பேர்களும், அத்தனை குடும்பங்களும் இன்று உங்களை வாழ்த்துகிறார்கள். நீண்ட நாளைய அவர்களது எண்ணம் ஈடேறிவிட்டது என்று பாராட்டுகிறார்கள். அவர்களை இவ்வளவு காலம் நல்லமுறையில் செயல்படவிடாமல் ஒரு கட்சி ஆட்சிக்கு உட்பட்ட தன்மையில் அவர்களை ஆட்டிப்படைக்கிற தேவதைகளாக காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸ் சார்பில் உள்ள அமைச்சர்களும் ஆட்டி வைத்த கொடுமையிலிருந்து அவர்களுக்கு இன்று தாங்கள் விடுதலை தந்திருக்கிறீர்கள். இதற்கு முன்பு அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால், ஒரு பாதையை நோக்கி வருகிறார் என்றால், அவர்கள் மாலைப் பொழுதில் வருகிறார்கள் என்றால் காலை நேரத்திலிருந்தே கடுகடுக்கிற வெய்யிலில் ஒவ்வொரு பர்லாங்கிற்கு ஒருவர் காவல் நிற்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று எங்கள் அண்ணா அவர்களை முதல் அமைச்சராக கொண்டுள்ள இந்த அரசில் அவர்களுக்கு அந்தக் குறையில்லை. அந்த ஒன்றுக்காகவே அந்த உள்ளங்கள் இந்த அரசைப் பாராட்டுகின்றன; —வாழ்த்துகின்றன. அவர்கள் எந்த நேரத்திலும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பணிக்குத் தயாராக இருக்கவேண்டும் என்ற பொது விதி இருந்தாலும் கூட, 'உண்மையாகக் குழந்தை-குட்டிகளோடு அமர்ந்து பேசி அளவளாவ இந்தச் சர்க்கார் ஏற்பட்டாவ பிறகுதான் வாய்ப்பே கிடைத்திருக்கிறது. எந்த நேரத்தில், எப்போது, யார் வந்து எழுப்புவார்களோ, எங்கே செல்ல வேண்டுமோ, முன்னேற்றக் கழகத்தினரை எங்கெங்கே விரட்டியடிக்க வேண்டுமோ என்று கலங்கிக் கொண்டிருந்த அந்தத் துறையினர்—காவல் படையினர்—அடித்தளத்தில் இருக்கிற கான்ஸ்டபிள்கள், ஜவான்கள்—இன்றைய தினம் தங்கள் கடமையைச் செய்த பிறகு மன நிறைவோடு தங்கள் இல்லம் வருகிறார்கள். அந்த நிலையிலே கறையற்ற ஸ்தாபனமாக காவல் துறை இருக்க வேண்டும் என்று இதே மன்றத்தில் போலீஸ் மானியத்தில் எங்களுடைய ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய போது நானே கேட்டிருக்கிறேன், பார்வையாளர்களுக்கான இடத்திலிருந்து. "ஐயா! தமிழகத்துப் போலீஸ்காரர்கள் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தன்னிகரற்ற ஸ்தாபனமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்—கறையற்ற ஸ்தாபனமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு இயங்கிக் கொண்டிருந்தார்கள். பழி வாங்கப்பட்ட தன்மையில் ஆக்கப்பட்ட மக்களுக்கு—பரிதாபத்துக்குரிய மக்களுக்கு—நியாயம் வழங்க வேண்டிய அந்தத் துறையை நீங்கள் கட்சிக் கண்கொண்டு, கட்சி ஸ்தாபனமாக—கறையுள்ள ஸ்தாபனமாக—ஆக்கிவிட்டீர்கள். அந்தக்கொடுமையிலிருந்து விதி விலக்கு அளிக்க





வேண்டும்" என்ற சூளுரையை இதே மன்றத்தில் உரைத்தார்கள். நீங்கள் செய்ததைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தினர், சாதாரண உறுப்பினர் கூட, நிச்சயமாகச் செய்ய மாட்டோம், செய்ய மாட்டோம், செய்யமாட்டோம் என்று பன்னிப் பன்னிக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் கடம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் என்றாலும், நான் சார்ந்திருக்கிற கழகத்தின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செங்கற்பட்டு மாவட்டத்தின் செயலாளர் என்ற முறையில் பல காரியங்களிலே நிச்சயமாக ஈடுபட வேண்டிய பொறுப்பு உள்ளவன் என்றாலும், இது நாள் வரையிலும் ஒரு காவல் துறைக்குச் செல்லவில்லை என்றால், எங்கள் தன்மை பற்றி, எங்கள் பண்பு பற்றி, எதிர்க் கட்சி உறுப்பினர்களாகிய காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் அவர்களுடைய அதிகாரத்திற்குள்ளே ஊடுருவல் செய்து அவர்களை நீதி வழங்க விடாமல் முறை மாற்றத்தில் இழுத்துச் சென்ற எண்ணிக்கை, எழுகிற தகவல்கள், எண்ணற்று இருக்கின்றன. ஆனால் நாங்கள் அந்தத் தவறைச் செய்ய மாட்டோம். கட்சிக் கூட்டத்தில் தமிழகத்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் 'எந்த ஒரு காரியத்திற்காகவும், நியாயம் தவறி எந்தத் துறையினரிடத்திலும் செல்லக் கூடாது. அப்படிச் செய்வது என்னை அவமதிப்பு செய்வது ஆகும்' என்ற ஆணையை இட்டிருக்கிற காரணத்தினாலும், நாங்கள் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுகிற தொண்டர்களானபடியாலும், அவர்களுடைய கருத்துக்குச் சிறிதும் அப்பழுக்கு ஏற்படாத வகையில். அந்தத் துறைகள் இயல்பாக இயங்கும் வகையில் நிச்சயமாக இருப்போம் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

காவல் துறையினருக்கு உங்கள் காலத்தில் என்னென்ன சாதித்திருக்கிறீர்கள் என்பது எங்களுக்கு தெரியும். எங்களை அடித்தால், அடித்ததற்காக மூன்று ரூபாய் கூட்டிக் கொடுத்தும், எங்களை உதைத்தால், உதைத்ததற்காக இரண்டு ரூபாய்கள் கூட்டிக் கொடுத்தும் இருக்கிறீர்கள். அதைத் தவிர உங்கள் ஆட்சி காலத்தில் உருப்படியாக 75 ரூபாய் சம்பளம் பெறுகிற கான்ஸ்டபிளுக்கு என்ன கிடைக்கிறது என்று நானும் பார்த்தேன்—அதைப் பற்றிய விவரம் எனக்கு இப்போதுதான் வந்தது—உண்மையாகவே 47 ரூபாய் விலைவாசி உயர்வுப்படி என்று கொடுத்திருக்கிறீர்கள். எந்த வகையிலே அவர்களுடைய வாழ்க்கை வசதியுள்ளதாக அமையும்? ஒரு லிட்டர் உளுத்தம் பருப்பு ரூ. 2.20-க்கு எங்கள் ஊரிலே விற்கிறது. இந்த நிலையிலே ஒவ்வொரு பருப்பின் விலையும், அதிக விலையாக விற்கிறது. இந்த மாதிரி விலைவாசிகள் உயர்வு பெற்றிருக்கிற நேரத்தில், நீங்கள் கொடுத்திருக்கிற விலை உயர்வு படி 47 ரூபாய்.

அதைப்போலவே, நீங்கள் ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்கிற, சம்பள உயர்வும் குன்றவு. ஒரு கான்ஸ்டபிளுக்குக் கொடுத்தீர்கள், ஒரு ஆண்டுக்கு சட்டை இரண்டு, ட்ரௌசர் இரண்டு. எப்படி

முடியும் என்று கேட்கிறேன். கொஞ்சம் ஏதாவது தவறுதலாக இருந்தால், சரியான முறையில் இல்லை என்று சொன்னால்; சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரிகள் ஃபைன் கொடுக்கிறார்கள். இந்தக் கொடுமைகளுக் கெல்லாம் அவர்கள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குறைகளைப் போக்கத் தமிழக அரசு நிச்சயமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டு ஒன்றுக்கு அவர்களுக்குப் பூட்ஸ் ஒன்றே ஒன்று கொடுக்கிறார்கள். ஒரு ஜதை பூட்ஸ் உங்கள் ஆட்சிக் காலத்தில் கொடுத்தீர்களே, இந்த அளவுக்கு அவர்களை ஓட ஓட விரட்டினீர்களே அது எந்த அளவுக்குத் தாங்கும்? அடுத்து அடுத்து அதைத் தைப்பதற்கு என்ற செலவு ஆகியிருக்கும்? இந்தக் குறைகளைப் போக்கத் தமிழக அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சென்னை மாவட்டத் தலைமை காவல் துறையிலிருந்து எனது பணிவான வேண்டுகோளை இந்த நேரத்தில் வைக்க ஆசைப்படுகிறேன்.

தமிழகத்தில் இருக்கிற எல்லாக் காவல் துறையினரும் ஓரளவுக்குத் தங்கள் நிலைகளிலிருந்து மாறி நீதியின் வழியில் நடக்கிறார்கள் என்பது பொதுப் படையான உண்மையாக இருந்தாலும், சென்னை நகாம் மட்டும் அதற்குக் கொஞ்சம் விதிவிலக்காக இருக்கிறது. ஆபாச சுவரொட்டிகள் நீக்கப்பட வேண்டும் என்று கூறியான பிறகும், நகரத்தில் உள்ள மாவட்ட போலீஸ் துறையினர் ஏன் தயக்கம் கொள்ளுகிறார்களோ தெரியவில்லை. அந்தக் களங்கத்தைப் போக்க சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை முழு அளவில், மன நிறைவோடு ஆதரிக்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எ. பாலசுப்ரமணியன்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை பற்றிப் பேசும்போது கொஞ்சம் வேதனையோடு தான் பேச வேண்டியிருக்கிறது. ஏனென்றால், 20 வருஷங்களாகி, வெள்ளையன் விட்டு விட்டுப் போன தன்மையோ குணமோ, இந்தத் துறையிலிருந்து மாறியிருப்பதாக நான் ஒப்புக் கொள்ளவில்லை. இந்த மூன்று மாதத்திற்குள் மாறியிருக்கும் என்றும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. அதன் பயிற்சி, அதன் குணம், அதன் தன்மை அனைத்திலும் மக்கள் விரோதப் போக்கு உடையதாக இருக்கிறது—ஆன்டி-பீப்பிள் என்று சொல்லுவார்கள் அதிலும் குறிப்பாக, உழைக்கும் மக்களைப் பற்றிக் கொஞ்சமும் மரியாதை இல்லாது, நாட்டுக்காக உற்பத்தி செய்து, சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய குடியானவன், ஏழை உழவன்—வசதி படைத்த மிராசுதார்களை நான் குறிப்பிடவில்லை—ஏழைத் தொழிலாளர்கள் இவர்கள் பேரில் இந்தத் துறையின் கண்ணோட்டம் சற்றும் மாறவில்லை என்பது எனது அனுபவமாக இருக்கிறது. ஜனங்களைக் குற்றவாளிகள் பொட்டன்ஷியல் குற்றவாளிகள்—என்று பார்க்கும் நிலைமை தான் இருக்கிறது. குற்றம் செய்கிறார்கள் என்றால் அதற்கான காரணங்கள் என்ன என்று அறிந்து, ஆராய்ந்து அதில் ஈடுபடுகிறவர்களைத் திருத்தும்





கண்ணோட்டம் கொண்டு செயல்பட வேண்டிய துறையாக இருக்கிறது என்ற கொள்கையை அனைவரும் ஏற்றுக்கொண்டபோதிலும், அப்படிப்பட்ட தன்மையோ, குணமோ இன்னும் ஏற்படவில்லை. அதை ஏற்படுத்துவதற்கு விசேஷமான, முக்கியத்துவமான முயற்சிகளில் நாம் அனைவரும் ஈடுபட வேண்டும்—குறிப்பாக ஆட்சியில் இருப்பவர்கள் ஈடுபட வேண்டும். அந்தத் துறையில் இருக்கிற உத்தியோகஸ்தர்களை—காவலாளிகளை நாட்டு மக்களை மதிக்கும் தன்மையை ஏற்படுத்துவதற்கு, அவர்கள் தலையில் ஏறியிருக்கும் குப்பைகளைத் துடைத்து, மக்களை மதிக்க விசேஷமான முயற்சிகளைச் செய்தாக வேண்டுமென்று நான் பணிவோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வேலூர் பயிற்சிப் பள்ளியில் என்ன சொல்லித் தரப்படுகிறது என்பதைக் கூட நான் அறிய விரும்புகிறேன். அவர்களுக்கு உள்ள கரிக்குலம் என்ன? மக்களுக்கு உள்ள அடிப்படை உரிமைகள் என்னென்ன என்று சொல்லித் தரப் படுகிறதா? அதை மதித்து நடக்க வேண்டுமென்ற எண்ணம் ஊட்டப்படுகிறதா என்பதையெல்லாம் நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், குற்றம் ஏன் ஏற்பட்டது, எந்தச் சுற்றுச்சாரலில், எந்தச் சூழ்நிலையில் ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கிற இன்வெஸ்ட்டிகேஷன் முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விதிகள் பல இருந்தபோதிலும், நடைமுறை எதுவாக இருக்கிறது?—தேர்ட் டிக்ரி மெத்தெட்ஸ்—மிரட்டி ஒப்புக் கொள்ளச் செய்வது, அடித்து ஒப்புக் கொள்ளச் செய்வது. அடிக்க உரிமை இல்லை என்ற சட்டம் மேலதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், அடிக்காத போலீஸ் ஸ்டேஷன்கள் இல்லை என்று எவ்வளவு வற்புறுத்திச் சொன்னாலும் அது மிகையாகாது. ஆட்சியாளர்கள் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற துர் நோக்கத்தோடு பேசுபவன் நான் அல்ல. இருப்பதைத் திருத்த வேண்டுமென்ற அக்கறையுள்ள நிலையில் தான் பேசுகிறேன். அதனால் தான் அவர்களுக்கு என்ன தான் போதிக்கப்படுகிறது, என்ன பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன். இதிலே அன்று கேள்வி நேரத்தில் பதில் சொன்னபோது முதலமைச்சர் அவர்கள் மாதத்திற்கு இவ்வளவு கோட்டா இருக்க வேண்டும் என்ற சிஸ்டம் இல்லை என்று தெரியப்படுத்தினார்கள். நான் கேள்விப்படுகிறேன். கிரைம் பாட்டர்ன் என்ற ஒரு தியரி இருக்கிறது. ஒரு ஊரிலே ஒரு பகுதியிலே இன்னென்ன குற்றங்கள் அதிகமாக நிகழும் என்று ஒரு பாட்டர்ன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அந்தப் பகுதியில் குற்றங்கள் இல்லை என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேள்வி கேட்கக் கூடிய நிலை தான் இருக்கிறது. இந்தக் குற்றங்கள் ஏன் குறைந்திருக்கின்றன, ஏன் கேஸ்கள் போடவில்லை என்று கேட்கக்கூடிய முறை போலீஸ் துறையிலே இருந்துகொண்டு தான் இருக்கிறது. அந்த முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியது போல குற்றம் குறைந்துகொண்டு வருகிறது என்றால் மேம்பட்ட சமுதாயம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்பது தான் பொருள். குற்றங்கள் கூடவே தான்

இருக்க வேண்டும் என்ற நிலையில், அதற்காகத் தனி முயற்சி எடுத்துக்கொண்டு, குற்றங்கள் இல்லாதவர்கள் மீது குற்றத்தை ஏற்றி குற்றவாளியாக்கக்கூடிய ஒரு ஏற்பாடு இங்கு இருக்கிறது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் —நாம் அனைவரும் அந்த முறையை விரும்பவில்லை. குற்றங்கள் குறைய வேண்டும் என்று தான் விரும்புகிறோம். ஆகையினால் தான் இதை மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

முதலில், யார் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனாலும் உட்காரு என்று சொல்ல அங்கே ஒருவரும் இல்லை. மரியாதை வாரம் கொண்டாடுவதில் பயன் இல்லை. யார் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனாலும் அவர்களை உட்காரச் செய்ய ஒரு ஏற்பாடு இருக்க வேண்டும். நான் டெப்யூடி கமிஷனர் ஆப் போலீஸ் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபொழுது, என்னை உட்காரு என்று சொல்வதற்கு ஒருவர் கூட இல்லாமல் நான் அந்தப் போக்கை அனுபவித்திருக்கிறேன். (குறுக்கீடு) அக்யூஸ்டு அல்ல. டிபென்ஸ் ஆப் இண்டியா ஆக்ட் அல்லது பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்டின் கீழ்—அக்யூஸ்டு என்று சொல்லத் தைரியம் இல்லாத காரணத்தினால், கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்துவதற்குத் துணிச்சல் இல்லாத காரணத்தினால், அங்கே என்னை இழுத்துக் கொண்டு போய் நிறுத்தினார்கள் பாதுகாப்புக் கைதியாக. உட்காரு என்று சொல்கின்ற அந்த ஏற்பாடு அங்கு இல்லை. என் கதியே இப்படி யென்றால், நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தால் அவனுக்கு என்ன கதி ஏற்படும் என்பதை யூகித்து கொள்வது சுலபம். இது பற்றி எல்லோருக்கும் தெரியாது என்பதல்ல. அவர்களுக்கும் தெரிந்தது தான். இருந்தாலும் இந்த மாமன்றத்தில் அதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். யார் வந்தாலும் உட்காரு என்று சொல்வதற்குப் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பெஞ்சு இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு குற்றவாளி என்றால், பெய்லபிள் அபென்சாக இருந்தால் பெய்லபிள் அபென்ஸ் என்று அவனுக்குச் சொல்ல வேண்டும். ஜாமீனில் போவதற்கு உரிமை உண்டு என்று சொல்ல வேண்டும். சட்டங்களெல்லாம் ஜனங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நாம் நினைப்பது சரியல்ல. தெரியாத ஜனங்களுக்குச் சொல்ல வேண்டும். 'ஜாமீனில் நீங்கள் விடுதலையாவதற்கு உரிமை உண்டு, ரூ. 200, ரூ. 400-க்கு இரண்டு ஜாமீன்தார்கள் இருந்தால் நீங்கள் விடுதலையாகலாம்' என்று சொல்ல வேண்டும். அவர்களால் ஜாமீனுக்கு ஏற்பாடு செய்துகொள்ள முடியவில்லை என்றால் அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்ய வேண்டும். அதற்குப் பதிலாகக் கிடைத்தவர்களைப் பிடித்து உள்ளே தள்ளும்படியான நிலை இருக்கக் கூடாது.

இரண்டாவதாக செக்ஷன் 54-"நோ ஆஸ்டென்சிபிள் மீன்ஸ் ஆப் லைவ்லிஹுட்" (குறுக்கீடு) நான் வெகு காலமாகக் கோர்ட்டுக்குப்போகவில்லை. அமைச்சருக்கு நன்றி. செக்ஷன் [illegible]





சமுதாயத்தில் முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்து கொண்டு வரும் வரையில், வேலையில்லாத் திண்டாட்டமும் வளரும். அது தான் விதி. அதை நீங்களும், நானும் மாற்றிவிட முடியாது. அதன்படி வேலையில்லாப் பட்டாளம் பெருகிக் கொண்டிருக்கிறது. அது சமுதாயத்தில் ஏற்பட்ட நிலை. அவன் வாழ வழியில்லாமல் திண்டாடுகிறான். சமுதாயம் இவ்வாறு அவனைப் பழிவாங்குகிறது. அதற்கு அவனையே குற்றவாளியாக்கி, அவனை உள்ளே தள்ளுவது அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. அப்படி ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டிருக்கிறது. அது கொடுமையிலும் கொடுமை. வேலையில்லாமல் நகரத்திற்கு வந்து, ஹோட்டலில் வேலை செய்து, ஹோட்டல் வாசலில் படுத்து, பஸ் ஸ்டாண்டிலும் ரயில்வே ஸ்டேஷனிலும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தால் அவர்களைப் போலீஸ்காரர்கள் அநியாயமாகப் பிடித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். இன்னும், 24 மணி நேரத்திற்கு மேல் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருக்கக் கூடாது என்று சட்டம் இருந்தாலும், கஸ்டடியில் லாக்கப்பில் இரண்டு, மூன்று நாட்களுக்கு வைத்துக் கொள்கிறார்கள் என்று இப்படிப்பட்ட புகார்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

இன்னொன்று ப்ரொஹிபிஷன். மதுவிலக்குக் கொள்கை சம்பந்தமான பேச்சை இங்கே எடுக்கவில்லை. ஆனாலும், இது ஒரு பயங்கரமான ஆயுதம், போலீஸ்காரர்கள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது, துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. மொபைல் போலீஸார் பட்டப் பகலிலே புகுந்து சாவடியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்களை வெளியே பிடித்து இழுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அப்படி 50, 60 பேர்கள் இருந்தால், அவர்களில் 10, 12 பேர்கள் மீது ஏதாவது கேஸ் போட வேண்டும் என்ற நிலையில் தான் கேஸ் போடுகிறார்கள். இந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய கவனத்திற்கு வந்த செய்தியை முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு அனுப்பியிருக்கிறேன்.

இன்னொன்று, போலீஸார் சிவில் தாவாவில் தலையிடுவது என்பது. ஒரு வசதியான சாராரிடம் ஏற்பாடு செய்து கொண்டு, போலீஸார் சிவில்தாவாவில் தலையிடுவது என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளிலும் இந்த நிலைமை இருக்கிறது. நகரங்களிலும் இது போன்ற வழக்குகள் வருகின்றன. ஒரு நிலம் இவருக்குத் தான் சொந்தம், அங்கு யாரும் நுழையக் கூடாது என்று விவசாயிகளுக்குச் சாதகமாக இடைக்காலத் தீர்ப்பு இருந்தாலும் கூட, போலீஸ் அதிகாரிகள் உரிமை பெற்ற விவசாயியை மிரட்டி, அடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லும் நிலை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. திண்டுக்கல் கஸ்பாவில் மாவப்பட்டி என்ற இடத்தில், பூதிபுரம் என்ற இடத்தில், இம்மாதிரி நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. மேலும், திண்டுக்கல் டவுனிலேயே ஒரு கோவில் மண்டபம் சம்பந்தமாக ஒரு ஜாதியினர் சிவில் தாவா போட்டு அதில் போலீஸார் தலையிட்டு ஒரு சாராருக்குச் சாதக

மாக நின்று கொண்டு வேலை செய்யும் ஏற்பாடு இருக்கிறது. இப்படி ஏராளமாக உதாரணங்கள் இருக்கின்றன. உடனடியாக இந்த முறை முழுவதையும் மாற்ற வேண்டும்.

இது தவிர, ஜில்லா டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில் ஜில்லா போலீஸ் அதிகாரிகளும் கலந்து கொள்வது நல்லது என்பது என்னுடைய கருத்து. அது நாட்டு ஜனங்களின் பிரதிநிதிகள், பல்வேறு இலாகாக்களின் பிரதிநிதிகள் வரக்கூடிய இடம். "லா அண்டு ஆர்டர்"-ப்ராப்ளத்தைப்பற்றி பொது ஜனப் பிரதிநிதிகள் என்று நினைக்கிறார்கள் என்று போலீஸ் அதிகாரிகள் தெரிந்துகொள்ள அந்த முறை உதவியாக இருக்கும். அல்லது, ஏதாவது ஒரு முறையில் ஜில்லாவில் இருக்கக்கூடிய எம்.பி., எம்.எல்.ஏ.-க்களை ஜில்லாவில் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள், கீழே இருக்கிற அதிகாரிகள் கலந்து கொள்ள வேண்டும். முடிவு அவர்கள் இஷ்டம் போல் எடுக்கட்டும், ஆனால், இப்படிக் கலந்துகொள்வது உதவியாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது தவிர, தொழிலாளிகள் முதலாளிகள் தாவாக்களில் போலீஸ் தலையிடும் பழக்கம் ரொம்பக் காலமாக இருந்து வருகிறது. சாதாரணமாக அவர்கள் ஒரு சாராருக்கு ஆதரவாக இருந்து வருகிற பழக்கமும் நிலவி வருகிறது. சமீபத்தில் நெய்வேலியில் போலீஸ்காரர்கள் வொர்க்ஸ் ஸ்பாட்டிலேயே இருக்கிறார்கள். இரண்டு மைல் தள்ளி இருக்கட்டும். ஏதாவது தகராறு வந்தால் தலையிடுவதற்கு வேண்டிய நிலையில் இருக்கட்டும். தொழிலாளர்கள் தான் அதைப் படைத்தவர்கள், அதை அவர்கள் அழித்துவிடுவார்கள் என்பதில்லை. நீங்கள் நினைத்தாலும் சரி நினைக்காவிட்டாலும் சரி, அங்கு இருக்கும் போலீஸ் அதிகாரிகள் ஜெனரல் மானேஜரோடு தான் தொடர்பு கொண்டிருப்பார்களே தவிர தொழிலாளர்களோடு இல்லை. அவர்களைச் சொல்வதில் பயன் இல்லை. அவர்கள் கதி, உழைப்பவர்கள் கதி. அது நீண்ட காலப் பழக்கம். அதை மாற்ற முடியாது. வொர்க்ஸ் ஸ்பாட்டில் போலீஸ் இருக்கும் பழக்கத்தை நாம் அனுமதிப்பது கூடாது என்று நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இது தவிர, இரண்டு விஷயங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, லைசென்ஸ் கட்டணம் பொதுக் கூட்டங்களுக்காக வசூலிப்பது. இது டாக்ஸ் ஆன் பப்ளிக் மீடிங். பொது ஜனங்களுக்குப் பொதுக் கூட்டத்தில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய நிலையில், அம்மாதிரிக் கூட்டங்களுக்கு லைசென்ஸ் கட்டணம், யாராக இருந்தாலும் சரி விதிக்கக் கூடாது. அது சரியல்ல. அதை மாற்றி அமைக்க வேண்டும். இரவு நேரங்களில் பொதுக்கூட்டங்களை 10 மணிக்குள் முடிக்க வேண்டும் என்ற விதியையும் தளர்த்தவேண்டும். 12 மணி வரையில் கூட்டம் நடந்தால் கூடப் பரவாயில்லை. இல்லாவிட்டால் 11 மணி வரைக்குமாவது அனுமதிக்க வேண்டும். எட்டு மணிக்கு மேல் [illegible]





கூட்டம் ஒழுங்காக ஆரம்பிக்கிறது. பதினொரு மணி வரை நீடிக்க அனுமதித்தால் ஒன்றும் குடி முழுகிவிடாது. இது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகத்தான் இருக்கும் என்று நம்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், அடிப்பது. கோர்ட்டில் இது பற்றி ஒரு கேஸ் இருப்பதால் அதன் மெரிட்டுக்குள் போக விரும்பவில்லை. மதுரையில் மேலமாசி வீதியில் எனது கட்சி உறுப்பினர் ஒருவர் நடுத்தெருவில் கையில் விலங்குபோடப்பட்டு இழுத்துக் கொண்டு போகப்பட்டிருக்கிறார். இதுபற்றி கோர்ட்டில் வழக்கு இருப்பதால், அதற்கு மேல் நான் போக விரும்பவில்லை, இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். அடிபட்ட பையன் போட்டோ படம் முதலியவை இருக்கின்றன. விவரங்கள் எனக்குத் தெரியும். ஜானகியம்மாள் அவர்களுக்கும் சங்கரய்யா அவர்களுக்கும் தெரியும்.

இது தவிர, டையர் சர்வீஸைப்பற்றி ஒரு வார்த்தை. இதிலே பணிபுரிபவர்களுக்கும், போலீஸ் இலாகாவினருக்கும் ஒரே தலைவர் தான். ஆனால், அவர்களிடையே சம்பள விகிதத்தில் தாரதம்மியம் இருக்கிறது. டையர்மென்னுக்கு ரூ. 55 சம்பளம், போலீஸ்காரருக்கு ரூ. 65 சம்பளம். ஹவுஸ் ரெண்டு அலவன்ஸ் இவர்களுக்கு ரூ. 7, போலீஸ்காரர்களுக்கு ரூ. 10, வாஷிங் அலவன்ஸ் இவர்களுக்கு ரூ. 3, போலீஸ்காரர்களுக்கு ரூ. 5 இப்படி ஏறக்குறைய ரூ. 20 வித்தியாசம் இருக்கிறது. அதே மாதிரி ஹெட்கான்ஸ்டபிள் சம்பளத்திற்கும் லீடிங் டையர்மென் சம்பளத்திற்கும் ரூ. 50 வரையில் வித்தியாசம் இருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வு தீர்க்கப்பட வேண்டும். பல காலமாக அவர்கள் இதுபற்றி சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதை நாம் அவசரமாக கவனித்து, ஆவன செய்ய வேண்டும். பொதுவாக சம்பள உயர்வு என்பது பொதுப் பிரச்சினை. ஆனால், இந்த மாதிரி ஏற்றத் தாழ்வு இல்லாத ஒரு நிலையை உடனே ஏற்படுத்த வேண்டும். இது மிகவும் அவசியம் என்று நான் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது தவிர பல விஷயங்கள் நான் சொல்ல வேண்டும். ஆனால், அவகாசம் இல்லாத காரணத்தினால் அடுத்து என்னுடைய கட்சியின் சார்பாக பேசக்கூடியவர்களுக்கு இடம் அளித்துவிட்டு, அவர்களுக்கு இந்த விஷயங்களை விட்டுவிட்டு, நான் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** அடுத்து பேசுகின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 5 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சி. பாலன்:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல் அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே மு.ப 11 00
கொண்டுவரப்பட்டிருக்கிற காவல் துறைமானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் இதயம் கலந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்த மன்றத்திலே எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள், காங்கிரஸ் நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், போலீஸ் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று அடிக்கடி பேசிவருகிறார்கள்.

குறிப்பாக, மதிப்பிற்குரிய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், வரவுசெலவுத் திட்டத்தின் பேரில் பேசும்போது, நாகர்கோயிலில், திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ. ஒருவர் போலீஸ்காரர்களை அதட்டுகிறார், போலீஸ் நிலையத்திற்குச் செல்லுகிறார் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். நான் அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். அந்த எம்.எல்.ஏ. ஒரு வழக்கறிஞர் அவர்கள் போலீஸ் நிலையத்திற்கு சென்றதே "நீங்கள் இந்த நாட்டை ஆண்டகாலத்தில், அவர்கள் கையிலே விலங்கிட்டு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற போதுதான்" என்று சொல்ல விரும்புகிறேன். அந்த வழக்கறிஞர் மற்றபடி போலீஸ் நிலையத்திற்குச் சென்றதே கிடையாது.

இன்றைக்கு சந்தேகக் கேசுகள் போடப்படுகின்றன. பிரிவு 54, ஸி.ஆர். பி.சி. படி கேசுகள் எடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் நண்பர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போலீஸ் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள், தலையிடுகிறார்கள், என்று சொல்வதற்கு காரணமே, கடந்த 20 ஆண்டு காலமாக இவர்கள் ஆண்டகாலத்தில் போலீசில் தலையிட்டு, தலையிட்டுப் பழகிப்போனவர்கள். மண்டலக் காங்கிரஸ்காரர்கள் போலீசை ஆட்டிப்படைத்து வந்ததை நாம் அறிவோம். யார் சொன்னாலும் சரி, மண்டலக் காங்கிரஸ்காரர்கள் கவலைப்படுவதில்லை. போலீஸ் நிலையத்தார் அவர்கள் சொல்வதைத்தான் கேட்கவேண்டும். அப்படிக் கேட்கவில்லை என்றால் தண்ணீர் இல்லாத காட்டிற்குத் தூக்கி எறியப்படுவார்கள். உதாரணத்திற்குச் சொல்லுவேன், என்னோடு படித்தவர் குமரி மாவட்டத்திற்கு டி.ஐ.எஸ்.பி.-ஆக வந்தார். ஆனால், அவர் எனக்கு வேண்டியவர் என்கிற ஒரே காரணத்திற்காக, மறுநாளே கரூருக்குத் தூக்கியெறியப்பட்டார். ஆகவே, அதே போல இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் செய்யுமா என்கின்ற அச்சத்தில் அப்படிப் பேசி வருகிறார்கள். அவர்களுக்குச் சொல்லுவேன், இந்த நாட்டை பேரறிஞர் அண்ணா அவர்கள், அன்பு வழியிலே நடத்துவது என்பதைத் தெரிந்துக் கொண்டிருக்கிறார் என்று அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கைப் பாதையைப் படித்தவர்கள், அப்படிப்பட்ட அச்சத்தைக் கொள்ள மாட்டார்கள்; யாரும் அச்சம் கொள்ளக் கூடாது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

பல நண்பர்கள் சந்தேகக் கேசுகள் பிடிப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். பிரிவு ஐம்பத்திநான்கு ஸி.ஆர்.பி.சி. படி, ஒருவனுக்கு வசதி இல்லையென்றாலோ, அல்லது சந்தேகப்படும் வழியிலே நடந்துகொண்டாலோ, அவனைக் கைது செய்ய வேண்டும் என்று வெள்ளையன் இயற்றிவிட்டுச் சென்றான். இன்றைக்கு நாம் ஜனநாயக நாட்டில் இருக்கிறோம், அதுவும் சோஷலிசத்தைப் பேசிக்கொண்டு இருக்கிறோம். இந்த சமயத்திலும் இப்படிப்பட்ட சட்டம் நாட்டிலே இருப்பது சரியாகாது. வாழ்வதற்கு வசதியில்லை, வேறு வழியில்லை என்றால், அவன் சிறையில் அடைக்கப்படவேண்டுமா என்று பார்க்க வேண்டும். அப்படித்தான் செய்ய



வேண்டும் என்பது நீடிக்கப்பட்டால் சோஷலிசம் இறந்து போய்விடும். ஆகவே, இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும். நம்மாலே திருத்த முடியாது என்றால், மத்திய சர்க்காருக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது என்றால், நம்முடைய போலீஸ்காரர்களுக்கு, போலீஸ் நிர்வாகத்திற்கு இந்த சட்டத்தை மிக்க கவனத்தோடு செயல்படுத்தச் சொல்லி வகைசெய்யவேண்டும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரணமாக, மேலே இருப்பவர்கள், சப் இன்ஸ்பெக்டரை 'ஸ்டேஷனில் எவ்வளவு கேசுகள்' என்று கேட்டால், 100 கேசுகள் என்பார்கள் என்று வைத்துக்கொண்டால், அதில் பாதிக்கு மேல் 54 ஸி.ஆர்.பி.சி. கேசுகளாகவும், 10, 15 செக்ஷன் 107 கேசுகளாகவும் இருக்கும். ஐ.பி.சி. கேசுகள் ஒன்றிரண்டுதான் போட்டு இருப்பார்கள். ஆகவே இந்த 54-ல் கைது செய்வதை நிச்சயமாகத் தடைசெய்ய வேண்டும், அப்படித் தடைசெய்ய முடியாவிட்டாலும் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். ஆகவே, 54-வது பிரிவு, கிரிமினல் ப்ரொசீஜர் கோட் முழுவதையுமே படித்துக் காட்டும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. எம். சி. பாலன்** : என்னிடம் புத்தகம் இல்லை. 54 ஸி.ஆர். பி.சி. படி ஒருவர் சந்தேகப்படும் வழியில், வாழ்க்கை வசதியில்லாமல் இருந்தால் போலீஸ் கைது செய்யலாம் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : வாழ்வதற்கு வசதி இல்லாமல் இருப்பதைக் குற்றம் கூறும் நிலையில் இருப்பதாகக் கருதினால், நம்மில் பலர் அந்தக் குற்றத்திற்கு உட்படவேண்டியிருக்கும். (சிரிப்பு)

**திரு. எம். சி. பாலன்** : எனவே, ஓரளவிற்கு போலீஸ் துறையினர் மிகவும் நல்லமுறையில் அதைக் கையாள வேண்டும் என்கிற கருத்தைத் தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் நிலையங்களில் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : நம்முடைய உறுப்பினர் சொன்னதற்கு மிகவும் பொருத்தமானது, செக்ஷன் 55 என்று கருதுகிறேன்.

'Any officer in charge of a police station may, in like manner, arrest or cause to be arrested—

(*a*) any person found taking precautions to conceal his presence within the limits of such station, under circumstances which afford reason to believe that he is taking such precautions with a view to committing a cognizable offence; ... ... ...

ஆகையினால், வாழ்க்கை வசதியில்லாதவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வது என்றால், நம்மில் பலர் போய்ச் சேரவேண்டியதுதான். (சிரிப்பு) சந்தேகத்திலே போலீசார் கைது செய்தால், நியாயமான முறையில் பிடிபடுகிறார்கள் என்று நான் வாதாடவில்லை.

—

**திரு. எம். சி. பாலன் :** ஒரு சப்-இன்ஸ்பெக்டருடைய சரகம் 30, 35 மைல் சுற்றளவு இருப்பதால், ஒரு பகுதியிலே ஒரு குற்றம் நடக்கிறபோது, போலீஸ் நிலையத்திலிருந்து அங்கே செல்ல வசதியில்லாமல் இருக்கிறது. பல்வேறு துறைகளில் இருக்கும் ஜீப் கார்களை ஒவ்வொரு போலீஸ் நிலையத்திற்கும் ஒரு ஜீப் கார் விதம் கொடுத்தால் நலமாக இருக்கும். ஒரு பகுதியில் . . . (மணியடிக்கப்பட்டது.)

நான் இன்னும் ஒன்றுமே பேசவில்லையே. இப்பொழுதுதானே ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் :** பேசுங்கள்.

**திரு. எம். சி. பாலன் :** அதேபோல குற்ற இலாகாவையும், லா அண்ட் ஆர்டர் பிரிவையும் பிரித்து வைக்க வேண்டும். மதுவிலக்கு கேசுகளை நடத்தும் பிரிவும், காவல் துறையும் பிரித்து வைக்கப்பட வேண்டும். காவல் துறையும், லஞ்ச ஒழிப்பும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று, இரண்டு மூன்று நாட்களாக 'ஹிந்து' பத்திரிகையில் 'லெட்டர்ஸ் டு தி எடிட்டர்' பகுதியில் எழுதியிருக்கிறார்கள். அவை இரண்டையும் ஒன்றாக இணைத்தால், போலீசாரே லஞ்சக் குற்றங்களைப் பிடிக்கமாட்டார்கள். ஆகவே, இரண்டு துறைகளையும் இரண்டாகவே வைக்க வேண்டும். சென்னையிலே கைதிகளை ரிமாண்டில் வைப்பது சம்பந்தமாக சிடி போலீஸ் ஆக்டைத் திருத்த வேண்டும். குற்றத்தைக் கண்டுபிடிப்பவர்களும், வழக்கு நடத்துபவர்களும் ஒன்றாக இருக்கக் கூடாது என்று கூறிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை முழுக்க, முழுக்க ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. என். துரைபாண்டியன் :** கனம் உதவித் தலைவரவர்களே, போலீஸ் மானியத்தின்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே காவல் துறை என்னும்போது, ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் சேர்ந்து பாராட்டும் வகையில் அவர்கள், நமக்கு இன்னல்கள் வராதபடி, தப்புக்கள் நேராதபடி, மக்களுக்கு சட்ட பூர்வமாகவும், ஒழுங்கு முறையிலும் வழி காட்டிக் கொண்டு வருகிறார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆனால், அவர்களுக்கு நாம் கொடுக்கின்ற ஊதியம் போதுமானதாக இருக்கிறதா என்பதுதான் இந்த நேரத்தில் நாம் சிந்திக்க வேண்டும். உண்மையாகவே, நல்ல வேலை செய்யும் இலாகா என்றால், அதிகாரிகள் நன்றாக வேலை செய்தார்கள் என்றால், அதிகப்படியான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்ற உடனே மக்கள் நினைக்கிறார்கள், சிலர் அங்கேதான் அதிகத் தப்புக்கள் செய்கிறார்கள் என்று பொருள் கொள்கிறார்கள். ஆனால், வேலையே செய்யாமல் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருந்தால், அங்கே குற்றமே இல்லை என்று வாதம் செய்கிறோம். இந்த முறையில் அந்த இலாகா இருக்கிறது.





ஆனால், இந்த நேரத்தில் மதுவிலக்கை [illegible] முதல் அமைச்சர் தீவிரமாக அமல் நடத்த வேண்டும் என்[illegible]றியதை வரவே[illegible] கிறேன். மதுவிலக்கை அமல்படுத்தும் [illegible] பெரும்பாலும் கிராம போலீஸ் ஸ்டேஷன்களில் 'போன்' இல்லை. லிமிட்டேஷனு[illegible]குள்ளே, பல மைல்கள் அவர்கள், 20, [illegible] மைல்கள் கூட மண[illegible] பாங்கான பகுதிகளில் போகவேண்டியிரு[illegible] பல மைல்[illegible] தூரத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவ[illegible] ஒரு[illegible] சொன்னால், அந்த இடத்திற்கு சென்று குற்றம் [illegible] செய்பவர்[illegible]த் தடுக்க, அவர்களைப் பிடிக்க அதிகாரிகளுக்கு போக்குவரத்து வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்காகிலும், குறைதபட்சம் கடற்கரையோரப் பகுதிகளிலாவது, போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங்களில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷன்களுக்காவது, ஒரு ஜீப் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மணற்பாங்கான இடங்களில் வேலை செய்கின்ற போலீஸ்காரர்கள் அணிந்திருக்கின்ற பூட்ஸ், மேற்சோடு ஆகிய இவைகளைப் பார்க்கும்பொழுது, குற்றம் செய்கிறவனைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற உடனேயே பூட்ஸ் கால்களோடு ஓடி அவர்களைப் பிடிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே அவர்களுக்கு இத்தகைய பூட்ஸ்கள் அவசியம்தானா என்பதைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பிச்சைக்காரர்கள் தொல்லை பெரும்பாலும் விடப்பட்டிருக்கிறது என்று இந்த மானிய புத்தகத்தில் பார்க்கின்றோம். ஆனால் எங்கு சென்றாலும் அவர்களுடைய தொல்லை ஒழிந்ததாகத் தெரியவில்லை. அதையும் உடனடியாகச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீயணைக்கும் படை பற்றி இன்றுதான் நம் மன்றத்திற்கு விவாதத்திற்கு வந்தது. தீ ஒரு பெரிய பயங்கரமான நஷ்டத்தை உருவாக்கக் கூடியது. இன்று பட்டணத்தில் தீ விபத்து நடந்தவுடனே, இங்கு அதிக தீ அணைப்புப் படையினர் இருப்பதனால் உடனடியாக அணைத்து விடுகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் தீ பிடித்துக்கொண்டால், உடனடியாக அணைப்பதற்கு வாய்ப்பில்லாமல், அடியோடு தீய்ந்துவிடுகிறது. ஆகவே, ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒரு தீ அணைப்புப் படை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, பட்டணத்திலிருக்கும். போலீஸ்காரர்கள், இங்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதன் காரணமாக விலைவாசி கஷ்டத்தினால் பாதிக்கப்படாமல் கொஞ்சம் சௌகரியமாக வாழலாம். ஆனால் கிராமப்புறங்களில் வாழ்கின்ற போலீஸ் வகுப்பினருக்கு எத்தகைய சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் ஒன்றுமில்லை. நமது முதலமைச்சர் படிப்படியாக கிராமங்களுக்கும். எல்லா ஜில்லாக்களுக்கும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அவ்வாறு ஜில்லா முழுவதற்கும் ரூபாய்க்கு ஒரு படி

அரிசித் திட்டம் வருவதற்கு முன்வரையிலாவது அவர்களுக்குத் தனியாக ஏதாவது சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

போலீஸ் வேலைக்கு வர அதிகம் பேர் இல்லாத நிலையிருக்கிறது. ஏனென்றால், அவர்களுக்கு அதில் அதிக ப்ரமோஷன் இல்லை என்பதை ஒரு காரணமாகக் கொடுக்கிறார்கள். அதற்கடுத்த காரணம் சம்பளம் அதிகம் இல்லை என்பது. ஆனால், அதுதான் இந்த நாட்டினுடைய முக்கிய பணியாய் இருப்பதனால், போலீஸ் உத்தியோகம் பார்க்கின்ற எல்லா வகுப்பினர்களையும் 'போலீஸ் ஜாதி' என்றே தனியாக வைத்து, ஹரிஜனங்களுக்கு சர்க்கார் மூலமாக உத்தியோகத் துறையிலும், கல்வித் துறையிலும் என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அத்தனை சலுகைகளையும் போலீஸ் உத்தியோகம் பார்க்கின்றவர்களுடைய பின் சந்ததியினர் அனுபவிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, மதுவிலக்கு என்ற பெயரால், மதுவிலக்கு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டபொழுது இன்று சபாநாயகராக இருக்கின்ற திரு. ஆதித்தனார் தலைமையிலே, கள் இறக்குகிறவர்களுக்கு எவ்வளவு பாதகம் வந்திருக்கிறது என்று கூற ஒரு தூது கோஷ்டி வந்தது. மதுவிலக்கு திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பனைமரத் தொழிலாளர்கள், பனை மரத்தில் ஏற லைசென்ஸ் வாங்கியிருக்க வேண்டும். அந்த லைசென்சிற்குப் பணம் கட்ட வேண்டிய அவசியமில்லை. பின் ஏன் அந்த லைசென்ஸ் எடுக்க வேண்டுமென்று கேட்ட பொழுது, அப்போழுது அமைச்சராக இருந்த குருபாதம் அவர்கள் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் சேருவதற்காக அதை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைய தினம் இந்த லைசென்ஸை எடுப்பதில் எவ்வளவு பெரிய தொந்தரவுகள் இருக்கின்றன என்பதை எல்லோரும் நன்றாக அறிவோம். இந்தச் சமயத்தில், இன்று ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கப் போவதாக அதற்காகப் பாடுபடுகின்றதாகச் சொல்லக்கூடிய மந்திரி சபை, முதலமைச்சர், அந்த ஏழைகள், பாட்டாளி மக்கள், பனை மரத் தொழிலாளர்கள் பாதிக்காமல் இருக்கும் பொருட்டு லைசென்ஸை ரத்து செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம்: துணைத் தலைவரவர்களே, இங்கே** போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரிக்கின்ற முறையில், மதுவிலக்குபற்றி மட்டும் சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே எனக்குத் தரப்பட்ட குறிப்பில்—1966-ஆம் ஆண்டிற்குரிய விவரம் என்று நினைக்கிறேன்—1,60,029 பேர் சட்டத்தை மீறிய குற்றவாளிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டில் 15.5 சதவிகிதம் குற்றம் செய்பவர்களின் எண்ணிக்கை வளர்ந்திருப்பதாகவும் காட்டப்பட்டிருக்கிறது.



இதற்குச் சொல்லப்பட்ட சமாதானம் தொடர்ந்து உறுதியுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது. அதன் காரணமாக, மதுவிலக்குச் சட்டத்தை மீறுவோர்கள் எண்ணிக்கை 1,60,029 ஆக அதிகரித்தது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருகால், இதற்கு முந்தைய ஆண்டுகளில் எத்தனை சதவிகிதம் உயர்ந்து வந்தன என்பதையும் சேர்த்துக் கொடுத்திருந்தால், 1966-ஆம் ஆண்டில் இவ்வளவு அதிகமானதற்குக் காரணம் தீவிரமான நடவடிக்கைதான் என்று நாங்கள் நம்பலாம். ஆனால், 1966-ஆம் ஆண்டுக்குரிய தகவலை மட்டும் கொடுத்திருப்பதால், சோர்வுற்றிருந்த நடவடிக்கைகள் காரணமாக இந்தக் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றனவா? அல்லது கடுமையாக, தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக 15.5 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறதா? என்று தெளிவுபெற முடியவில்லை. அவரவர்கள் விருப்பத்திற்கேற்றாற்போல் இரண்டு விதமாக வியாக்கியானம் செய்துகொள்ள இந்தப் புள்ளி விவரங்கள் உதவுகின்றன.

இந்த 1,60,029 பேர்களில், கள்ளச் சாராயம் அல்லது மது உற்பத்தி செய்ததற்காகப் பிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அதைக் குடித்ததற்காகப் பிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? என்று பிரித்துக் கொடுத்திருந்தால், இன்னும் கொஞ்சம் நன்றாக இருந்திருக்கும். காரணம் என்னவென்றால், உற்பத்தி செய்கிறவர்கள் பிடிக்கப்படுவதில்லை; அதை உபயோகிப்பவர்கள்தான் பிடிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து நாட்டில் பரவலாக இருந்து வருகிறது என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன்.

மதுவிலக்கு கொள்கையில் நம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி குறிப்பாக—முதலமைச்சர் உறுதியாக—கொள்கைப் பிடிப்போடு—இருப்பதைக் குறித்து நான் பாராட்டுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். நான் மதுவிலக்கால் நன்மையே இல்லை என்று சொல்பவன் அல்ல—குறிப்பாக, கிராம மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு நல்ல நம்பிக்கையூட்டக்கூடிய அளவிற்கு அது பலன் தந்திருக்கிறது. இதை நான் விரித்துக் கூறினால் வேறொன்றை விரித்துக் கூறியதாக அமையும்; ஆகவே நான் அதனை இத்துடன் விட்டுவிடுகிறேன். ஆனால் இன்னொன்றையும் நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். மதுவிலக்கை அமல் நடத்தும் முறையில் இன்னும் கொஞ்சம் வலுவாகவும் திறமையாகவும் இருந்திருக்க வேண்டுமென்ற பரவலான கருத்து என் போன்றவர்களிடம் இருந்துகொண்டிருக்கிறது. அதிலும் மதுவிலக்குக் கொள்கையை போதித்த கட்சியே, மது விலக்கை நீண்ட காலம் அமல் நடத்தி வந்தது மட்டுமல்ல; மது விலக்குக்காக கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டம் நடத்தி வந்த கட்சியே கடந்த இருபது ஆண்டு காலம் ஆட்சியிலிருந்தும்கூட, மதுவிலக்கைத் திறமையாக அமல் நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டிற்குள்ளாகியிருக்கிறது. மதுவிலக்கு தோற்றுவிட்டது என்று சொல்லி வேறு பல மாநிலங்களில் அதைக் கைவிட்டு வருவதனால், நமது முதலமைச்சர்

அவர்களும்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் எவ்வளவு தான் உறுதியாக இருந்தாலும் அதிலிருந்து பின் வாங்கக்கூடிய நிலைமை உருவாகக்கூடிய அபாயம் இருக்கிறது. போலீஸ் நிர்வாகம் திறமையாக இருந்தும் வெற்றியின் சதவிகிதம் கூடுதலாகக் கிடைக்கவில்லை என்றால், மக்களிடையே பொறுப்பு உணர்ச்சி உண்டாகவில்லை என்றுதான் கருதத் தோன்றும். 1966-ஆம் ஆண்டில் 15.5 சத விகிதம் கூடுதலாகக் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் என்ன? மக்களின் ஒத்துழைப்பு இல்லாததா? அல்லது போலீஸின் நிர்வாகத் திறமையின்மையா?

ஒன்றை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வேறு எந்த சமூகச் சீர்திருத்த சட்டத்தையும்விட இந்த மதுவிலக்கைப் பொறுத்தவரையில், இஸ்லாம்-ஹிந்து மதங்களின் கொள்கைகள் உதவிகரமாக இருந்து வருகின்றன. அதுமட்டுமல்ல, குடிக்கிறவன் எவனும் தான் செய்யும் காரியம் நல்லதல்ல என்று நினைக்கும் அளவிற்கு அவனது மனச்சாட்சி அவனைக் குற்றம் சாட்டுகிறது. அதுமட்டுமல்ல, குடித்தவன், பத்துப்பேர் கூடியிருக்கக் கூடிய அவையில் அனுமதிக்கப்படாமல், சமூக பகிஷ்காரம் செய்யக் கூடிய நிலையிலிருக்கிறான். மேலும், குடித்தவன் வீட்டில் பெண் எடுப்பது இல்லை; குடித்தவன் வீட்டிற்குப்பெண் கொடுப்பதும் இல்லை என்ற சமூக பகிஷ்காரம் இருக்கிறது. இத்தகைய பகிஷ்காரம் ஆயிரமாயிரமாண்டுகளாக இருந்தும், மத உணர்ச்சிகள் பின்பலமாக இருந்தும், மக்கள் உணர்ச்சி பின்பலமாக இருந்தும், மதுவிலக்கைப் பரிபூரணமாக வெற்றியடையச் செய்ய முடியவில்லை என்றால், நிர்வாகத்துறை பலவீனமாக இருப்பதுதான் காரணம் என்ற எண்ணம் சமூகத்தில் தோன்றுகிறது. இதை, புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள காரணத்தால், நீங்கள் ஒத்துக்கொள்ளத் தயங்கக்கூடாது; அதை ஒப்புக்கொண்டு, நன்கு ஆராய்ந்து—அதை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்கு சாமான்ய மக்களுக்குப் பயனுள்ளதாயிருந்தாலும், இன்னொரு சாரார் பயங்கரமான துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஒன்றிரண்டு ஜாதிகளே பாதிக்கப்பட்டுவிட்டன. பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டதைப் பார்க்கிறோம்; கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டதைப் பார்க்கிறோம். ஆனால், மது இறக்கும் தொழிலையே நம்பியிருந்த லட்சோபலட்சம் தொழிலாளர்களுக்கு ஒரே ஒரு வேளை கூட உணவு நிவாரணமாகக் கொடுக்கப்படவில்லை. ஒரு ஆளுக்குக் கூட வேலை கொடுக்கப்படவில்லை. நிவாரணம் கிடைக்காததால் பலர் செத்தே போனார்கள். சட்டத்திற்கு உட்பட்டு நாணயமாக வியாபாரம் செய்தவர்களிடமிருந்து அந்தத் தொழில் பறிக்கப்பட்ட பிறகு, சட்ட விரோதிகள் கையில் அது மாறிவிடுமானால், இந்தச் சட்டத்தின் மூலம் யாருக்குத் துன்பம் இழைக்கப்பட்டதோ, யாருக்குக் கேடுகள் நேர்ந்தனவோ, அவர்கள் ஆறு



தல் அடைவதற்கில்லை. சமுதாயத்தின் நன்மைக்காக மதுவிலக்கை ஆதரிக்கவேண்டும் என்ற உணர்ச்சிகொண்ட என் போன்றவர்கள் கூட பின்வாங்கநேரிடுமோ என்ற ஆபத்தில நடைமுறை இருக்கிறது. மதுவிலக்கில பூரண நம்பிக்கை வைத்திருக்கும நான், ஒரு சமூகம் அழிந்த நிலையிலும்—நாட்டின் நன்மைக்காக அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அந்தச் சமூகத்திற்கு உறுதியாகச் சொல்லி—அந்தச் சமூகத்தின் வெறுப்புக்கு இரையானவன். உள்துறை அமைச்சர் அவர்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்; இதிலே பிடிவாதம் காட்டாமல், 'ப்ரெஸ்டிஜ்' என்று சொல்லுவார்களே, அதையும் காட்டாமல், மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய நன்மைகளை மீண்டும் பிரசாரம் செய்வதற்கு இந்த ஆட்சி ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மதுவிலக்கைக் கைவிடவேண்டும் என்ற பிரசாரம் பலவீனப்படும். மதுவிலக்கு, நூற்றுக்கு நூறு இல்லாவிட்டாலும், இதைவிடக் கூடுதலான சத வீதம் வெற்றி பெறக்கூடிய நடவடிக்கைகளில் இந்த ஆட்சி இறங்க வேண்டும் என்று கூறி, இந்த மானியத்தை நான் ஆதரிக்கிறேன்.

* **திரு. எஸ். ஆறுமுகம்** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் துறைக்கான மானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கை பற்றிய இந்தப் புத்தகத்தில் 23 பிரிவுகளாகப் பிரித்து, எந்த எந்தத் துறை எந்தப் பணியைச் செய்கிறது என்று தெளிவாக எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். போலீஸ் துறை தூய்மையாக, நேர்மையாக, இன்றைய தினம் நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அந்தப் பக்கம் உள்ள எதிர்க்கட்சிக் (காங்கிரஸ்) சேர்ந்த உறுப்பினர் ஒருவர், போலீஸ் துறையைக் கட்சி நன்மைக்குப் பயன்படுத்துவதாகத் தெரிவித்தார்கள். சேலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டிப் போசினார்கள். அவருக்கு நான் இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்—காங்கிரஸ் கட்சி இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது, சேலம் நகரத்தில் கர்ப்பிணிப் பெண்ணை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகப் பிடித்துவந்து, போலீஸ் அதிகாரியின் முன்னால் வைத்துக் கொண்டு, அந்தக் கர்ப்பிணிப் பெண்ணினுடைய வயிற்றின் மீது எட்டி உதைத்த காட்சி அந்த உறுப்பினருக்குத் தெரியும். இதே சட்ட மன்றத்தில், 1962-ம் ஆண்டும், 1963-ம் ஆண்டும் கூட நாங்களே அந்தப் பிரச்சினையை இங்கே எடுத்துப் பேசியிருக்கிறோம். அது மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

அந்தத் துறையிலே இருக்கக் கூடிய அதிகாரிகளைக் கட்டாயப் படுத்தி, போலீஸ் அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தி 'இப்படித் தான் செய்ய வேண்டும்' என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லி, சேலம் மாவட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக, பல பேரை அப்பொழுது அந்தக் கட்சியில் இருந்தவர்கள் துன்புறுத்திய நிகழ்ச்சிகளைப் பற்றிய

விவரங்களெல்லாம் எங்களிடத்தில் இருக்கின்றன. ஆகவே, எதையாவது வைத்துக் கொண்டு, நாமெல்லாம் இருபதாண்டுகாலமாக ஆட்சியில் இருந்தபோது, மற்றவர்களுக்கு என்ன என்னவோ இடைஞ்சல்களைச் செய்தோமே, அதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு, இப்பொழுது ஆளுங்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் திருப்பிச் செய்தால் என்ன செய்வது என்ற எண்ணத்திலோ என்னவோ காங்கிரஸ் தரப்பில் உள்ளவர்கள் அப்படியெல்லாம் பேசுவதாக இருக்கிறதே தவிர, அவர்கள் உள்ளபடியே நிலைமைகளை ஆராய்ந்து பார்த்திருப்பார்களானால், அத்தகைய பேச்சுக்கே இந்த மன்றத்தில் இடம் இருக்காது என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இதே மன்றத்தில் நம்முடைய முதலமைச்சர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணா அவர்கள் தூக்கு போட்டுக் கொண்டார் என்று ஒரு போலீஸ் அதிகாரி தொலைபேசி மூலம் நெடுஞ்செழியன் அவர்களைக்கேட்ட செய்தியை இந்த மன்றம் அறியும். பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களை இரவோடு இரவாக, அவருக்கு உடல்நலம் சரியில்லாத நேரத்தில் கூட, பாளையங்கோட்டைச் சிறைக்கு அழைத்துக் கொண்டுபோனபோது, அவரை எந்தப் பாடு படுத்தினார்கள்? அதைக் குறித்து இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி, அப்பொழுதிருந்த அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்த நேரத்தில், "அப்படியா? கவனிக்கிறேன்" என்று அலட்சியமாகப் பேசிய வார்த்தைகளையும் நாங்கள் கேட்டுக்கொண்டு தான் இருந்தோம். ஆனால், அப்படியெல்லாம் நாங்கள் செய்வோமா? என்றால், எங்களுடைய இந்தத் துறையை வகிக்கும் அமைச்சர் அவர்கள்—முதலமைச்சர் அவர்கள்—ஜனநாயகத்தின் காவலர் என்ற காரணத்தால் அத்தகைய இழிசெயலுக்கு ஒருக்காலும் இந்தத் துறையிலே நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்பதை இந்த நாடே அறியும், அந்தத் துறையில் இருப்பவர்களும் அறிவார்கள்.

இதிலே சிக்கனத்தைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 22-வது ‘ஐட்ட’-மாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சிக்கனம் மிக அவசியமானது. நியாயமானது. இன்னும் சொல்லப் போனால், இந்தத் துறையிலே இருப்பவர்களில் இன்னும் பல பேர்களை வேலையிலிருந்து நீக்குவதன் மூலம் சர்க்காருக்கு மீதம் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாவட்டப் போலீஸ் கண்காணிப்பாளருக்கு ஏ.டி.எஸ்.பி.-க்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவையில்லை. பி.ஏ. அவர்களே நேரடியாக இருந்தால் போதும். ஆகவே, அதிலே கூட, அவர்களை எடுத்துவிடலாம். எம்.எஸ்.பி. (மலபார் ஸ்பெஷல் போலீஸ்), சிறப்பு ஆயுதப் போலீஸ் படையில் ஏ.ஸி.ஸி.எஸ். போன்றவர்களை எடுத்துவிடலாம். இன்றைய தினம் நான்கு பேர்கள் இருப்பவர்களை இரண்டு பேர்களாகக் குறைத்துக் கொள்ளலாம். ஆகவே, அந்தத் துறையிலே ஆட்களைக் குறைப்பது நன்மையாக இருக்கும். மேலும், அதே இலாக்காவில் எஸ்.எஸ்.எல்.ஸி படித்தவர்கள் இருக்கிறார்கள், பி.ஏ., எம்.ஏ. படித்தவர்களும் இருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்குக் கூட, முன்னாலிருந்த ஆளுங்



கட்சியைச் சேர்ந்தவர்கள் கட்சிக் காரியத்திற்காக, கட்சி நலனைக் கருதி, இப்படிப்பட்ட உத்தியோக உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் காரணத்திற்காக அவர்களை நீக்கிவிட வேண்டும் என்று சொல்லவில்லை. வேலையில்லாமல் இந்த இலாக்காவில் இருக்கிறார்கள். அதிலேகூட ஆட்குறைப்பு தேவை. பொதுவாக, இந்த மானியக் கோரிக்கையை—தூய்மையாக, ஜனநாயகத்தின் காவலர் சமர்ப்பித்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை—ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. செ. பாலசுப்ரமணியன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கோரிக்கையின் மீது பேசும்போது, சர்க்காருக்குள்ள சில கஷ்டங்களை நான் உணர்ந்து கொண்டுதான் பேசுகிறேன். காரணம் என்னவென்றால் போலீசினுடைய நிர்வாகம், பராமரிப்பு இவை அத்தனையும் மாநில அரசாங்கத்தினுடைய காரியங்களாக இருந்தபோதிலும்கூட அந்த சட்டங்கள்—இந்தியன் பீனல் கோடு, க்ரிமினல் ப்ரொசிஜர் கோடு என்றிருப்பவை—மத்திய பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களாகும். க்ரிமினல் ப்ரொசிஜர் கோடிலே உள்ள குறைபாடுகளை வைத்துக்கொண்டு அதை அமல்படுத்தும்போது போலீசுக்கு ஏற்படுகிற கஷ்டங்கள் இவைகளெல்லாம் பொதுமக்களுக்குத் தொல்லையை விளைவிக்கும்போது, நிச்சயமாகப் பொதுமக்களெல்லாம் போலீஸைக் குறித்து தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

க்ரிமினல் ப்ரொசீஜர் கோடின் 55-வது செக்ஷன் பற்றியெல்லாம் இந்த மன்றத்தில் பேசப்பட்டது. க்ரிமினல் ப்ரொசிஜர் கோடில் 54, 55-வது செக்ஷன்கள் எல்லாம் இருக்கின்றன. அவை பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் இங்கே இருக்கும் போலீசால் அமல் நடத்தப்பட்டுவருவதற்கு செக்ஷன்கள். ஆனால், இங்கே இருக்கும் போலிஸ் நிர்வாகத்திற்கு, இந்த அரசாங்கம், இந்த செக்ஷன்களை அமல்படுத்தும் விஷயத்தில், திட்டவட்டமாக இந்த முறையில்தான் இவைகளை அமல் நடத்தவேண்டும் என்று ஏதாவது உத்தரவு அனுப்பியிருந்தால் நிச்சயமாக இந்தக் குறைபாடுகளெல்லாம் மக்கள் மத்தியிலிருந்து அகற்றப்பட்டுவிடும் என்று நான் நினைக்கிறேன்.

க்ரிமினல் ப்ரொசீஜர் கோடில், 54, 55 செக்ஷன்களோடு, 107 என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. அது ஜாமீன் கேஸ் சம்பந்தப்பட்ட செக்ஷன். சென்ற காலத்தில் இருந்த காங்கிரஸ் சர்க்கார், அரசியல் எதிரிகளை அடக்குவதற்காக 107-வது செக்ஷனை மிகத் தாராளமாக உபயோகப்படுத்தி, அரசியல் கட்சி இயக்கங்களையெல்லாம் ஆங்காங்கு அடக்கிவிட்டதற்கு எத்தனையோ சான்றுகள் கூற முடியும்.

அடுத்து, 110 என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. அந்த செக்ஷனைப் பொறுத்த வரையிலும்கூட, நிச்சயமாக இந்த அரசாங்கம் ஒரு திட்டவட்டமான அறிவிப்பையோ, உத்தரவையோ போலீஸ் இலாக்காவிற்கு அனுப்பவேண்டும். அரசியல்

சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கு இந்த செக்ஷனை உபயோகப் படுத்தக் கூடாது. 107-வது செக்ஷனும் சரி, 110-வது செக்ஷனும் சரி, எந்தக் காரணத்தைக் கொண்டும் உபயோகப்படுத்தப்படக் கூடாது. சமூக விரோதச் சக்திகளை அடக்குவதற்கு மாத்திரம் தான் இவைகளை உபயோகப்படுத்தவேண்டும் என்று திட்டவட்டமாக இந்த அரசாங்கம் போலீசுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டால், பொதுமக்களிடமிருந்தோ அரசியல்வாதிகளிடமிருந்தோ இம் மாதிரியான குறை எழாது.

அடுத்து, 144-வது செக்ஷன். அது அமல் நடத்துவதிலேகூட போலீசார் கவனித்து, பொதுமக்களுக்கு விரோதமாக நிச்சயமாக அதனை அமல் நடத்தக்கூடாது. பொது மக்களை அடக்கி ஆளவேண்டும் என்கிற பிரிட்டிஷ்காரன காலத்தில் இருந்த போலீஸ் மனோபாவத்தை விட்டொழித்து போலீசார்கள் பொது மக்களுடைய நண்பர்களாக இருக்கவேண்டும் என்ற மனோபாவத்தோடு இவைகளையெல்லாம் அமல் நடத்த வேண்டும் என்று இந்த அரசாங்கம் திட்டவட்டமாக உத்தரவு பிறப்பித்தால் மிகவும் நன்றாக இருக்கும். போலீசாரைப்பற்றி பொதுமக்கள் மத்தியி லிருக்கும் குறைபாடான எண்ணங்கள்கூட மறையக்கூடும்.

இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு, நிச்சயமாக போலீஸ் காரர்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள உறவிலே ஒரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். எந்த இடத் திலும் கலகமோ, துப்பாக்கிப் பிரயோகமோ கிடையாது. ஆனால் இந்த அரசாங்கமே என்றைக்கும் நிலைத்து இருக்கும் என்று நாம் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆகவே, இந்த அரசு இருக்கும் காலத்திலேயே இன்னும் சில அடிப்படையான காரியங்களில் திட்டவட்டமாக விதிமுறைகளை வகுத்துவிட்டுப்போவார் களானால், நிச்சயமாக போலீசார் பேரில் பொதுமக்கள மத்தியில் இருக்கும் கெட்ட எண்ணம் போக்கப்பட்டுவிடும் என்று நான் நினைக்கிறேன்

கண்ணீர்ப் புகைப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், தடி யடி செய்வது போன்ற இந்தக் காரியங்கள் எந்த நிலையில் போலீஸ் காரர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்குத் திட்ட வட்டமான விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். உதாரணமாக, சென்ற இருபதாண்டுகளில் காங்கிரஸ் நிர்வாகத்தை நடத்திக் கொண்டுவந்த காலத்தில் இந்த தேசம் பூராவிலும் சுமார் மூவா யிரம் போலீஸ் துப்பாகிப் பிரயோகம் ஏற்பட்டு, ஐயாயிரத் திற்கும் மேற்பட்ட மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால், 'ப்ராவகேஷன்' என்று சொல்லக்கூடிய தூண்டிவிடக்கூடிய முதல் நடவடிக்கை போலீஸ் தரப்பிலிருந்துதான் வந்திருக்கிறதே தவிர, பொது மக்கள் தரப்பிலிருந்து வரவில்லை. இந்தி எதிர்ப்பு கலவர வழக்குகளைப் பார்த்தாலுங்கூட, ஆங்காங்கு ஏற்பட்ட கலவர வழக்கைத் தீர விசாரித்துப் பார்த்தால், நிச்சயமாக, 'ப்ராவகேஷன்' என்று சொல்லக்கூடிய அந்தச் செயல் போலீஸ் காரர்கள் மத்தியிலிருந்துதான் வந்திருக்கிறது. ஆகவே, இந்த





அரசாங்கம் இது சம்பந்தமாகவும் நன்றாகத் தீர ஆலோசித்து நல்ல உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

மதுவிலக்கைப் பற்றியெல்லாம் பேசப்பட்டது. இதைப் பொறுத்தவரையில், மதுவிலக்குச் சட்டத்தை மீறும் குற்றங்கள் இந்த நாட்டில் அதிகரித்து வருகின்றன. இப்பொழுது அதிக மானவர்கள் குடிக்கிறார்கள்.

உதாரணமாகச் சொல்லப் போனால் சென்னையிலேகூட அரிஷ்டக் கடைகள் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன. போலீஸ் துறையினர் ஏன் அவர்களைப் பிடித்துத் தண்டித்து நடவடிக்கை எடுக்கக் கூடாது? நான் நேற்று பீச்சுக்குச் சென்றிருந்தேன். ஒரு அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் பீச்சில் அமர்ந்திருந்தேன். அந்தத் தருணத்தில் சிலர் கஞ்சா குடித்துவிட்டு, ஆனந்த போதை யில் ஆடிக்கொண்டு வந்தார்கள். (மணியடிக்கப்பட்டது). அப்படிப் பட்டவர்களை பத்து பேருக்குமேல் நான் பார்த்தேன். ஆகவே, ஒன்று, நடைமுறையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை அமல் நடத்துவதிலே நாம் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டு மென்பது, இரண்டாவது, போலீஸ் இலாகாவிலே காணப்படும் குறைகளைக் களைந்தெறிவது ஆகிய இவைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளு கிறேன்.

* DR. HABIBULLAH BAIG : Mr. Deputy Speaker, Sir, the demand of more than Rs. 10½ crores for police is really a huge amount for maintaining the Police. The Police is there to maintain law and order. Virtues must be protected and vices must be removed from society and it is with that idea that the Police is maintained. If all the people are ideal with all virtues and no vices, there will be no need for the police at all. The people working in the Police Department must be good guides and friends of the people and must be an example to them. To make the Police virtuous and remove the vices, Police force is very essential, and even if the Chief Minister demands a little more, we must give the grant.

Mr. M. P. Sivagnanam was not for speaking on this Demand. On my persuasion and at my request he spoke. I want to say something more. Because drinking is a vice, prohibition was introduced in our State in 1937 when Sri C. Rajagopalachariar was the Chief Minister. I went through the Debates of the Legislature during that period. There was a hue and cry in the Legislature. Stalwarts like Sir Kurma Venkata Reddy, Sri C. Ramalinga Reddy and the Right Hon. V. S. Srinivasa Sastri fought against Sri C. Rajagopalachariar. They said : "By the introduction of prohibition, the State is going to incur a loss of Rs. 5 crores. You are going to compensate the loss by the levy of commercial taxes. That is an additional burden on the people". Prohibition remains and the revenue from commercial taxes has gone up to Rs. 36 crores. To wipe out the vice

[1967 ஜூலை 5

of drink, we levy commercial taxes. The people are prepared to sacrifice to remove this vice. There is a cry from certain quarters that prohibition should be scrapped and that the income from drink should be utilised for augmenting food production. We do not want to allow vices; we want our people to become virtuous. People should not become drunkards and to enforce prohibition police force must be maintained. According to the speech of the Chief Minister, a copy of which has been circulated to the Members, and from the replies given to interpellaions, we find that year after year drinking is increasing, illicit manufacture of liquor is increasing and the number of Prohibition offences is increasing. At the time of introduction of Prohibition, Sri C. Rajagopalachariar said that within twenty years complete prohibition will be enforced, that the society will be perfect and that our future generations will be all right. But even after thirty years after the introduction of Prohibition, we find that drinking and drunkenness are increasing and illicit manufacture of liquor is increasing. What I want to say is that it is the duty of the police to completely remove drinking and drunkenness and see that Prohibition is made a success. That is why we say that we are ready to sanction not only the Rs. 10½ crores but also even more. Prohibition must be made completely successful.

There are other vices like stealing, gambling, murdering. These also must be removed. That is why I said that the police must be good guides and friends of the people and must be an example to them. The police must be men of ideal character. I request the Hon. Chief Minister to see that the Police Department is toned up.

* திரு. மு. ச. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின்மீது நான் ஒருசில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து ஏறக்குறைய நான்கு மாதங்கள் ஆனதற்கு பின்புங்கூட, இன்றைய போலீஸ் அதிகாரிகளில் ஒரு சில சப்-இன்ஸ்பெக்டர்களுடைய மனப்பான்மை மாறியிருக்கிறதா என்றால் இல்லையென்றே சொல்ல வேண்டும். போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் மிரட்டி வருகிறதென்று பிரதான எதிர்க் கட்சித் தோழர்கள் பேசினார்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறதென்றால் விளாத்திகுளம், பெரியசாமிபுரம் போன்ற
11-30 மு.ப. இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி வெட்டப்பட்டது. அங்கே இருக்கின்ற கழகச் செயலாளர்கள் அந்த இடத்தில் இருக்கிற சப்-இன்ஸ்பெக்டரிடத்தில் போய் பிராது கொடுக்கின்ற நேரத்தில்—இன்றைய முதலமைச்சரின் பிள்ளை வயதுகூட ஆகாத அந்த சப்-இன்ஸ்பெக்டர்—"அண்ணாதுரையிடம் போய் சொல்" என்று சொல்லியிருக்கிறார். இந்தச் செய்தியை எனக்குத் தொலைபேசியிலே சொன்னார்கள். நான் ஆளும் கட்சியில் இருக்கின்ற காரணத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒருவேளை நான் எதிர்க்கட்சியிலே இருந்திருந்தால், அண்ணாதுரையிடம் போய் சொல்' என்று சொன்ன அந்த சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து,



1967 ஜூலை 5] [திரு. மு. ச. சிவசாமி]

"உனக்கு இந்த போலீஸ் ஸ்டேஷனிலே என்ன வேலை?" என்று கேட்டிருப்பேன். ஸ்ரீவைகுண்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு முன், ரௌடிகளைக் கொண்டுவந்து அடிக்கும்படியான காட்சியெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றது. சப்-இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்படுபவர்கள் கீழே இருந்து ஹெட்-கான்ஸ்டபிளாக இருந்து பதவி உயர்வு மூலம் வந்தால் நல்லதாக இருக்கும். நேரடியாக பி.ஏ. படித்து விட்டு, சப்-இன்ஸ்பெக்டர்களாக வந்தவர்களுடைய செயல்கள் வேடிக்கையாக இருக்கின்றன.

நானும் சில நண்பர்களும், சபாநாயகருடைய தேர்தல் காரியாலயத்தில் இரவு பத்தரை மணிக்கு உட்கார்ந்துகொண்டிருக்கிற நேரத்தில், அந்தப் பக்கம் வந்த ஒரு சப்-இன்ஸ்பெக்டர், யாரடா என்று கேட்டார். அவர் 'யாரடா' என்று கேட்ட வார்த்தை இருக்கிறதே அந்தத் தொனி சரியல்ல. ஆகவே, இதுபோன்ற பழைய வழக்கங்களை விட்டு விட்டு நாட்டின் அரசியல் தன்மைக்கேற்ப வழிவகைகளைக் காணவேண்டும். அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வேலை செய்கின்ற தோழர்களை எல்லா நகரங்களிலும் ரௌடி லிஸ்டில் வைத்துக்கொண்டு, இரவு 12 மணிக்கு, 1 மணிக்கு வீடுகளில் சென்று கதவைத் தட்டி எழுப்புகிறார்கள். இந்த நிலை இன்னும் மாறவில்லை. அந்தத் தோழர்கள் செய்த பாவம் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார்கள் என்பதே ஆகும். வருமான வரி, ஆயிரம் ரூபாய் விற்பனை வரி கட்டுபவர்களுக்குக்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காகத் தொல்லைகள் கொடுத்துக்கொண்டு வருகின்றார்கள்.

பல பெரும் நகரங்களில் சமூக விரோதிகள் திடீரென்று கலவரங்களை ஆரம்பித்து விடுகின்றார்கள். போலீஸ் ஸ்டேஷனிலே போய் புகார் கூறி, போலீஸ்காரர்கள் தங்கள் சைக்கிளை எடுத்துக்கொண்டு அந்த இடத்திற்குப் போவதற்குள் அங்கே கத்தி வெட்டுகள் நடந்து விடுகின்றன. ஆட்கள் தப்பிவிடுகின்றார்கள். ஆகவே, குற்றம் நடக்கும் இடத்திற்கு விரைந்து செல்வதற்காக ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப் கார் தரப்படவேண்டும். ஜீப் காரை எடுத்துக்கொண்டு போலீஸ்காரர்கள் போனால் குற்றங்களைச் சரியான நேரத்தில் தடுக்க முடியும். சமூக விரோதிகள் பிடிப்படுவார்கள். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஜீப்களைத் தர இந்தப் பட்ஜெட்டிலே அதிகமாக பணம் ஒதுக்காததாலே, அமைச்சரவை இடைக்கால பட்ஜெட்டிலாவது தேவையான பணத்தை ஒதுக்கி நிச்சயமாகச் செய்வார்கள். அதை நிச்சயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பொதுவாக எங்களுடைய பகுதியில் 3 மணி, நான்கு மணி வரை மதத்தின் பெயரால் வில்லுப்பாட்டு என்று வைத்து மைக்கில் அனவுன்ஸ் செய்கிறார்கள். ஆனால் அரசியல் கூட்டத்திற்கு மட்டும் இரவு 10 மணிக்குமேல் மைக்குக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதாக முன்னால் இருந்த அரசு செய்திருந்தது. விடிய விடிய வில்லுப்பாட்டுக்கு அனுமதி கொடுக்கிறபோது சிறந்த அரசியல் கருத்துக்களைப் பேசுவதற்கு அனுமதி வழங்கினால் என்ன? ஆகவே,

குறைந்தது இரவு 12 மணி வரையிலாவது அரசியல் கூட்டங்களுக்கு மைக் வைக்க அனுமதி வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*** திரு. சோ. அழகர்சாமி:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, போலீஸ் இலாக்கா மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். இன்றைய போலீஸ் இலாக்காவின் நடவடிக்கைகளைப் பற்றி மதிப்பிற்குரிய சபை உறுப்பினர்கள் பல பேர் சொன்னார்கள். அதாவது, ஜனநாயக நாட்டுக்கு உகந்த முறையில் அந்த நடவடிக்கை இல்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. அதுவும் குறிப்பாக உழைக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் போலீஸ் இலாகாவின் மூலம் பலவிதமான தொந்தரவுகளுக்கு ஆளாகப்போகிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் போலீஸ் இலாகா மக்களை அடக்கி ஒடுவதற்குவதற்காக அமைக்கப்பட்டது. அதற்கேற்ற முறையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தார்கள். அதே முறைகள்தான் இன்னமும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குற்றம் செய்தவர்கள் உண்மையாகக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவதில்லை. குறிப்பாக ஹரிஜனங்கள் வசிக்கக்கூடிய பகுதிகளுக்கு வந்து பார்த்தால் தெரியும், ஒரு குற்றமும் செய்யாத தாழ்த்தப்பட்ட மக்களைப் பிடித்து பொய்யாகப் பல கேஸ்கள் அவர்கள் மீது போட்டு வதைக்கிறார்கள். கள் குடித்தார் என்றோ, சாராயம் காய்ச்சினார் என்றோ ஏழை எளிய மக்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

இப்போது சமீப காலமாக தஞ்சை மாவட்டத்தில் நிலச்சுவான்தார்களுக்கு அனுசரணையாக அவர்களது குடியிருப்பு மனைகளில் இருந்து வருகிறவர்களைப் பிடித்து வழக்குப் போட்டு, குடியிருப்பு மனையைக் காலி செய்வதாக அவர்களிடமே எழுதித்தரச் சொல்லி வாங்கி வருவதாக தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதேமாதிரியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவதானம் என்கிற தேவஸ்தானத்திற்கு உட்பட்ட நிலங்களில் சாகுபடி செய்கிற விவசாயிகளை, பெரியமனிதர்களின் தூண்டுதல் பேரில் அவர்களுடைய சாகுபடி நிலங்களில் பகலிலே கொள்ளையடிப்பதாக தகவல் வந்திருக்கிறது. இப்படி சாதாரண ஜனங்களின் வாழ்க்கையில் போலீஸ் குறுக்கிடுகிறபோது, அதை எடுத்துச்சொல்ல பொது ஜனப் பிரதிநிதிகள் போகிறபோது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்பதில்லை. சென்ற காலத்தில் இருந்து இப்படி அவர்கள் நடந்து வருவதை மாற்றி, மக்களுடைய பிரதிநிதிகள் நேரிடையாக போகிறபோது அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சந்தேகக் கேஸ்கள் என்று போட்டு சாதாரண ஏழை எளிய மக்களுக்கு போலீஸ்காரர்கள் இழைத்து வருகிற கொடுமை சொல்ல முடியாது. நிமனென்று போகிறார்கள். அங்குள்ளவர்கள் அத்தனைபேர்களையும் பிடித்து வந்துவிடுகிறார்கள். சந்தேகக் கேஸ்கள் என்று போடுவதைத் தடுத்துநிறுத்த வழி செய்யவேண்டும்.





அடுத்தபடியாக, தீ அணைக்கும் படை நமது ராஜ்யத்தில் 55 இடங்களில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக ஒவ்வொரு தாலுக்கா தலை நகரத்திலும் இந்தப் படையை வைத்தாக வேண்டும். தீ விபத்துக்கள் என்ன காரணத்தினாலோ இப்போது அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. கோவில்பட்டியின் பக்கத்தில்கூட சமீபத்தில் ஏற்பட்டது. 80, 90 ஹரிஜன மக்களின் வீடுகள் சேதமாயிருக்கின்றன. கோவில்பட்டிக்கு 40 மைல் தூரத்திற்குள் தீ அணைக்கும் படையில்லை. ஆகவே, கோயில்பட்டியில் தீ அணைக்கும் படையை நிறுவவேண்டும். ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்திலும் ஏற்படுத்தவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்கள் குறைந்த வருமானத்தினால் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறது. அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் எல்லா இடத்திலும், எல்லா ஊர்களிலும் டீ கடைகள் மாதிரி அரிஷ்டக் கடைகள் வந்துவிட்டன. மருந்துக் கடை என்று லைசென்ஸ் வாங்கி, போதை தரக்கூடிய வஸ்துக்களை விற்கிறார்கள். இந்த அரிஷ்டக் கடைகளைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. பி. ஜயராஜ்:** தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற போலீஸ் மானியத்தின் மீது எங்கள் கட்சியினர் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று நடைபெறுகிற புதிய அரசாங்கத்தில் நாட்டில் அமைதியும், நல்ல நியாயமும் கிடைக்குமென்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். போலீஸ் இலாக்காவின் பொறுப்பை முதல் அமைச்சர் அவர்களே எடுத்துக்கொண்டிருப்பதனால் நீதி நிலவும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அதற்கு நேர்மாறாக தேர்தல் முடிந்த பிறகு காங்கிரஸ்காரர்கள் மீது பழிவாங்க போலீஸ் அதிகாரங்களில் கட்சிக்காரர்கள் தலையிடுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

எனது பகுதி கொல்லுமாங்குடியில் 16—6—1966 அன்று இராமசாமி நாடார் என்பவர் இரவு வீட்டுக்கு வருகிற வழியில், குறுக்கு வழியில் சர்க்குலேஷன் பேரில் சம்பாதித்த லட்சாதிபதி ஒருவருடைய ஆட்கள் அவரை வழிமறித்து அடித்திருக்கிறார்கள். கைகால்களை கட்டி இழுத்துச் சென்றிருக்கிறார்கள். இது சம்பந்தமாகப் போலீசில் புகார் கொடுக்கப்பட்டது. அந்த லட்சாதிபதியையும் லிஸ்டில் சேர்த்தார்கள். ஆனால் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தலையிட்டு அந்த லட்சாதிபதியின் பெயரை நீக்கச் செய்துவிட்டார்கள். கவர்னர் அவரது உரையின் மீது விவாதம் நடந்த சமயம் மாவட்டச் செயலாளர் சென்னையில் என்னைத் தானாகவே சந்தித்து, இந்த வழக்கு சம்பந்தமாகதான் போய் இருந்ததாகக் குறிப்பிட்டார். நான் அவரிடம் சொன்னேன். வழக்கு வேண்டாம், நீங்கள் எனது ஊருக்கு வாருங்கள்

இரண்டு பேர்களையும் கூப்பிட்டு வைத்து குற்றம் யார் பேரில் இருந்தாலும் நடுநிலைமையில் சமாதானம் செய்து வைக்கலாம் என்பதாக. அவர் ஒப்புக்கொள்ளவில்லை. லட்சாதிபதியை நீக்கி விட்டதன் காரணமாக சாட்சிகளை அவர் பிரித்துவிட்டார், கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

அடுத்து 8—3—1967 அன்று மேற்கண்ட இராமசாமி நாடார் கொல்லுமாங்குடியில் சென்றுகொண்டிருக்கையில் அந்த லட்சாதிபதியின் ஆட்கள் அவரை வளைத்து அடித்து கைகால்களைக் கட்டி ரோடில் இழுத்துச் சென்று பில்லூரில் உள்ள பஞ்சாயத்து போர்டு கட்டடத்தின் அருகில் இம்சை செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் போலீசில் புகார் கொடுக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் குறுக்கிட்டு அந்த வழக்கில் முக்கியஸ்தர்களாக இருந்தவர்களை கேசில் இருந்து நீக்கிவிட்டார்கள். இப்படி போலீசில் கட்சிக்காரர்கள் தலையிடுவதனால் நியாயம் கிடைப்பதில்லை. பத்து சைக்கிள்கள் திருடிய குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு, கேடி லிஸ்டில் உள்ள ஒருவர் தி.மு.க. வினுடைய அடியாளாக மாறி சுமார் ஏழெட்டு காங்கிரஸ்காரர்களை அடித்திருக்கிறார். அவை அனைத்தும் போலீசில் புகார் செய்யப்பட்டது. இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஜூன்மாதம் ஆறும்தேதி 1967-ம் அன்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திருவேங்கடம் என்பவரை அடித்துக் கொன்று கொலை செய்துவிடப் போவதாக சிலர் பயமுறுத்தியதன் விளைவாக, அது குறித்து பல பேர் முறையிட்டதன் காரணமாக சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் இலாக்காவிற்கும் எனக்கும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். காப்பி எனக்கும் வந்திருக்கிறது. அதைச் சபாநாயகர் மூலமாக முதலமைச்சருக்கு நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். பணக்காரர்—லட்சாதிபதி என்று சொல்லக்கூடியவர்—இந்தக் கட்சியின் சார்பில் போர்வையைப் போர்த்திக்கொண்டு, ஆட்சிக்குக் களங்கம் விளைவிக்கும் முறையில் ஏதேதோ செய்து கொண்டு வருகிறார். பில்லூரில் திருமேனிப்பிள்ளை என்பவருடைய சுமார் நான்கு ஏக்கர் நிலத்தை பாவட்டக்குடி கிராம முனிசிப் நான்கு ஆண்டுகாலமாக தரிசாக வைத்துக்கொண்டிருக்கிறார். காங்கிரஸ் அரசாங்கக் காலத்திலேயே சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் மனுக் கொடுத்துங்கூட அந்த நிலம் உரியவருக்குக் கிடைக்காமலிருக்கிறது. இதற்கு ஒரு கமிட்டி போட்டு விசாரித்தால் உண்மை விளங்கும். சம்பந்தப்பட்டவருடை தகப்பனார் பி.டபிள்யூ.டி. கண்டிராக்டராக இருக்கிறார். அவர் பட்டா மானியக்காரர். பஞ்சாயத்து யூனியன் கண்டிராக்டராகவும்இருக்கிறார், வசதி உள்ளவர்களும், மற்றவர்களும் தலைவர் என்றும் காரியதரிசி என்றும் சொல்லிக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததன் காரணமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சம்பந்தப்பட்ட அந்த இலாகாவில் உள்ளவர்களையும் அணுகி, இத்தகைய நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதனை உடனடியாகப் பரிசீலனை செய்யவேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளாவிட்டாலும், முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு



வருகிறேன். தங்களுடைய கட்சியைச் சேர்ந்த யாராவது ஒருவரை வைத்துக்கொண்டு, இதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும். சட்ட ரீதியாக எப்படியிருந்தாலும் நியாயம் எந்தப் பக்கம் இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன்.

எனக்கு முன் பேசிய உறுப்பினர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள், சட்டசபை உறுப்பினராக வந்த இந்த மூன்று மாதங்களில் எந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கும் தான் செல்லவில்லை என்றும் எந்தப் போலீஸ். சப்-இன்ஸ்பெக்டரையும் அணுகி எதையும் சொல்லவில்லை என்றும் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் சொல்கிறேன்—கடந்த பத்தாண்டுக் காலமாக நான் சட்டசபை உறுப்பினராக இருந்த காலத்தில் நான் எந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கும் செல்லவில்லை. ஐ.ஜி-யையோ மற்ற எந்தப் போலீஸ் அதிகாரியையோ நான் அணுகியதில்லை. விவசாயத் தொழிலாளர்களுடைய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அல்லது தொகுதிப் பிரச்சினையாக இருந்தாலும், நானே நேரில் சென்று பல காரியங்களைச் சுமுகமான முறையில் நல்ல முறையில் பேசித் தீர்த்துக்கொண்டு வருகிறேன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். நேரம் அதிகம் இல்லாத காரணத்தால், என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்ற இந்த நேரத்தில், எனக்கு வந்திருக்கும் மகஜரை சபாநாயகர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

**திரு. பி. வேலுசாமி:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உள்ள போலீஸ் நிர்வாகம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறப்பான செயலைச் செய்கின்ற ஒரு போலீஸ் நிர்வாகம் என்பது பல சான்றுகளிலிருந்து தெரிய வருகின்றது. மற்ற மாநிலங்களிலே பிடிக்கமுடியாத பல கேஸ்களை தெற்கு மாநிலத்தில் இருக்கின்ற போலீஸ்காரர்கள் சென்று பிடித்து இருக்கிறார்கள், என்பதை நாம் காண்கிறோம். அதிலே எல்லாம் நாம் பெருமிதம் கொள்கிறோம். தெற்கே இருக்கும் போலீசானது இவ்வளவு சிறப்பாக பணிசெய்வதோடு மட்டும் அல்லாமல் வடக்கே இருக்கிறவர்களுக்கு ஒரு புதிய வழிகாட்டியாகவும் அமைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

அந்த நிலைமையில் பார்த்தால் போலீஸ் நிர்வாகத்தை முதன் முதலில் தொடங்கிவைத்த வெள்ளைக்காரர் இந்த நாட்டை நிரந்தரமாகவே அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்ற ஒரு குறிக்கோளை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதற்கேற்ப சட்டங்களையும் விதிகளையும் நிர்மாணித்துக் கொண்டு இருந்தான். வெள்ளைக்காரன் தனது நாட்டில் இருக்கும்படியான போலீஸ்காரர்களுக்கு ஒரு நீதியும், அதேநேரத்தில் அவன் ஆட்சிக்குக் கீழே இருந்த இந்திய உப கண்டத்தில் போலீஸ்காரர்களுக்கு வைத்திருக்கும் சட்டமும் நீதியும் நிரந்தரமாக இந்த நாட்டை அடிமையாகவே வைத்திருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் நாம் காண்கிறோம்.

இந்த நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் நாடு வந்த பிறகு போலீஸ் நிர்வாகத்தில் கொஞ்சம் மாறுதல் ஏற்படுத்தி அவர்களுடைய உணர்வுகளில் எண்ணங்களில் புதுமையைப் புகுத்த ஏதாவது செய்யப்பட்டிருக்குமானால் அது நன்றாக சிறப்பாக அமைந்து இருக்கும். ஆனால், இப்போது வந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் சாதாரண மக்களுடைய ஏழை எளிய மக்களுடைய எண்ணங்களைப் பிரதி பலிக்கிற சர்க்கார் என்கிற முறையிலே இன்றைய போலீஸ் அமைப்பில் அவர்களுடைய உள்ளப் பாங்கினையும் உணர்வுகளையும் கொஞ்சம் மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களேயானால் அது சிறப்பாக அமையுமென்று நான் கருதுகிறேன்.

அந்நிலையில் சாதாரணமாக குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க பயிற்சி அளிக்கின்ற நேரத்திலே கூட, அவர்களை பலாத்காரமாக இம்சித்து குற்றத்தைக் கண்டுபிடிக்கத் தான் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படி பலாத்காரமாக இம்சிக்கப்படுகிற நேரத்தில் சாதாரணமாக இருக்கும் ஒன்றும் அறியாத பாமரர்களும் தான் இம்சைக்கும் தொல்லைக்கும் கஷ்டத்திற்கும் ஆளாக வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அதற்குப் பதிலாக விஞ்ஞான ரீதியில் (சயன்டிபிக் முறையில்) குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க ஒரு புது முறையிலே ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமானால் அது சிறப்பான அம்சமாக இருக்கும், சிறப்பான பணியாக இருக்கும். அந்த முறையில் தென்னகத்திலே இருக்கும் போலீஸ் நிர்வாகம் ஒரு புதுத் திருப்பத்தை ஏற்படுத்த வகை செய்தால் வடக்கே இருக்கும் மாநிலங்களுக்கு ஒரு புதிய வழிகாட்டியாகவும், புதிய அம்சமாகவும் விளங்குமென்று கருதுகிறேன். குற்றவாளிகளை அடித்து, உதைத்து இம்சை செய்து அந்த இம்சையின் பெயரால் குற்றத்தைக் கண்டுபிடிப்பது என்ற இப்போது இருக்கும் பயிற்சி முறைகளுக்கு மாறான பயிற்சி முறைகள் உருவாக வேண்டும் உருவாக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்களில் பலர், போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லும்போது அங்கே இருக்கும் பயங்கரமான சூழ்நிலைகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு உள்ளே சாதாரணமாகச் செல்லும்போது ஏழைக் குடிமகன், அவன் உள்ளத்தில் ஒரு பெரும் பயமும், பீதியும், நடுக்கமும் கொண்டுதான் செல்கிறான். அப்படி ஏற்படுவதற்குக் காரணம் பாரம்பரியமாக, வழக்கமாக, தொன்றுதொட்டு வந்து இருக்கும் நிலைமையாக இருக்கலாம். அந்தத் தொன்று தொட்டு வந்து இருக்கும் நிலைமையும் ஒரு பாரம்பரியமான பழக்கமும், அந்த உணர்வும் சாதாரண மக்களிடத்தில் கொஞ்சம் மாறும் நிலைமை ஏற்படவில்லை என்றால் அது பாரம்பரியமாக வெள்ளைக்காரன் காலத்திலும் காங்கிரஸ் கட்சியின் காலத்திலும் இருந்து வந்த நிலைமையாகும். ஆனால், இப்போது இருக்கும் சர்க்கார், சாதாரண ஏழை மக்களுடைய உணர்வுகளையும் புரிந்து இருக்கும் சர்க்கார் ஆக இருக்





கின்ற காரணத்தால், உள்ளுணர்வுகளை மாற்றுவதற்கான வழி வகைகளைக் காண வேண்டுமென்று இந்த நோக்கில் நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல், சாதாரணமாக ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு இத்தனை குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அப்படி நிர்ணயித்து வைத்திருப்பதன் காரணமாக சாதாரண மக்களையும் ஆங்காங்கே செல்கிற பாதசாரிகளையும் அழைத்து வந்து, ஏதோ குற்றம் செய்ததாகச் சொல்லி, அபராதம் விதிக்கிற முறையைத் தயவு செய்து, இனியாவது மாற்றிக்கொண்டு, எந்தப் போலீஸ் ஸ்டேஷனில் குற்றம் குறைவாக இருக்கிறதோ அந்தப் போலீஸ் ஸ்டேஷனை உற்சாகப்படுத்துகிற முறையை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கான்ஸ்டபிள் வேலைக்கு ஆட்களை ரெக்ரூட் செய்யும்போது தகுதி படைத்த நல்லவர்களாக எடுப்பது வழக்கமாக இருக்கவேண்டும். சாதாரணமாக ஒன்றும் அறியாதவர்களை போலீஸ்காரர்களாக எடுக்கின்ற பழக்கம் மாறி வாஸ்தவமாகவே திறமை இருக்கிறவர்களையே எடுத்துக்கொள்ளவேண்டும். குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி. படித்த நபர்களையே போலீஸ்காரர்களாக எடுப்பதோடு அவர்களுக்கு வீட்டுவசதி போன்றவற்றையும் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. கு. கிருஷ்ணமூர்த்தி:** அவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக் 11-5
களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ் பிரிவில் மு.ப
தீ அணைக்கும் படை இருக்கிறது. அந்த தீ அணைக்கும் படையினருக்கு போதுமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அவர்களுக்கு அந்த நிலையங்களுக்குப் பக்கத்திலேயே வீடுகள் கட்டிக் கொடுத்து உதவ வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள் கிறேன். சிக்கன நடவடிக்கையை உத்தேசித்து, இப்போது போலீஸ்காரர்களுக்கு கொடுக்கப்பட்டுவரும் பூட்ஸை மாற்றி சப்பல்ஸ் ஆக கொடுத்து உதவினால் நன்றாக இருக்கும். மேலும், ஒவ்வொரு சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும் ஒவ்வொரு ஜீப் கொடுத்து உதவினால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பேசும்போது இந்த மூன்று மாத காலத்தில் காங்கிரஸ்காரர்களுக்கு போலீஸ்காரர்கள் மிகவும் தொல்லை கொடுத்து இருப்பதாக குறிப்பிட்டார்கள். உண்மையாக நடந்த சம்பவம் ஒன்றை மட்டும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். பழனியில் நான் இருக்கும் 8-வது வார்டில் காங்கிரஸ் தீவிரவாதி ஒருவர் தன்னுடைய கடையிலே நேருஜியின் படத்தை வைத்துக்கொண்டு காமராஜரின் படத்தை வைத்துக்கொண்டு, காந்தி மஹானின் படத்தையும் வைத்துக் கொண்டு அதற்குப் பின்னால் சாராய வியாபாரம் செய்துகொண்டு இருந்தார். அது குறித்து சென்ற ஐந்து ஆண்டு காலமாக போலீஸாரிடம் முறையிட்டு அதன் பேரில் போலீசார் சம்பந்தப்பட்டவர்களை பிடிக்கப் போகும்போது காங்கிரஸ்காரர்கள் தலையிட்டு அவ்வா

[திரு. கு. கிருஷ்ணமூர்த்தி] [1967 ஜூலை 5

12.00 ந.ப யாக நின்று கேஸ் போடவிடாமல் செய்துகொண்டு இருந்தார்கள். நான் நம்முடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு டி.ஐ.ஜி. திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களைச் சந்தித்து, அங்கே தொல்லை தாங்கமுடியவில்லை ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லி அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட தற்கு இணங்க அவர்கள் சென்னையிலிருந்து 15 தினங்களுக்கு முன்பு அங்கே ரகசியமாக ரகசிய போலீசை அனுப்பி சோதனை செய்து 75 லிட்டருக்கு மேல் சாராயத்தையும், கஞ்சாவையும் கண்டுபிடித்து கேஸ் எடுக்கப்பட்டிருக்கிறது.

(திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமை)

காங்கரஸ்காரர்கள் காங்கிரஸ் என்று பெயரால் எல்லா சமூக விரோதச் செயல்களையும் செய்து கொண்டு இருக்கிறார்கள், அதைப் பார்த்துக்கொண்டு சர்க்கார் சும்மா இருக்கக் கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போலீஸாருக்கும் நாம் இன்னும் அதிகமாகப் பாதுகாப்பு கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் இன்னும் தீவிரமாக அவர்களுடைய வேலையிலே பாடுபடுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் போலீஸாருக்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கொடைக்கானலிலே, இதுபற்றி சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், ஒரு போலீஸ்காரர் பஸ்ஸிலே இருந்து இறங்கியவுடன் அவருடைய சாமான்களை எல்லாம் ஒரு ஏழை விவசாயியைப் பார்த்து அவற்றையெல்லாம் ஸ்டேஷனுக்குக் கொண்டுவா என்று சொன்னாராம்; என்னால் தூக்கமுடியாது என்று அந்த விவசாயி சொன்னதற்குப் பிறகு அவரை போலீஸார் ரத்தம் சொட்ட, சொட்ட அடித்திருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும் பயமாக போய்விட்டது. ஏழை எளியவர்களை போலீஸார் துன்புறுத்துகிறார்கள். அந்த நிலைமை மாறவேண்டும். ஏழை எளியவர்களை போலீஸ் ஸ்டேஷன் பக்கம் போகவே பயமாக இருக்கிறது. ஜாமீனுக்குப் போவதாக இருந்தாலும் சரி வேறு எதற்காகப்போவதாக இருந்தாலும் சரி பயமாக இருக்கிறது. சும்மா வா என்று போலீஸார் கூட்டிக்கொண்டுபோய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது. இது மாறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸார் சில வேளைகளில் தவறாக நடந்துகொள்கிறார்கள். ஆகவே, ஏழை எளியவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வாய்ப்புக் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** கனம் தலைவர் அவர்களே, நான் இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினத்திலே மிகத்தெளிவாகச் சொன்னார்கள். வாசியலுக்கு அப்பாற்பட்ட நிலையிலே இந்தத் துறையை வைத்திருக்கிறேன் என்பதைச் சொன்னார்கள். அதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். ஏற்கனவே ஆட்சியிலே உள்ளவர்கள், சட்ட மன்ற அங்கத்தினர்களில் பெரும்பாலோர் கடந்த தேர்தலிலே என்ன



1967 ஜூலை 5] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

பாடு பட்டார்கள் என்பது நமக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். என்னைப் பொறுத்தவரையில், என்னையும் என்னை ஆதரித்தவர்களையும் 'பொலிடிகல் ரௌடிஸ்' என்று வைக்கக்கூடிய நிலைமைக்குப் போய்விட்டது. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபொழுது அதிகாரிகளும் மற்றவர்களும் "Loyal to the Government loyal to the boss" இதற்கு அவர்களைத் தப்பு என்று சொல்லமுடியாது, அவர்கள் 15 வருஷ காலமாக ஆட்சியில் இருக்கிறார்கள், இனிமேல் அவர்கள்தான் வருவார்கள், பிரமோஷனுக்கோ, மற்றவைக்கோ நல்லது என்றுதான் அப்படி இருந்தார்கள். இப்பொழுது ஆட்சி மாறியிருப்பதால் அதிகாரிகளுக்கெல்லாம், relief to the officers ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், சட்டங்கள் எல்லாம் நல்லவைகள்தான், தீயவை செய்யக்கூடியவர்களுக்குச் சட்டங்கள் அவசியம் தேவைதான். ஆனால் அடித்தளத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் சரியாகச் செய்கிறார்களா என்பதுதான் பிரச்சினை. கடந்த தேர்தலிலே அதிகாரிகளைக் கேட்டால் நான் என்ன செய்வது, மேலே இருக்கிற அதிகாரிகள் அப்படிச் சொன்னால் நாங்கள் என்ன செய்வது என்றுதான் சொன்னார்கள்.

இதிலே நான்கு முறைகள் வைத்திருக்கிறார்கள். ஒன்று சந்தேக கேஸ், இரண்டாவது சாராயக் கேஸ், மூன்றாவதாக ப்ரீச் ஆப் பீஸ் என்று போடுவார்கள், அதாவது, சாதாரணமாக சிவில் மேட்டரில் இறங்கிவிடுகிறார்கள் கேஸ் போட்டுவிடுகிறார்கள் அதற்கும் ஒரு சட்டம் இருக்கிறது. எந்தத் துறையிலேயும் சட்டத்திலே சாதகங்களும் பாதகங்களும் இருக்கின்றன. சாராய கேஸ் சம்பந்தப்பட்ட மட்டில் சாராய பாட்டிலைக் கொண்டு வந்து வைத்து பிடித்துக் கொள்ளுகிறார்கள். சந்தேக கேஸ் பொறுத்த வரையில் அரசாங்கம் சொல்லுகிறார்கள்; டார்ஜெட் பிக்ஸப் பண்ணி வைத்திருக்கிறார்கள் இத்தனை கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்று டெபுடி சூப்பிரண்டெண்ட் இன்ஸ்பெக்டருக்குச் சொல்கிறார். இன்ஸ்பெக்டர் சப்-இன்ஸ்பெக்டருக்குச் சொல்கிறார். சப்-இன்ஸ்பெக்டர் ஹெட்கான்ஸ்டபிளுக்குச் சொல்கிறார், எத்தனை கேஸ் பிடித்தாய், ஏன் பிடிக்கவில்லை என்று கேட்கிறார். அந்த முறையில் சொன்னவுடன் ஏதாவது செய்தாகவேண்டுமென்ற முறையில் ஒரு சில சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் அரசாங்க அதிகாரிகள் மனதிலே கொண்டு அதை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக என்னுடைய தொகுதியில் தேவதானம் கிராமத்திலே ஒரு பெரிய நிலத் தகராறு. அந்தத் தகராறிலே கோர்ட்டிலே இரண்டு பேர்களும் உள்ளே போகக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் அந்த தாலுகா சப்-இன்ஸ்பெக்டர் போலீஸாரைக் கையில் வைத்துக்கொண்டு இரவு நேரங்களிலே ஒன்றும் தெரியாததுபோல் செய்துகொண்டு வருகிறார்கள்.

ஆகவே, இதையெல்லாம் கவனிப்பதற்கு மேலே உள்ள அதிகாரிகள் நேரடியாக வருடத்திற்கு ஒன்றிரண்டு முறைகள் ஜில்லா வாரியாக வரவேண்டும். அப்படி வந்தால் நாங்கள் பொதுஜனப் பிரதிநிதிகள் எங்களுக்குள்ள குறைகளைச் சொல்ல வசதியாக இருக்கும், அப்படிச் செய்கிற அதிகாரிகளுக்கும் ஒரு பயம் இருக்கும், பொதுவாக ஒரு செக் இருக்கும்.

அடுத்தபடியாக, பொதுவாகவே டைரக்ட் ரெக்ரூட்மென்ட் இருக்கவேண்டும். ஹெட் கான்ஸ்டபிளாக இருப்பவருக்கு பிரமோஷன் கொடுத்தால் அது வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்டது, அப்பொழுது பணக்காரர்கள் ராவ்பகதூர்கள் போன்றவர்களையும் ப்ரொமோஷனுக்காக அரசியல்வாதிகளையும் பிடிக்கவேண்டும், ஆனால் இப்பொழுதும் அப்படியே இருப்பதால் பிரமோஷனில் வருகிறவர்கள் விருப்புவெறுப்புக்கேற்ற முறையில் காரியங்களைச் செய்வார்கள். ஆகவே, அப்படியில்லாமல் செய்வதற்காக டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் என்ற முறையில் செய்துவிட்டால் எந்த அரசியல்வாதியாக இருந்தாலும் நியாயமாகக் காரியங்களைச் செய்வார்கள்.

அடுத்தபடியாக, போலீஸாருடைய சம்பளத்தைக் கூட்ட வேண்டும். அது பெரிய தொல்லையாக இருக்கிறது. ஏழு எட்டுக் குழந்தைகள் உள்ளவர்கள் எல்லாம், பாவம் என்ன செய்வார்கள் ? சம்பளம் காணாத நேரத்தில் வெகுவேகமாக ஜாக்கிரதையாக இருப்பார்கள் யார் லைட் இல்லாமல் வருகிறார்கள், யார் டபுள்ஸில் சைக்கிளில் வருகிறார்கள் என்று கவனமாகப்பார்ப்பார், அவரிடம் ஒரு நோட்டு நீட்டினால் அதை அவர் வாங்கிக்கொள்வார், இப்படித்தான் நிலைமை இருக்கிறது, எல்லோரையும் நான் சொல்லவில்லை. அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக அவர்களுக்கு நேரடியாக எதுவும் கொடுக்காவிட்டாலும் அவர்களுக்கு வீட்டு வசதியும், அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் போன்றவற்றைச் செய்துகொடுத்து அவர்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் திடீர் திடீரென்று மாற்றாமல் இருக்கவேண்டும். பொதுவாகவே முதலமைச்சர் அவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்கு ஒன்று சொல்லவேண்டும். அதாவது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பெரிய அதிகாரிகள் ஜில்லாவாரியாக வந்தால்தான் அவர்கள் அங்கங்கே உள்ள குறைகளைச் சொல்லுவதற்கு வசதியிருக்கும், அவர்களுக்கும் ஒரு செக் இருக்கிறது என்ற பயம் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. பி. எஸ். எல்லப்பன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியத்தப்பற்றியும் வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றியும் நான் இப்பொழுதுதான் சொல்லப் போகிறேன். இந்த வரவுசெலவு திட்டங்களை எல்லாம் அரசியல் ஞானிகள் எல்லாம் போற்றியிருக்கிறார்கள். திரு. ராஜாஜி அவர்கள் போற்றியிருக்கிறார்கள், பெரியார் அவர்கள் போற்றியிருக்கிறார்கள். திரு. சிவஞானம் அவர்கள் போற்றியிருக்கிறார்கள் ; அத்தனை பேர்களும் போற்றியிருக்கிறார்கள் ; அதிகாரிகளும் போற்றியிருக்கிறார்கள்; சபையில் உள்ள அங்கத்தினர்களும் போற்றியிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியினர் தங்கள் கட்சிக்காக ஏதோ நான்கு வார்த்தைகள் பேசவேண்டும் என்பதற்காக "அதிலே இது சரியில்லை, இதிலே அது சரியில்லை, இப்படிக் கொண்டு வரவில்லை, அப்படிக் கொண்டுவரவேண்டுமென்று"





எல்லாம் குதர்க்கம் பேசிவருகிறார்கள். "இது நல்லதென்று கண்டால் அதை நாயகனுக்கு நல்குவோமே" என்பது தாயுமானவருடைய பாடல். ஆகவே எது நல்லது என்று படுகிறதோ, எது மக்களுக்கு பயன் உள்ளதாய் இருக்கிறதோ அவற்றைத் தான் அரசாங்கம் செய்கிறார்கள். அப்படிச செய்வது கடவுளுக்குச் செய்கின்ற தொண்டுக்குச் சமமானதாகும். பகவானுடைய பாதத்தில் இந்த பட்ஜட்டை வைக்கவேண்டும். எல்லோரும் இதைப் போற்றுகிறார்கள். எனக்குப் பேச முடியவில்லை. கை கால் எல்லாம் உதறுகிறது. எப்படியும் பேசியாக வேண்டுமென்று கட்சிக்காரரைக் கேட்டுக் கொண்டேன். என்ன பேசப் போகிறாய் என்றார்கள். எப்படியாவது நாலு வார்த்தை சொல்லவேண்டுமென்று இப்போது பேசுகிறேன்.

போலீஸ் மானிய விவாதத்திலே எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன சொல்வதற்கு திருப்பித் திருப்பி அரைத்தாலும் அம்மியிலே தானே வைத்து அரைத்தாகவேண்டும் என்பதுபோல் திரும்பத் திரும்ப பேசுவதில் என்ன பிரயோசனம்? 1948-ல் இருந்தே நான் இந்தப் போலீஸ் விவகாரத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வருகிறேன். இவ்வளவு வருஷங்களாக பிரதிநிதி என்ற முறையில் தாலுகாவினுடைய கஷ்ட நஷ்டத்தை அறிந்து சொல்லி வந்தேன். இதுவரை இந்தச் சர்க்கார் கேட்கவில்லை. கடந்த மே மாதம் 6-ம் தேதி பிரசிடென்ட் எலக்ஷன் நடந்தபோது ஹோம் செகரடரியைப் போய்ப் பார்த்தேன். அதற்கு முந்தியும் பார்த்திருக்கிறேன்; மூன்று தடவையாகப் பார்த்து வருகிறேன். அவர் கடைசியாகச் சொன்னார்—' ஐ.ஜி. அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள் ' என்று. உடனே, அவர் நடவடிக்கை எடுத்துக் கொள்வார் என்றும் சொன்னார். ஐ ஜி அவர்களைப் போய்ப் பார்த்தேன். அவர் உட்கார வைத்து, ரொம்ப அமைதியாக, அழகாக ' என்ன சமாசாரம், எந்த ஊரிலிருந்து வந்தாய் ? ' என்றெல்லாம் கேட்டார். எங்கள் ஊர் சூளூர்பேட்டை. அவுட் போஸ்ட் போலிஸ் ஸ்டேஷனை ரிக்கார்டு ஸ்டேஷனாக மாற்றவேண்டும் என்று சொன்னேன். 'நான் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன், ஆனால் மினிஸ்டர் லெவலில் ஒரு வார்த்தை சொல்லி வையுங்கள், சுருக்கமாகக் காரியம் முடிந்து விடும்' என்று சொன்னார்.

சூளூர்பேட்டை பகுதி 30 கிராமங்கள் அடங்கியது. அங்கு ஒரு அவுட் போஸ்ட் போலிஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அதிலே உள்ள நான்கு போலிஸ்காரர்களில் இரண்டு பேர் வெளியே போயிருப்பார்கள்; ஒருவர் லீவில் போயிருப்பார். ஒருவர் துப்பாக்கியைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார். அடுத்த தெருவில் குடித்துவிட்டு அடித்துக் கொண்டிருப்பார்கள்; போலிஸ்காரனிடம் அதைப் பற்றிச் சொன்னால் ' நான் போனால் என்னை அடிப்பான் ' என்று சொல்லுவான். தெருவுக்குத் தெரு சாராயம் விற்கிறதே, அவர்களைப் பிடிக்கக்கூடாதா என்று கேட்டால் ' அந்தச் சேரிக்குள்ளே நுழையவே பயமாக இருக்கிறது ' என்பான். மேற்கொண்டு அதிகமாகப் போலிஸ்காரர்களைப் போட வேண்டுமென்று

சொன்னாலும் போடப்படுவதில்லை. சிதம்பரத்துக்கும், குறிஞ்சிப்பாடிக்கும் இடையில் 11 மைல் இருக்கிறது. எந்தக் கேசாக இருந்தாலும் சிதம்பரத்துக்குத்தான் கொண்டு போக வேண்டியிருக்கிறது. இதனால் அங்கு 3 கொலைகள் கூட நடந்திருக்கின்றன. இத்தனை முயற்சி எடுத்தும் இன்னும் குறிஞ்சிப்பாடி ரிக்கார்டு ஸ்டேஷனாக மாற்றப்படவில்லை. ஆகவே, அதை உடனடியாக ரிக்கார்டு ஸ்டேஷனாக அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சூழ்நிலையில் கள்ளச் சாராயம் காய்ச்சும் வாய்ப்பு அதிகம் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த நிலைமையில் கள்ளுக்கடைகளைத் திறக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தக் காலத்தில் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு உதைபட்டேன். என்னைப் போல் எந்த ஒரு காங்கிரஸ்காரனும் கூட மறியலில் ஈடுபட்டு உதைபட்டிருக்கமாட்டான். 'ஒழிக—வாழ்க' என்ற முறையில் கூச்சல் போட்ட காலம் அது. ஆகவே, முதலில் கள்ளுக்கடையைக் கொண்டு வந்து விட்டு மறு காரியம் பாருங்கள். அதற்காகவே எனக்கு 11,00 பேர் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். சாமி, எப்போது கள்ளுக்கடை வருகிறது?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'இதோ வந்து விட்டது' என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதை அமுல் படுத்தவில்லையென்றால், அடுத்த எலக்ஷனில் வானத்தைத்தான் பார்க்கவேண்டும். அதற்காகத்தான் அட்வான்சாக இப்போதே சொல்லிவிட்டேன். மீதி விஷயங்களைப் பிறகு பேசுகிறேன். வணக்கம்.

**திரு. எஸ். முத்துலிங்கம்:** கனம் தாற்காலிகத் தலைவர் அவர்களே, 1967-68ம் ஆண்டுக்கான போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து சிலபல கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

தாலுக்கா தலைநகரங்களில் உள்ள போலீசாருக்கு ஒரு ஜீப் கார் கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். கொலை கேஸ்கள் போன்றவை கிராமங்களில் ஏற்படும்போது உடனடியாக தகவல் கிடைத்தவுடனே சென்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு தற்போது வசதி இல்லை. ஆகவே, தாலுக்கா தலைநகரங்களில் இருக்கக்கூடிய ஒவ்வொரு போலீஸ் நிலையத்திற்கும் ஜீப் கார் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பல கிராமங்களில் பாமர மக்கள் மீது போலீசார் வேண்டுமென்றே பொய் கேஸ்களைப் போட்டுத் துன்புறுத்துகிறார்கள். அம்மாதிரி நிலைமைகள் ஏற்படாதபடி சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஊர்க்காவல் படையில் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களைச் சேர்த்துக் கொண்டால், சாலச் சிறந்ததாக இருக்கும். அவர்களுக்கு டிரெயினிங் கொடுப்பதற்கு அவசியமில்லாதபடி நல்ல முறையில் செயல்படுவார்கள். போலீஸ்காரர்கள் குடியிருப்பதற்கு வீட்டு வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வசதியை உடனடியாக அமைத்துத் தர சர்க்கார் வழிவகை செய்யவேண்டும். கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும்





தொலை பேசி ஒன்று வைக்கவேண்டும். போலீஸ்காரர்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பந்தோபஸ்துக்காக அனுப்பப்படும்போது அவர்களுடைய சாப்பாட்டுச் செலவுக்குக் கொடுக்கக்கூடிய பணம் மிகக் குறைவாக இருக்கிறது. ஒருநாளைக்கு அவர்களுக்கு 1¼ ரூபாய் வீதந்தான் கொடுக்கிறார்கள். அந்தத் தொகையை இப்போதிருக்கும்படியான விலைவாசியை அனுசரித்து 2½ ரூபாயிலிருந்து 3 ரூபாய் வரை கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும். போலீசார் குடும்பத்திலே உள்ள மாணவ மாணவிகளுக்குக் காலேஜுகளில் சேர்ந்து படிப்பதற்கு மற்றவர்களுக்குக் கொடுப்பது போல எல்லாச் சலுகைகளையும் தருவதற்கான வழிவகை செய்யவேண்டும். கிராமப் பகுதிகளில் பெருவாரியான ஏழைக் குடும்பங்களில் கூரை வீடுகள் தீப்பற்றி எரிந்து விடுகின்றன. கிராமப் பகுதித் தலைநகரங்களில், குறிப்பாக வந்தவாசியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர சர்க்கார் ஆவன செய்ய வேண்டும். போலீஸ் இலாகாவிலுள்ள எல்லா அதிகாரிகளும் நியாயத்தையும், நேர்மையையும், சத்தியத்தையும் நேர்மையாகக் கடைப்பிடித்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை முழு மனதோடு ஆதரித்து உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். சிவசுப்ரமணியன்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற முன் வந்துள்ளேன். போலீஸ் வேலையாவது ரொம்பவும் கடினமான வேலை. இந்த வேலைக்குத் தகுந்த மாதிரி ஊதியம் கிடைக்கிறதா என்றால் இல்லை. அவர்களுக்கு அதிக அளவுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ்காரர்கள் கடமையைச் செய்யக்கூடியவர்கள். கடமையைச் செய்யும்போது அவர்களைத் தடுக்கக்கூடாது. தடுத்தால் அரசாங்கத்தையே அது பாதிக்கும். தமிழ்நாடு போலீசாரைப் பற்றி வெளி மாநிலங்களில் உள்ளவர்கள் எல்லாம் புகழ்ந்து இருக்கிறார்கள். அப்படிப் புகழ்ந்து பேசப்படுகிற போலீஸ்காரர்களுக்கு இப்போது இங்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறதா என்றால் இல்லையென்றுதான் சொல்ல முடியும்.

உதாரணமாக, இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்ட பல தோழர்களை விடுதலை செய்திருக்கிறது இந்த அரசு. ஆனால் கோர்ட்டில் தகுந்த தண்டனை கொடுத்திருக்கிறார்கள். இப்படி இந்த அரசு அவர்களை விடுதலை செய்திருப்பதால் லா அண்ட் ஆர்டருக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. குற்றவாளிகள் போலீசைக் கண்டு பயந்த காலம் போய் இப்போது அந்தப் பயம் இல்லை. ஆகவே, இது விஷயமாக நமது முதல் அமைச்சர் அவர்கள் சிறிது கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்களுக்கு ஒரு அறிக்கை விடவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். எங்கு பார்த்தாலும் ஹரிஜனங்களை ஜாதியைச் சொல்லி திட்டக் கூடிய அளவிற்கு இன்று நாட்டில் பரவலான நிலை இருந்து கொண்டு வருகிறது.

உதாரணமாக, போலீஸ் ஸ்டேஷனுக்கு ஹரிஜனங்கள் சென்றால், ஜாதியைச் சொல்லி அவர்களை ஏசக் கூடிய போலீஸ் இன்ஸ்பெக்டர்களும், போலீஸ்காரர்களும் இருக்கிறார்கள். அதுமாதிரி ஜாதியைச் சொல்லி மற்றவர்கள் திட்டினால் சட்டமிருக்கிறது அவர்களுக்குத் தண்டனை கொடுப்பதற்கு. ஆனால் போலீஸ்காரர்கள் திட்டினால், அதற்கு என்ன தண்டனை என்று கேட்டுக்கொள்வதோடு முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்கள் என்று சொன்னாலே போலீஸ்காரர்கள் அலட்சியமாக நடந்து கொண்டு வருவதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிதம்பரம் தாலுகாவைப் பொறுத்தவரையில், ஒரு சிறிய தகராறில் ஜாதி ஹிந்துவை எதிர்த்து பேசியதற்காக உடனே அங்குள்ள மணியக்காரர் அச்சு நோட்டீஸில் எழுதி போலீஸ் ஸ்டேஷனுக்கு, பத்து படி 12 படி நெல்லை தலையில் கட்டி வைத்து, இதை இவன் திருடி விட்டான் என்று போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்புகிறார். சப் இன்ஸ்பெக்டரிடம் நான் திருடவில்லை என்று அவன் சொன்னபோதிலும் அவனை அரெஸ்ட் செய்கிறார். அவன் ஒன்றும் தப்பு செய்யவில்லையே, இது நியாயமா என்று கேட்டால் மணியக்காரர் அச்சு நோட்டீஸ் எழுதி விட்டார் என்கிறார். அவர் அச்சு நோட்டீஸ் எழுதிவிட்டதால், அவன் குற்றவாளியாகவேண்டுமா? இதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது சிதம்பரம் தாலுகாவில் நடந்திருக்கிறது. இது விஷயமாக நல்ல முறையில் அறிக்கை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விழுப்புரத்தில் ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஒரு பெரிய தகராறு. சண்டையும் நடந்திருக்கிறது. கோர்ட்டில் கேஸ் இருக்கிறது. போலீஸ்காரர்கள் ஹரிஜனங்கள் மீது அனாவசியமாக பல கேஸ்களை போட்டுவிட்டார்கள். கோர்ட்டில் கேஸ் இருக்கலாம். நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. அங்குள்ள தாய்மார்களை, ஆதித்திராவிட பெண்மணிகளை அங்குள்ள போலீஸ்காரர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை இந்த சபையில் சொல்லாமல் இருக்கமுடியாது. வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அங்குள்ள ஆதித்திராவிட பெண்மணிகளை மான பங்கம் செய்திருக்கிறார்கள். மானபங்கம் செய்திருக்கிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்களிடம் மனு வந்திருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் ஒரு பெண் அல்ல, நாலைந்து பெண்களை அடித்திருக்கிறார்கள். துரத்தி துரத்தி அடித்திருக்கிறார்கள். குழந்தைகளை கீழே போட்டுவிட்டு ஓடும்படி அடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கலாமா? இது நியாயமா? இப்படிப்பட்டவை நடக்கக்கூடாது. மற்றவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு போலீஸ்காரர்கள் அடிக்கிறார்கள். அடித்த விஷயம் பற்றியும், யார் யார் அடித்தார்கள் என்றும் மனுவில்கூட எழுதி கொடுத்திருக்கிறார்கள். மானபங்கம் என்று சொன்னால், சாதாரணமானதல்ல, அவமரியாதைப்படுத்தும் அளவிற்கு, ஒரு சமுதாயத்தைக் கெடுக்கிற அளவிற்கு செய்திருக்கிறார்கள் என்பதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்கள் பகுதியில் திருடாத





வன் தவறி ஒரு நாள் திருடி விடுகிறான். நான்கு படி அரிசி அல்லது ஒரு அளவு திருடி விடுகிறான். அவனைப் பிடித்து இனிமேல் திருடாத அளவிற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்யவேண்டும். அதை விட்டுவிட்டு அவன் பேரில் சந்தேகத்தோடு பார்த்து அடிக்கடி அவன் வீட்டிற்குச் செல்வதால் நாணயஸ்தன், நல்லவன் ஊரிலுள்ள நாட்டாண்மைக்காரன் வீட்டிற்கு போலீஸ் செல்வதால் அவனை திருடனாக்கி விடும் முறையைத் தடுக்கவேண்டும்.

* திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தை ஆதரித்து பேசுமுகத்தான் போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்வதுபோல் போலீஸ் அதிகாரிகள். அதேமாதிரி இந்தத்தேசத்தில் போலீஸ் அதிகாரிகள் கான்ஸ்டபிள்ஸ் வேலை செய்பவர்கள் போல மகாபாவிகள் உலகத்திலேயே யாருமே கிடையாது. காரணம், அவர்கள் என்னதான் கஷ்டப்பட்டாலும் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் எந்தவித வசதியுமில்லாத பயங்கரமான உத்தியோகம் இது. முன்னால் சட்டசபையில் இருக்கும்போது கூட நான் வற்புறுத்திச் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் போலீஸ்காரர்கள் என்ன உன் சொந்தக்காரர்களா என்று கேட்டார்கள். வெளிநாடுகளுக்கு செல்லும் அமைச்சர்கள் வெளிநாடுகளில் உள்ள போலீஸ் அதிகாரிகளை, அவர்கள் குடும்பங்களை பார்த்திருக்கிறார்கள். லா அண்ட் ஆர்டர் மிகவும் அவசியமானது என்று தெரிந்திருந்தும் கூட ஏன் இந்த போலீஸ்காரர்கள் மீது பராமுகமாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஸ்காட்லண்ட் யார்ட்-க்கு அடுத்தபடியாக இருக்கிறது சென்னை போலீஸ், ரகசியப் போலீஸ் என்பதை உலகமே போற்றுகிறது. உலகமே போற்றும் இந்த டிப்பார்ட்மெண்ட்டில் வேலை செய்யும் போலீஸ்காரர்களுக்கு தினக்கூலிக்குக் கிடைக்கும் தட்டு முட்டு சாமான்களைத் தலையில் தூக்கிச் சென்று விற்கும் சாதாரண ஆளுக்குக் கிடைக்கும் ஊதியம் கூட இவர்களுக்கு இல்லை. போலீஸ்காரர்களின் குழந்தைகளைப் பராமரிக்க, அவர்களுக்குப் படிக்க ஏதாவது வசதியிருக்கிறதா என்றால் அப்படி எதுவும் இல்லை. அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொல்லலாம். அக்குழந்தைகளுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொள்ளவோ, அல்லது நல்ல துணிமணிகள் கட்டிக்கொள்ளவோ வசதியில்லை. இவ்வளவு கஷ்டமான ஜீவனத்தை நடத்திக் கொண்டு தேசத்தின் வாழ்விற்காக அடிபட்டு செத்தும் இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள், எரிக்கப்பட்டிருக்கிறார்கள், கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எவ்வளவோ வெள்ளத்தில், வேதாரண்யம் வெள்ளத்தில் போலீஸ்காரர்கள் பலர் மாண்டு போயிருக்கிறார்கள். இரவு பகலாக வொயர்லஸ் செட்டை தலையில் தூக்கிச் சென்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்தப் போலீஸ்காரர்களுக்கு எந்தவிதமான உதவியையும் செய்ய முன்னாள் அரசாங்கம் முன்வரவில்லை. போலீஸ்காரர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று—ஐந்து ரூபாய், பத்து ரூபாய் லஞ்சம்

வாங்கியிருக்கிறார்கள் என்று—பல போலீஸ்காரர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏன் அப்படி வாங்குகிறார்கள் என்றால் வயிற்றுக்கு வழியில்லை. தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும், உற்றார் உறவினர்களையும் காப்பாற்ற வேறு வகையில்லாமல் செய்கிறார்களே தவிர, வேறு ஒரு வழியும் இல்லை. தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள மறைமுகமாக தங்கள் வாழ்க்கையை எப்படியாவது நடத்த வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக இப்பேர்ப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள். இப்படிச் செய்யப்படுகிற தவறு அவர்களுடைய தவறு அல்ல, அது இந்த ஆட்சி நடத்துகிற அரசாங்கத்தின் தவறே தவிர, தனிப்பட்டவர்கள் தவறு அல்ல என்பதுதான் என் வாதம். தேசத்தின் நல்வாழ்விற்காக, தேசத்தினுள் விரோதிகள் வாராமல், தேசத்தில் அராஜகச் செயல்கள் நடக்காமல், கொலை, கொள்ளைக் குற்றங்களை தடுக்க என்றிருக்கிற ஊழியர்களுக்கு நல்ல ஊதியம் கொடுத்து அவர்கள் நல்ல முறையில் வாழ்ந்தால்தான் அமைச்சர்களுக்கும் சரி சர்வ ஜாக்கிரதையாக இருந்து பணியாற்றும் நிலை ஏற்பட முடியும். இங்கிலாந்தில் ஒரு போலீஸ்காரருக்கு 350 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. ஈஜிப்தில் 300 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. அமெரிக்காவில் 450 ரூபாய் கிடைக்கிறது. ஆகவே, அவர்கள் நன்கு வேலை செய்கிறார்கள். லா அன்ட் ஆர்டரும் ஒழுங்காக முறைப்படுத்தப்படுகிறது. இந்த தேசத்தில் பாவியாகப் பிறந்தவன்தான் போலீஸ் உத்தியோகத்திற்கு வரமுடிகிறது, சிறிய உத்தியோகத்திலிருந்து பெரிய உத்தியோகம் வரை உத்தியோக முறைகளை எடுத்துக்கொண்டால் விகிதாசார முறைப்படி உத்தியோகம் கொடுப்பதில்லை. ஹரிஜனங்களுக்கு 16 சதவிகிதமும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சதவிகிதமும் ரெக்ரூட்மெண்டில் எடுக்கவேண்டுமென்றிருக்கிறது. அந்த முறையை பின்பற்றவேயில்லை. எல்லா டிப்பார்ட்மென்ட்களிலும், முன்னால் போட்ட கேள்விக்கு பதில் அளித்திருப்பதுபோல், அதைப் பின்பற்ற வேண்டும். தாலூக்கா ஹெட்க்வார்ட்டர்ஸ்க்கு ஒரு ஜீப் கொடுக்கவேண்டும். அவர்களைக் கசக்கிப் பிழிகிறார்கள். ஒரு கொலை அல்லது கொள்ளை நடந்தால், ஸ்மக்ளர் ஒரு விநாடி விட்டுவிட்டால் அவன் காணாமல் போய் விடுகிறான். ஆகவே, அவர்களுக்கு ஒரு ஜீப் கொடுக்க வேண்டும். விகிதாசார முறைப்படி சப்-இன்ஸ்பெக்டர்கள், டெப்டி சூப்பரின்டென்டென்ட்ஸ் போன்றவர்களை நேரிடையாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, இந்த 1967-68-ம் ஆண்டு போலீஸ் துறை மானியத்தின் மீது நான் சில கருத்துக்களை என் வெட்டுப்பிரேரணை மீது பேச விரும்புகிறேன். பொதுவாக, போலீஸ் நிர்வாகம் ஒரு அரசின் முக்கியமானதொரு துறையாகும். இந்தியாவிலேயே குறிப்பாக தமிழ்நாட்டில் பல துறைகளில் இது ஒரு முக்கியமான துறை என்பதை கடந்த கால
பி.ப. 12-30 அனுபவத்தில் இருந்து பார்க்கிறோம். போலீஸ் துறை என்று சொல்லும்போது மக்களுக்கு கடந்த காலத்திலுள்ள ஒரு கசப்பான



அனுபவம்தான் நம் முன்னால் நிற்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஏனென்றால், சட்டம்—ஒழுங்கு—பாதுகாப்பு என்பதுதான் முக்கியமாக அந்தத் துறையின் கொள்கையாக இருந்த போதிலும், நடைமுறையில் அது அனுஷ்டித்து வந்த கொள்கையின் காரணமாக மக்களிடத்தில் போலீஸ் என்றாலே ஒரு பயங்கரமான எண்ணத்தை உண்டாக்கியிருக்கிறது என்பது நாம் யாரும் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில், பஞ்சாப் படுகொலையில் குண்டு இருக்கும்வரை சுட்டேன் என்று சொன்னதற்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டது போலீஸ் நிர்வாகம்தான் அதற்குப் பிறகு 20 ஆண்டுக் காலமாக எதிர்க்கட்சி இயக்கங்களையெல்லாம் அடக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்து அதிலும் பரிசு பெற்றதுதான் இந்த நிர்வாக அமைப்பு. இருந்தாலும் இன்று நாட்டிலே அரசு மாறிவிட்டது, ஜனநாயக எண்ணங்கள் அதிகரித்திருக்கின்றன, ஆட்சி மாறியிருக்கிறது, ஆட்சியிலுள்ள கட்சி மாறியிருக்கிறது என்ற போதிலும் கூட, அதிகாரவர்க்கத்தின் மனோபாவத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை, கடந்தகால மனோபாவம்தான் நீடிக்கிறது என்று வருத்தத்தோடு கூறிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தினால் அவர்கள் அந்த மாதிரிக் கொள்கையை அனுஷ்டிக்கிறார்கள் என்பது தெரியாது. ஒருக்கால் எந்த ஆட்சி வந்தபோதிலும், எதிர்க்கட்சியை அடக்குவதுதான் தங்கள் கடமை என்று செய்கிறார்களோ, அல்லது எதிர்க்கட்சியை அடக்குவதன் மூலமாகத்தான் ஆளும் கட்சியின் ஆதரவை, அனுதாபத்தைப் பெற முடியும் என்று செய்கிறார்களோ தெரியாது. ஆனால் அவர்களுடைய நடவடிக்கை சாதாரண மக்களிடத்தில் பீதியை உண்டாக்கும் நிலையில் இருக்கிறது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. அதைத்தான் பல சட்டமன்ற உறுப்பினர்கள் கூறும் நேரத்தில் பல உதாரணங்களுடன் கூறினார்கள்.

போலீஸாருக்கும் மக்களுக்குமிடையே உறவு எப்படி இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் அரசுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள உறவை நிர்ணயிக்கிறார்கள். பொது மக்கள் போலீஸ் ஸ்டேஷன் என்றாலே, அது சித்திரவதைக் கூடம் என்ற எண்ணம் மக்களிடத்தில் இருந்தால், போலீஸாரை மட்டும் அல்ல எண்ணுவது? அரசாங்கமும் இப்படிச் சித்திரவதை செய்கிறது என்று சாதாரண எண்ணம் மக்களிடத்தில் இயல்பாக வருகிறது. ஆகையால், இன்றைக்கு ஆட்சி மாறியிருக்கும் நேரத்தில், போலீஸ் நிலையங்களில் இருக்கக் கூடிய உத்தியோகஸ்தர்களுடைய, மேலதிகாரிகளுடைய, எல்லோருடைய மனோபாவத்திலும், ஜனநாயக ஆட்சி நடக்கிறது. ஜனநாயக எண்ணம் கொண்ட அமைப்பின் ஆட்சி நடக்கிறது. இந்த நிர்வாக அமைப்பில் உள்ளவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக்கொள்ளவேண்டுமென்ற நிலைமையை கனம் முதலமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்தி, தமிழகத்தில் அத்தகைய அமைப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1967 ஜூலை 5

கொள்கிறேன். நான் இதைக் கூற முக்கியமான காரணம் என்ன என்றால், மூன்று-நான்கு மாத காலங்களில் முக்கியமான சில மாற்றங்கள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன—அவைகளை நான் வரவேற்கிறேன். அமைச்சர்கள் செல்லுகிற காலத்தில் மக்களுக்கு போலீஸ் தொந்தரவு கிடையாது, அமைச்சர்கள் பவனி வருகிற காலத்தில் போலீஸுக்குத் தொந்தரவு கிடையாது. அதே நேரத்தில் சாதாரண மக்கள் படக் கூடிய துன்பங்களை எடுத்துக்கொண்டால், இன்னும் கடந்தகால மனோபாவம் அவர்களைவிட்டுப் போகவில்லை. சாதாரணமாக ஏழைகள் மீது கேஸ் போடுவது என்றால் சின்ன விஷயம் இல்லை. இவர் வேண்டாதவர் வேண்டியவர் என்ற எண்ணமும், செல்வாக்கு உள்ளவர்களுக்கு ஆதரவாக கேஸ் போடுவதும், வாயிலே சாராயத்தை ஊற்றி கேஸ் போடுகிறார்கள் என்பதும், கஞ்சாவை வைத்துப் பிடிப்பது என்பதும் இன்றைக்கு நடை பெறுகின்றன. அதே மாதிரியே 144, 145, 64, 55 செக்ஷன்களில் இப்படிப்பட்ட கேஸ்கள் சிவில் கேஸ்களாக இருந்தாலும், கிரிமினல் கேஸ்களாக இருந்தாலும் தகாத முறையில் போடுகிறார்கள் என்பதை சாட்சி பூர்வமாக, அதிகார பூர்வமாக எடுத்துக்காட்டும் ரெக்கார்ட்ஸ், ஜட்ஜ்மெண்ட்டுகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நடவடிக் கைகளில், விவசாயத் தகராறுகளில் வந்து தலையிடுவதும், வீட்டை விட்டு ஒருவர் காலி செய்யும் நேரத்தில், வேண்டியவர்களாக இருந்தால் வீட்டுக்காரர்களுக்கு ஆதரவாக இருப்பதும் நடை பெறுகிறது. நீதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் அளவுக்கு இருந்தால் போதும். தெரியாதவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தாலும், விவசாயிகள் சம்பந்தப்பட்டதாக இருந்தால், ஆர்.டி.ஓ.—விடம் போ. வீடுகள் சம்பந்தப்பட்டதாக இருந்தால், ரெண்ட் கண்ட்ரோலரிடத்திலே போ, சிவில் கேஸாக இருந்தால், சிவில் கோர்ட்டுக்குப்போ என்று சொல்லிக் கொடுத்து அனுப்பாது, ஏதாவது நேர்மாறான கேஸ்களைப் போட ஆஸ்பத்திரிகளைத் தேடிக்கொடுப்பது சரியல்ல என்று கேட்டுக்கொண்டு, அடுத்த படியாக. . . . (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். . . . .

**(மாண்புமிகு தலைவர்) திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஐந்து—ஐந்து நிமிஷங்கள்தான் ஒதுக்கப் பட்டுள்ளன. அங்கத்தினர் அவர்கள் ஆறு நிமிஷங்கள் எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

*** திரு. மா. இராசாங்கம்:** தலைவர் அவர்களே, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் போலீஸ் துறைக்கான மானியக் கோரிக்கையை அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன்.

கடந்த ஆட்சியிலே இந்தத் துறை பீதியின் பாம்பாக இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். பயப்படும்படியாக இருக்க வேண்டியது குற்றவாளிகளுக்கு. ஆனால், நிரபராதிகளுக்கு அன்போடு நடக்கவேண்டும் என்பது பொது விதியாகும். கடந்த



1967 ஜூலை 5] [திரு. மா. இராசாங்கம்]

ஆட்சியிலே நிரபராதிகள் மறைந்து திரிய வேண்டிய நிலைமைகள் இருந்து வந்திருக்கின்றன. குற்றவாளிகளெல்லாம் பவனி வந்து கொண்டிருக்கிற நிலைமையும் இருந்தது. காங்கிரஸ் கட்சி ஆண்டது என்ற ஒரே காரணத்திற்காக—எல்லாக் காங்கிரஸ் காரர்களும் என்று சொல்லாவிட்டாலும்—அதில் இருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக, தங்கள் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்பதற்காக, உதாசீனமாகப் போலீஸ்காரர்களை நினைத்தது உண்டு. அது எப்படி இருந்தது என்றால், சிவன் கழுத்தில் இருக்கிற பாம்பு பறந்து போகிற கழுகைப் பார்த்து 'சவுக்கியமா?' என்று கேட்டதாம் சிவன் கழுத்தில் இருக்கிற தைரியத்தினால், ஆட்சியில் காங்கிரஸ் கட்சி இருந்த தைரியத்தினால் அப்படி நினைக்கிற சூழ்நிலை இருந்தது. அந்த நிலைமை இந்த ஆட்சியில் மாறி இருக்கிறது. சட்டப்படி, நியாயப்படி இருக்கிற நடவடிக் கைகளை எடுத்துக்கொள்ள போலீஸ்காரர்களுக்கு எந்தவிதத் தடையும் இல்லை என்று நமது முதலமைச்சர் அவர்கள் பல இடங்களிலே தெளிவாக இதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

போலீஸ் துறை அமைப்பைப் பற்றிச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அது டாக்டர் கையில் இருக்கிற கத்தியைப் போன்றது. நல்ல காரியத்திற்காகத்தான், சுகத்திற்காகத்தான் அது உபயோகப்படுத்தப்படும். ஆனால், கடந்த ஆட்சியில் எப்படி நடத்தப்பட்டது என்பதெல்லாம் மிகத்தெளிவாக இந்த மன்றத்தில் இன்றைய தினம் அமைச்சராக இருக்கிற திரு. மாதவன் அவர்களும், மற்றவர்களும் எனக்காக கிளப்பிய ஒழுங்குப் பிரச்சினைகளிலிருந்து தெரியும். கடந்த ஆட்சியில் போலீஸ் துறைத்தனம் நரகத்தின் கொடுமை என்று கேள்விப்பட்டிருக் கிறோம். ஆனால், நானெல்லாம் நேரடியாக அனுபவித்திருக்கிறேன். ஆனால்—இப்போது தமிழகத்தின் தலைமை மாறியிருக்கிறது—அந்த நிலைமைகளெல்லாம் மாறி இருக்கின்றன—இப்போது அந்த நிலைமை இல்லை என்று தெளிவாகச் சொல்லலாம்.

ஆட்சி மாறியவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களுக்கு விசாரணை இருக்குமோ என்று அச்சத்தோடு இருந்தது உண்டு. சம்பந்தப்படாதவர்களும் நினைத்தது உண்டு. இந்தப் போலீஸ் துறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அர்ச்சுனர் கையிலோ, அல்லது பீமர் கையிலோ ஒப்படைத்து விடுவார்களோ என்ற நினைப்பும் இருந்தது. ஆனால், தருமர் போல அறிஞர் அண்ணா அவர்களே எடுத்துக்கொண்ட காரணத்தினால், தருமம் காக்கப் படும் என்ற உறுதியும் உத்தரவாதமும் இருக்கின்றன.

அடுத்தபடியாக அறிஞர் அண்ணாவின் அரசியல் நாகரிகத்தை யும் ராஜதந்திரத்தையும் பேராசிரியர் ஒருவர் வின்ஸ்டன் சர்ச்சி லோடு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். வின்ஸ்டன் சர்ச்சில், பதவியில் இல்லாத காலத்தில், காவல் துறையில் இருந்த ஒருவரிடம் ஒருவரை குற்றச்சாட்டிலிருந்து விட்டுவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த போலீஸ் துறை அதிகாரி 'முடியாது'

என்று சொல்லி விட்டாராம். செல்வாக்கான அவர் அதை விரோதமாகவே நினைத்துக்கொண்டிராமல், சர்ச்சில் பதவிக்கு வந்தவுடன் அதே போலீஸ்காரரை அழைத்து பதவி உயர்வு கொடுத்தாராம். கொடுத்தும் சொன்னாராம், 'இவ்வளவு செல்வாக்கு இருந்த நான் சொல்லியதைக் கேட்காமல், நியாயத்தை, சட்டத்தைக் கடைப் பிடித்ததைப் பாராட்டுகிறேன்' என்று பாராட்டினாராம். அதே விதத்தில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த போலீஸ் துறைத்தனத்தை நடத்துகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ், தீயணைக்கும் படையினருக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும, குற்றவாளிகளைக் கண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்களுக்குத் தொலை பேசி வசதி இருந்தால்தான், மக்களுக்கு திடீர் திடீரென்று வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும், குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியும். போலீஸ்காரர்களுக்கு வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். வீடுகள் இருட்டாக இருப்பதால் மின் விளக்கு வசதி கொடுக்கவேண்டும்.

நான்கு முறைகள் தீயணைக்கும் படை எனது பகுதிக்கு வேண்டு மென்று கேட்டிருக்கிறேன். இப்போது கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாகத் திறப்பு விழாவை நடத்தி வைப்பார்கள் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** தாற்காலிக சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் விவாதத்திலே முக்கியமாகச் சொல்லவேண்டியது என்னவென்றால், போலீஸ் இலாகாவில் உள்ள லஞ்சம் பற்றி. ஜில்லா அளவிலே சிறிய உத்தியோகஸ்தர்கள் அளவிலே லஞ்சம் நிறைய இருக்கிறது. முக்கியமாக, போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஜாஸ்தி அதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது இருக்கத்தான் செய்யும். ஏனென்றால் ஸ்டேட் பாங்கியில் பியூனாக இருந்தால், அவனுக்கு சம்பளம் ரூ. 150. பியூனுக்கு ரூ. 150 சம்பளம், போலீஸ்காரருக்கு அதிலே 50 சத விகிதம் சம்பளம், பாதி சம்பளம். பஞ்ச காலம், ரொம்பவும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நமது சீப் மினிஸ்டர் அவர்களுடைய பாஷையில் சொல்கிறேன். எங்கே டாப் செய்ய வேண்டுமோ அதை வகையாக டாப் செய்து, டாக்ஸ் போட்டு போலீஸ் இலாகாவில் குறைந்த சம்பளம் வாங்கும் போலீஸ் கான்ஸ்டபிள், மற்றும் எஸ்.ஐ., இன்ஸ்பெக்டர்கள் அளவு வரையிலே ஓரளவுக்குச் சம்பளத்தையும், படியையும் கூட்டிக் கொடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். இல்லாவிட்டால் பயன் இல்லை. போலீஸ்காரர்களைப் பற்றி நாம் பிரமாதமாகப் பேசுகிறோம். ஸ்காட்லண்ட் யார்டு போலீஸ் நிர்வாகத் திறமை சென்னை ராஜ்யத்தில் இருக்கிறது என்றெல்லாம் பேசுகிறோம். அப்படிப் பேசினாலும், அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக்





கொடுக்காவிட்டால் அவர்களுடைய திறமையை மனச்சாட்சியுடன் காண்பிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. சென்ற வருஷம் பட்ஜெட்டில் உள்ளதைவிட, இந்த வருஷம் போலீஸ் இலாகாவுக்கு ரூ. 35 லட்சம் குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக் கிறது. ஆகவே, இந்தத் தொகையைக் கணிசமாக கூடுதலாகக் கொடுத்து, அவர்களுக்குச் சம்பளம், பஞ்சப்படி, மற்றபடி டெய்லி அலவன்ஸ் இவைகளையெல்லாம் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மதுவிலக்கு பற்றியும் அடிக்கடி பேசுகிறோம். மது விலக்கு சம்பந்தமாக ஜாஸ்தி கேஸ்கள் ஆகிவிட்டன. அதுவும் வரத்தான் செய்யும். ஏனென்றால் அது ஒரு வியாபாரமாகி விட்டது. அது ஒரு 'மெயின் காட்டேஜ் இண்டஸ்டிரி இன் அவர் ஸ்டேட்'. இந்தியா பூராவும் அப்படியாகிவிட்டது. ஏனென்றால், விலைவாசி கூடுதல், வாழ்க்கை நடத்த முடியாது, 10 தடவை ஜெயிலுக்குப் போனாலும், 11-வது தடவை இந்தத் தொழிலில் ஈடு படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, இதை ஒன்றும் செய்ய முடியாது. சிவபெருமானே, கடவுளே மதுவையும் கஞ்சாவையும் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இது நடந்துகொண்டிருக்கத்தான் செய்யும். இதை ஒரு பாலிஸியாக கட்டி அழுதுகொண்டுதான் இருக்கவேண்டும். எப்படியிருந்தாலும் அது நடக்கட்டும். முதல் மந்திரி அவர்களுக்கும், மற்றும் ஐ. ஜி. அவர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் நான் முக்கியமாக ஒரு வேண்டுகோள் விடுக் கிறேன். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக ஏற்கனவே கேஸ்கள் வந்துகொண்டிருக்கின்றன. கன்காக்டட் கேஸ்கள் நிறைய போடு வதற்கு எஸ். ஐ. சில இடங்களில் முயற்சி செய்கிறார்கள். வேண்டாதவர்கள் பேரில் கேஸ்கள் போட்டுவிடுகிறார்கள். அப்படி கன்காக்டட் கேஸ்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்குச் சில புதிய யோசனைகளை வகுத்து, அவர்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தகவல் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஸாலரி விஷயம் அப்பொழுதே சொல்லிவிட்டேன். பப்ளிக் மீட்டிங் 10 மணி வரையில்தான் நடக்கலாம் என்று இருக் கிறது. ஆனால் கொஞ்சம் சலுகை எடுத்து நாங்கள் 10¾, 11 மணி வரையிலும் கூட பேசுகிறோம், ஒருவரும் கேட்பதில்லை. இருந் தாலும், அது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. முன்னால் இருந்த காங்கிரஸ் மந்திரிகளை குறைகூறிப் பேசிவிட்டு, நாம் அந்தத் தப்புகளைச் செய்வது சங்கடமாக இருக்கிறது. ஆகவே, 11 மணி அளவுக்கு பப்ளிக் மீடிங் லைசென்ஸ் நேரத்தை நீட்டவேண்டும். அதோடு கூட, லைசென்ஸ் மனுக்களுக்கு லேபிள் ஒட்டி, தாலுகா ஆபீஸில் கட்டணத்திற்காக பணம் கட்டி சலான் வாங்கவேண்டும் என்ற விதி முறைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளெல்லாம் ரொம்ப கஷ்டமாக இருக்கின்றன. ஆகவே, இந்த லைசென்ஸ்

லிஸ்டம் என்பது பெயர் அளவுக்கு இருக்கவேண்டுமே தவிர, மற்றபடி அதிலுள்ள கஷ்டங்களையெல்லாம் நீக்கிவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த நாட்டிலே இப்பொழுது ஒரு புதிய பெயர் அடிபடுகிறது. என்ன கொராவா, கேரோவா, கேரோ. இது ரொம்ப பயங்கரமானது. அது மாத்திரமல்ல. இதைத் தலையெடுக்கவிட்டுவிட்டால் சர்க்காரும் போச்சு, எல்லாம் போச்சு, நாகரிகம் போச்சு, சொஸைடியே போச்சு, எல்லாம் குளோஸ். ஆகவே, ஒரு பயங்கரமான சூழ்நிலை இருக்கிறது. அதைச் சொல்வதற்காகத்தான் நான் முக்கியமாக இந்த விவாதத்திலே பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன். நமது முதல் அமைச்சர்கூட அதிருஷ்டவசமாக அதற்கு நல்ல பதில்கள் சொல்லியிருக்கிறார். இதற்கு தயவுசெய்து ஆதரவு கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதரவு கொடுத்தால், நமது சர்க்காரே அழிந்துவிடும். நாங்கள், சுதந்திரா பார்டிக்காரர்கள், முதலாளிகளிடத்தில் அனுதாபத்தின் காரணமாக பேசுவதாக நினைத்துவிடவேண்டாம். ப்ரொடக்ஷன், உற்பத்தி பாதிக்கப்பட்டுவிடும் என்ற காரணத்திற்காகத்தான் சொல்கிறேன். மேற்கொண்டு அதன் மூலம் அன்எம்ப்ளாய்மெண்டு பிராப்ளம் வேறு வரும். தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுவிடுவார்கள். நாங்களும் மறைமுகமாக தொழிலாளர்களை சப்போர்ட்டு பண்ணுகிற ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான். ஆகவே, இது தலையெடுக்குமானால் அரசாங்கமே ஸ்தம்பித்துவிடும். ஐ.ஜி. அவர்களையே 5, 6 பேர்கள் சேர்ந்து கேரோ பண்ணிவிடுவார்கள். இம்மாதிரி நிலைமைக்கு போகவிடக்கூடாது. இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) எனக்கு 10 நிமிஷம் உண்டு. இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன். ஆகவே, இந்த விஷயங்களிலெல்லாம் முக்கியமாக சர்க்கார் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

ஒரு மர்டர் கேஸ் ரிபோர்ட்டு வந்தால், கேஸ் இல்லை என்றால், அதை மனதோடு கேஸ் இல்லை என்று ரெபர் பண்ணமாட்டேன் என்கிறார்கள். ஒருவன் மூட்டைப்பூச்சி மருந்து சாப்பிட்டுவிட்டு, வேலையின்மை, பஞ்சம், பட்டினி காரணமாக தற்கொலை செய்துகொண்டு செத்துவிட்டான். மர்டர் கேஸ் ரிபோர்ட்டு ஆகிவிட்டது. திருநெல்வேலியில் ஒரு சம்பவம், மூட்டைப்பூச்சி மருந்து சாப்பிட்டுவிட்டு தற்செயலாக செத்துவிட்டான். தற்கொலை என்று தெரிந்த பிறகும், ரிகார்டு ஆகியும், 7, 8 மாதங்கள் ஆனபிறகும், அந்த ரிபோர்ட்டுபடி அக்யூஸ்டு என்று சொல்லப்பட்டவருக்கு, 'உங்கள் பெயரில் மர்டர் சார்ஜ் ஒன்றுமில்லை' என்று ரெபர் பண்ணி நோடீஸ் கொடுக்காமல் இருக்கிறார்கள். எட்டு மாத காலம் ஆகியும் அந்த ஆள் எந்த வேலைக்கும் போக முடியவில்லை. துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். எட்டு மாதமாக சும்மா கையைக் கட்டிக்கொண்டு இருக்கிறான். இந்த விஷயங்களி





லெல்லாம் ஒரு புது பாலிஸி வகுத்து, அதை நல்ல முறையிலே அமுல் நடத்தினால் நலமாக இருக்கும். மர்டர் கேஸ் என்று ரிபோர்ட்டு செய்யப்பட்டால், தவறுதலாக வார்த்தை விழுந்துவிட்டால், பிறகு தற்கொலை என்று முடிவு செய்யப்பட்டுவிட்டால், கேஸ் இல்லை என்று அந்த அக்யூஸ்டுக்கு ரெபர் பண்ணி நோடீஸ் கொடுத்துவிட வேண்டும். எட்டு மாதம் ஆகியும் நோடீஸ் கொடுக்கவுமில்லை. கோர்ட்டிலும் கேஸ் போடவில்லை. கோர்ட்டிலே கேஸ் போட்டாலும், சப்-மாஜிஸ்டிரேட் வீட்டுக்கு அனுப்பிவிடுவார் பெயிலில். கேஸ் இல்லை என்று நோடீஸ் கொடுப்பதற்கு 8 மாதம் தாமதம் ஆகிறது. இம்மாதிரி சில்லரை நிலவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதற்காகத்தான் நான் முக்கியமாக பேசினேன்.

இந்த ராஜ்யத்தில் ஜெனரல் எலெக்ஷன் நேரத்தில், ரொம்பவும் சில்லரை ஆவலாதிகள் இரண்டு ஒன்றைத் தவிர, மொத்தத்தில் போலீஸ் இலாகா ரொம்ப திருப்திகரமாக நடந்துகொண்டது. இந்த ராஜ்யத்தில் போலீஸ் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கிறது, இந்த சில்லரை கஷ்டங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். வணக்கம்.

**திரு. என். ராஜாங்கம்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, சட்டமும், ஒழுங்கும் என்ற அடிப்படையில் போலீஸ் துறை மான்யத்தை முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப் மான்யத்தை முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் இருக்கக்கூடிய அம்சங்கள் அனைத்தையும் பார்த்தால்; நல்ல முறையிலே போலீஸ் இலாகாவை இயங்கும்படிச் செய்வதிலே அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை அதிக நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. எனக்குக் கிடைத்திருக்கிற நேரத்தில் ஒரு சில விஷயங்களைப்பற்றி சொல்கிறேன்.

விழுப்புரம் சம்பவம்பற்றி உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் பேசினார்கள். சம்பவம் எப்படி நடந்தது? ஆதூர் மிராசுதார்களுக்கும், அரிஜனங்களுக்கும் இடையே தகராறு, தடியடி, போலீஸ் தலையிட்டு இரண்டு பக்கமும் அமைதியை நிலை நாட்டியது. விழுப்புரம் சம்பவத்தில் அரிஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு. அதில் தலையிட்டு போலீஸ்காரர்கள் அடித்து, துரத்தி, கலைக்காமல் இருந்திருந்தால் எத்தனையோ பேர்கள் மாண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு பெரிய சம்பவம். முதலில் இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர் யார்? பலாத்காரத்தை தூண்டிவிட்டவர்கள் யார் என்பதையெல்லாம் போலீஸ்காரர்கள் ஆராய்ந்து அதன்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது விரைவிலே சட்டமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். முதல் அமைச்சர் அவர்கள்மூலம் சமர்ப்பிக்கப்படும் என்று நம்புகிறேன். ஆகவே உண்மைக்கு மாறான விஷயங்களைச் சொல்லி ஜாதிச் சண்டைகளைக் கிளப்பும் முறையில்,

சட்டமன்றத்திலே பேசுவது முறையாகாது. குறைகளைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி, தீர்வு காணவேண்டும். இன்றைக்கு நிர்வாகிகளும், அதிகாரிகளும் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இப்பொழுது இருக்கும் சூப்பரிண்டெண்ட் உண்மையை ஆராய்ந்து நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, சொல்பவர்கள் உண்மைக்கு மாறான விஷயங்களைச் சொல்லக் கூடாது என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்ள வேண்டும். எல்லா அங்கத்தினர்களும் உணர்வார்கள், என்னைவிட அந்த சமூகத்திற்கு நன்மை செய்தவர் கிடையாது. இந்த சமயத்திலே ஒரு சர்வே எடுத்தாலும் கூட, என்னை விட அதிகமான சமூகப் பற்று உள்ளவர்கள் கிடையாது. அந்த வகையில் அத்தனை பேர்களையும் எந்த விதமான உதவியும் இல்லாமலேயே முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிறேன். ஆகவே, அவர்களை இப்பொழுது நான் காட்டிக்கொடுக்கத் தயாராக இல்லை. அந்த சமூகத்தின் பேரில் பழி போடுவது நியாயமாகாது. அந்த சமூகத்திற்கு நன்மையாகாது. சட்டசபையில் உண்மைக்கு மாறாகச் சொல்லக் கூடாது என்று சொல்லி, இன்னும் எவ்வளவோ பேச வேண்டியிருப்பினும், நேரம் இல்லாததால், இதோடு முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. எம். ஆர். கண்ணன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். பொதுவாக இங்கே பேசிய நண்பர்கள் போலீஸ் துறைமீது குற்றம் சுமத்தும் முறையிலே பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே சட்டதிட்டங்களில், நடைமுறையில் பல இன்னல்கள் இருக்கின்றன என்றால், முக்கிய காரணம் நாட்டு மக்களிடையே உள்ள வறுமையும் கொடுமையும், அறியாமையின் ஆழமும்தான் ஆகும். அந்த நிலையில் குற்றங்கள் மலிவது இயல்பு. அப்படிப்பட்ட குற்றங் குறைகளை போலீஸ் நிர்வாகம் அடக்கும்போது, நல்ல பண்போடும், அன்போடும்தான் நடந்துகொள்ள வேண்டும். அதே சமயத்தில், இந்தக் குற்றங்கள் அறியாமை வறுமை காரணமாக ஏழை எளிய மக்களால் செய்யப்படுகின்றன என்பதையும் பொதுநோக்கத்தோடு ஆராயவேண்டும். தவறான முறையில் அவர்களை இம்சிக்கக்கூடாது. அந்த நிலைமை மாறவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். போலீஸ் நிர்வாகத்தில் மிகக் குறைந்த சம்பளத்தில் இருக்கும் கான்ஸ்டபிள்கள்தான் பரிதாபத்திற்கு உரியவர்கள். அரசியல் காரணங்களுக்காக ஜெயிலுக்குப் போகும்போது 'சி' வகுப்புக்குப் போகிறவர்கள்தான் உண்மையான தியாகிகள் என்று கருதப்பட வேண்டும். 'ஏ', 'பி' வகுப்புகளில் இருப்பவர்கள் நிம்மதியாக இருப்பவர்கள். ஆனால் 'ஸி' வகுப்புக்காரர்களுக்குப் பாராட்டுதல்கள் கிடைப்பதில்லை. உத்தியோக முறையில் கான்ஸ்டபிள்கூட அப்படித்தான். உயிருக்கே ஆபத்து வந்தாலும், கான்ஸ்டபிள்தான் கவனிக்க வேண்டும். பெரும் பெரும் அதிகாரிகள் முறையை வகுக்கலாம். ஆனால், நேரிடையாக சம்பவங்களைச் சந்திப்பது





இந்த கடைநிலை காவல் துறையினர்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம். கடந்துபோன 20 ஆண்டுகாலத்தில் இவர்கள் கவனிக்கப்படவில்லை. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நமது சர்க்கார், ஏழைகளுடைய சர்க்கார். அவர்களுக்கு நல்லது செய்யும் என்று மனப்பூர்வமாக நம்பிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் வசிக்கும் இடங்களில் லைட் சரியாகக் கிடையாது. ஒரே ஒரு மீட்டரை வைத்து பல குடும்பங்களுக்கு தொடர்பு வைத்து 9 மணிக்குமேல் நிறுத்திவிடுகிறார்கள். பல்வேறு பகுதிகளில் வேலை பார்ப்பவர்கள் இரவு வெகு நேரம் கழித்து வந்து 10 மணியளவில் சாப்பிடும் போது விளக்குகள் நின்று விடுகின்றன. ஆகவே, ஒவ்வொருவருக்கும் தனித்தனி சப்-மீட்டர்கள் போட்டு விட்டால், அவரவர்களே சிக்கனமாக உபயோகித்து, தங்கள் சௌகரியம் போல அணைத்துக் கொள்ளுவார்கள். அதோடு, அவர்கள் இருக்கும் இடங்களும் நல்ல முறையில் ரிப்பேர் செய்யப்படுவதில்லை. ஏதோ கண்ட்ராக்டர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பார்த்துச் செய்வதுதான் முடிவு. அவர்கள் இருக்கும் இடங்கள் சுகாதார வசதிக் குறைவான இடங்களாகவும் இருக்கின்றன. அதற்கான அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு சமுதாயத்தில் சிலரை ரௌடிகள் என்றும், கேடிகள் என்றும் குறிப்பிடும் நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டும். நாம் இன்றைக்கு சுதந்திர ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். அதை மறந்து விடக்கூடாது. கடந்த 20 ஆண்டு காலத்தில் இதைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் கவனிக்கவில்லை. இன்றைக்கிருக்கும் தமிழக சர்க்கார் ஏற்கனவே ரௌடிகள் என்று இருப்பவர்களை லிஸ்டிலிருந்து எடுத்து விட ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களுக்கும் சமுதாயத்தில் வாழ வழி ஏற்படும். வறுமை அடிப்படையில், அறியாமை அடிப்படையில் ஏதோ தவறு செய்திருந்தால், அவர்களை நிரந்தரமாக ரௌடிகளாக்குவது நியாயமாகாது. அவர்களை அடித்துத் தொந்தரவுகளுக்கு உள்ளாக்குவது சரியில்லை. ஆகவே, அப்படிப் பட்டவர்களை லிஸ்டிலிருந்து எடுத்து விட நம் தமிழக அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். குறிப்பாக தேர்தல் சமயங்களில், இந்த நபர்களை, லிஸ்ட் அடிப்படையில் கைது செய்து, அவர்களுடைய ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. கோவிந்தராசுலு:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசும் போது கோவை மாவட்டத்தைப்பற்றி, அங்கே நடந்துவிட்ட சில தவறுகளைப் பற்றி, எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவையிலே சென்ற மாதம் நடந்த பொருள் காட்சியிலே, நமது சென்னையைச் சேர்ந்த நடிகர்கள் மூன்று பெண்மணிகள், கோவைக்கு வந்திருந்து, 'ரெகார்ட்' நடனம் ஆட வந்தார்கள். அந்த நடனம் ஆன பிறகு சென்னைக்கு திரும்பிவர இருந்தார்கள். அப்பொழுது கோவை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவரும், அவரைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் அங்கேயுள்ள ஹோட்டலிலே இரவு இரண்டு மணிக்கு சென்னைக்கு

வருவதற்காக இருந்தவர்களை கைது செய்து, மறுநாள் அவர்களை கோர்ட்டுக்கும் அழைத்துப் போகாமல், அந்த போலீஸ் நிலையத்திலேயே வைத்திருந்து, தவறான முறையில் அவர்களிடம் நடந்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் மறுநாள், ஞாயிற்றுக்கிழமை அன்றும் அவர்களைக் காவலில் வைத்து, அவர்களை பலவிதமான நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கிவிட்டு, மறுநாள் திங்கட்கிழமை கோர்ட்டிலே தாக்கல் செய்து, அவர்கள் ஃபைனைக் கட்டிய பிறகும்கூட வெளியிலே விடாமல், அன்று மாலையும் ஒரு ஹோட்டலிலே தங்கவைத்து, மறு நாள், இந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும், அவர்களை சென்னைக்கு அனுப்பியிருக்கிறார்கள். நடிகர் சங்கத்தின்மூலம் இதுபற்றிப் புகார் செய்தும் இன்னும் இதைப்பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதற்கு அடுத்து, கோவையிலே, கடந்த 20 ஆண்டுகாலமாக ஆண்ட அரசின் கொடுமையால் பாதிக்கப்பட்டு, சாப்பிடவும் வழியில்லாமல், ஏழை எளியவர்கள் மானத்தை விற்று, அங்கே வாழ்க்கை நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட பெண்மணிகள் ஏதோ கொஞ்சம் பணம் சேர்த்து, நகை நட்டு வைத்திருக்கிறார்கள். அவர்களை ஒரு போலீஸ் உயர்தர அதிகாரி, வீடு வீடாகப்புகுந்து, பலாத்காரமாக கைது செய்து அவர்களுடைய பொருள்களை நடுத்தெருவில் போட்டு, தீ வைத்துவிட்டு, அவர்கள் உடலில் போட்டிருந்த நகைகளை பிடுங்கி, தெருவிலே போட்டு, தெருவிலே கிடந்ததாகப் பறிமுதல் செய்துகொண்டிருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் இதுபற்றி முன்னாலேயே மனுப்போட்டு இருப்பதாகவும் என்னிடம் தெரிவித்தார்கள். ஆகவே, அந்த அதிகாரிகள் மீது இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது போக, கழகத் தோழர்களை, பெருநாயகன்பாளையம், சிங்கநல்லூர் போன்ற ஊர்களின் தெருக்களில் இந்த அரசு மாறியும்கூட நிர்ப்பந்தமாக அடித்து, தொந்தரவுபடுத்தியிருக்கிறார்கள். விசாரணை ஏதும் செய்யப்படவில்லை. மேல் அதிகாரிகளுக்கு போன் மூலம் நான் சொல்லியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதுபோக, அன்றைக்கு நம் தோழர் அர்ஜுனனை சுட்டுக் கொன்றார்கள். அதற்கு உடந்தையாக இருந்ததாக, 5, 6 பேர்கள் மீது கேஸ் போட்டுக் கொண்டு, இதுவரையில் விசாரணையில்லாமல், வாரத்திற்கு ஒரு முறை கோர்ட்டுக்கு இழுத்து, வாய்தா போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த கேசுகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று கனம் முதல் அமைச்சருக்கு மனு செய்திருக்கிறார்கள். அவற்றை வாபஸ் வாங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

போலீஸ்காரர்களுடைய வேலை மிகக் கீழ்த்தரமான நிலையில் இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கோவைக்கு அடுத்த கவுண்டன்பாளையம் என்ற





இடத்தில் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று 20 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்திருக்கிறார்கள். இதுவரையில் போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டமன்றத் தலைவரவர்களே, பி. ப.
இங்கே கொண்டு வந்திருக்கும்படியான கனம் டி. எம். நல்லசாமி 1-30
அவர்களுடைய வெட்டுப்பிரேரணையை ஆதரிக்கும்படியான நிலையில் சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். போலீஸ் மானியத்தைப்பற்றி இந்தப் பகுதியிலேயும், அந்தப் பகுதியிலேயும் பேசினார்கள். ஆனால், ஆளும் கட்சியிலே இப்பொழுது இருப்பவர்கள் சிலபேர் இங்கே எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் என்ன பேசவேண்டுமோ அதையே பேசிவிட்டார்கள். முன்னால் எதிர்க் கட்சியிலிருந்த பொழுது அதைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் இப்பொழுது பழைய காங்கிரஸ் ஆட்சியிலே காங்கிரஸ்காரர்கள்தான் தவறு செய்துவிட்டார்கள், தவறு செய்துவிட்டார்கள் என்றும் கூறுகிறார்கள். மேலும் பழைய ஆட்சியிலேதான் தவறு தவறு என்பதும் அதற்கு பதில் சொல்ல வேண்டுமென்பதும் இருபது வருஷத்தின் கதை, அது போய் விட்டது. இனிமேல் நாங்கள் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பில் இல்லை. இப்பொழுது நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பில் இருக்கிறீர்கள். இனிமேல் நாங்கள் கேட்கும்படியான கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்காகத் தான் மக்கள் உங்களை அனுப்பியிருக்கிறார்கள். நடந்து போன விஷயத்தையே மீண்டும் மீண்டும் சொல்லி நாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்பது சரியல்ல. அரசாங்கம் உங்கள் கையிலே இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் அறிக்கை கொடுப்பதிலே சென்ற இருபது வருஷ ஆட்சியிலே காங்கிரஸ்காரர்கள் இத்தனை தவறுகள் செய்திருக்கிறார்கள் என்று அறிக்கை சமர்ப்பித்தால் அது பற்றி நான் மகிழ்ச்சியடைவேன். ஏனென்றால், பேசும்பொழுது என்னமோ நாங்கள் தவறு செய்துவிட்ட மாதிரியும் காங்கிரஸ் மீதே குற்றம் சாட்டிப் பேசுவதும் அவ்வளவு அழகு அல்ல. இனிமேல் அடுத்துக் கொஞ்சம் குறைந்துவிடும் என்று நினைக்கிறேன்.

**(மாண்புமிகு துணைப்பேரவைத் தலைவர் தலைமை)**

நாம் இப்பொழுது நம் சட்டத்தையும், அமைதியையும் ஒழுங்கான முறையில் நிலைநாட்ட வேண்டுமென்று இருக்க வேண்டும். அரசியல் காரணத்திற்காக, அரசியலுக்காக போலீஸ் இலாகாவை அது எந்தக் கட்சியாக இருந்தாலும் உபயோகித்துக் கொள்ளக் கூடாது. திரு. ராஜாங்கம் அவர்கள் பேசும்பொழுது ஒரு கதை சொன்னார்கள், சிவனிடத்திலே இருக்கும்படியான பாம்பு கருடனைப் பார்த்து "கருடா, கருடா! சௌக்கியமா?" என்று கேட்டதாகச் சொன்னார். நான் அவர்களுக்கு கருடன் சொன்ன பதிலையும் கூறுகிறேன். கருடன் சொன்ன பதில் "இருக்கின்ற இடத்திலே இருந்தால் சுகம்தான்" என்று. அதைப்போல

ஆளும் கட்சியிலே உள்ள ஒரு சட்டமன்ற அங்கத்தினர் போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டர் இல்லாத நேரத்தில் அங்கு போய் உட்கார்ந்து கொண்டு அங்குள்ள அதிகாரிகளிடம் உத்தரவு போடுமாறு கூற, அங்குள்ளவர் அதை மறுத்துக்கூற அதன் பிறகு மேலதிகாரிகள் எல்லாம் வந்து விசாரித்து இப்பொழுது அது விசாரணையில் இருக்கிறது. இதுமாதிரி யெல்லாம் இனி ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, போலீஸ் இலாக்காவிலே தலையிடாமல் பார்த்துக்கொண்டு, போலீஸ் இலாக்காவிலே இருக்கக்கூடியவர்கள் நேர்மையாகவும், நியாயமாகவும் பணிபுரிய வகை செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

எனவே, போலீஸாருக்கு " நியாயமான காரியத்தைச் செய்யுங்கள். தவறான காரியத்தை செய்யத் தூண்டினாலும் நீங்கள் செய்யக்கூடாது " என்று ஒரு அறிவிப்பில் சொல்வீர்களேயானால் நிச்சயமாக நல்ல காரியம் நடைபெறும் என்பதிலே எனக்கு எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

முதலமைச்சர் அவர்களிடத்திலே பல புகார்கள் வந்தன. உதகமண்டத்தில் அவர்களைச் சந்தித்து விஷயங்களைச் சொன்னேன். சொன்னவுடனே இரண்டு கட்சிக்காரர்கள் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னதை பாராட்டுகிறேன். மீண்டும் அவரிடத்திலே பேசியபொழுது சேலம்-அம்மாப்பேட்டையில், 17 கேஸ்கள் வந்திருப்பதாகக் கூறினார். இது மிகவும் சிக்கலான பிரச்சினை, கஷ்டமாகத்தான் இருக்கிறது என்று கூறி கவனித்துக் கொள்வதாகச் சொன்னார். அதோடுமட்டுமல்ல. அவர்கள் போன பட்ஜெட்டிலே, இண்டரிம் பட்ஜெட்டிலே பேசும்போது எந்தக் காரியமாயிருந்தாலும் நீங்கள் போகும்பொழுது யாரிடத்திலே வேண்டுமானாலும் சொல்லலாம் என்றார்கள். என்னைப்பொறுத்தவரையில் 15, 20 வருஷங்களாக அரசியலிலே இருக்கிறேன். எந்தப் போலீஸ் காரரையோ உயர்தர அதிகாரியையோ நேரில் பார்த்துச் சந்தித்தது இல்லை. ஆனால் முதலமைச்சரவர்கள் சொன்னபிறகு நான் ஐ.ஜி. அவர்களைச் சந்தித்துப் பல புகார் விண்ணப்பங்கள் கொடுத்து இதில் எது நியாயமோ, எது சரியானதோ அதன்படி செய்யும்படி கூறினேன்.

நான் போலீஸ் ஸ்டேஷனிற்குச் சென்று இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்று இதுவரை சொன்னது கிடையாது. தலையிட்டது கிடையாது. இனிமேலும் அப்படிப்பட்ட நிலைமையைத் தரவேண்டும்.

போலீஸ் இலாக்காவின் வேலை ஒரு தந்திக்கம்பத்திலே நிற்கும்படியான நிலைமையிலிருக்கும். எந்தப் பக்கமும் சாயாமல், கீழே விழாமல் நல்ல முறையில் பணி செய்ய வேண்டும். தமிழகத்தில் சட்டம், அமைதியைக் காக்கும்படியான பொறுப்பிலே இருக்கக்





கூடியவர்களை அரசியல்வாதிகள் கெடுக்காமல் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை. அரசியலிலே இருப்பவர்கள் இதில் ஈடுபட்டால் காரியம் மிகவும் விபரீதமாகப் போய்விடும்.

இன்னொரு கருத்து, பத்திரிகையிலே வந்திருக்கிறது. கைவிலங்கு இட்டு கைதிகளை நடுவீதியிலே எடுத்துச் சென்றார்கள் என்று. குற்றவாளிகளுக்குக் கைவிலங்கு இணைப்பதுபற்றி இப்போது பிரச்சினை இல்லை. எந்த நிலையிலே இப்படி ஏற்பாடு செய்யப்பட்டது. ஏன் அவ்வாறு அவர்களைச் செய்யும்படியாகப் போலீஸாருக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று பார்க்க வேண்டும். தேனி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் போய் கேள்வி கேட்ட நேரத்திலே தகராறு ஏற்பட்டிருக்கிறது. அவர் புகார் செய்து தவறு செய்யாதவர்களைக் கைது செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அங்கிருக்கும்படியான சப்-இன்ஸ்பெக்டர் நியாயம் எது என்று பார்க்க வேண்டுமென்று கண்டிப்போடு சொன்ன பிறகு சட்டமன்ற உறுப்பினர், அதாவது ஆளும்படியான கட்சியைச் சார்ந்தவர் தாறுமாறாகப் பேச்சுக்கொடுத்து, நிர்ப்பந்தப்படுத்தி, வெங்கடாசலபுரத்தில் இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பரைக் கைது செய்து வீதியிலே இழுத்து வந்தார்கள். தவறு செய்தவர்களை என்ன செய்யவேண்டுமென்று பிரச்சினை இல்லை. அரசியல் செல்வாக்கை இதுபோன்ற காரியங்களில் உபயோகப் படுத்தக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, சிலசமயங்களில் போலீஸிலேயே கூட தவறு செய்யாமல் இல்லை. தவறு செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். இப்பொழுது சமீபத்திலே நான் ஒரு குறுகிய கால கேள்வி போட்டிருந்தேன். 24-ஆம் தேதி கேட்டிருந்தேன். எதிர்க்கட்சித் தலைவரே நேரில் கொடுத்தும் கூட இன்னும் பதில் வரவில்லை. முதலமைச்சரவர்கள் இப்பொழுது இல்லையென்றாலும் கேள்வி நேரத்திலே பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். கடந்த எட்டாம் தேதி பவானியில், சோலையம்மாள் என்ற ஒரு பெண் வந்திருக்கிறாள். வந்தவுடனே அவள் மேல் சந்தேகப்பட்டு போலீஸில் புகார் சொல்லி, பவானி போலீஸார் விசாரணை செய்தார்கள். அவள் மீது சந்தேகப்படவே அவளை ரிமாண்டில் வைத்தார்கள். அன்று மழை பெய்துகொண்டிருந்தது. அவள் உள்ளே ஒரு கம்பியில் சேலைத் தலைப்பைக் கட்டி சுருக்குப் போட்டு கொண்டு பிணமாகக் காணப்பட்டாள் என்று வந்திருக்கிறது. அப்போது, அந்தச் சம்பவத்தின்பொழுது சப்-இன்ஸ்பெக்டர் ஊரில் இல்லை. லாக்கப் ரூமின் நீளம் 6 அடி, 6½ அடி இருக்கும். அகலம் 3 அடி. பெண்கள் தனியாக இருக்கிற இந்த லாக்கப் ரூம்கள் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவில் இருக்கின்றது. டாக்டர் சர்ட்டிபிகேட்டில் தற்கொலை செய்யப்பட்டதாக வழங்குவாரேயானால் இதை எந்த அளவிற்குச் செய்ய வேண்டுமென்பதற்காக நான் இதை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போலீஸாரின் தேவைகளைக் குறிப்பிட்டுச் சொன்னால் முதல் அமைச்சர் "நீங்கள்தான் ஆதிமூலமே என்று வந்தவுடன் காப்பாற்றும் ஆபத்பாந்தவர்" என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் ஆதிமூலமும் இல்லை, ஆபத்பாந்தவரும் இல்லை. எங்களை அவ்வாறு கூப்பிட்டாலும் எங்களால் எதுவும் செய்யமுடியாது. அது எங்களிடத்திலே ஒப்படைக்கப்படவில்லை. நீங்கள்தான் இப்பொழுது ஆட்சியில் இருப்பவர்கள். ஆகவே, நீங்கள்தான் கவனிக்க வேண்டும். எனவே போலீஸாக இருப்பவர்களை அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுத்து தக்க அந்தஸ்தில் கௌரவம் கொடுத்தால் நல்ல காரியங்களைத் திறம்படச் செய்வதற்குச் சூழ்நிலை ஏற்படும்.

நமக்கு எத்தனையோ விதமான ஆபத்துக்கள் இருக்கின்றன. வெளி ஆபத்து ஒரு புறமிருக்க, நம் தேசத்திற்குள்ளேயும் பெரிய பெரிய ஆபத்தாக இருந்துகொண்டு, ஐந்தாம் படை வேலையில் ஈடுபட்டிருக்கிறவர்களும் இருப்பார்களோ என்ற பயம் இருந்து கொண்டிருக்கிறது. கட்டுச் சோற்றிலே எலியை வைத்துக் கொண்டிருப்பதைப் போல, நமது நாட்டிற்கு வெளியிலிருந்தும் ஆபத்து, உள்நாட்டிலும் ஆபத்து இருக்கும்படியான நேரத்தில் போலீசும், இராணுவமும் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு சிலருக்குச் சலுகை, ஒரு சிலருக்குச் சலுகை இல்லை என்று இல்லாமல், எல்லோருக்கும் சம வாய்ப்பும், சம உயர்வும் இருக்கிறது என்ற கம்பீரமான, கௌரவமான நிலையை நாம் ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

தீயணைப்பைப்பற்றி காலையில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னை நகரத்தில் பல இடங்களில் தீ விபத்துக்கள் இரண்டு மூன்று நாட்களாக ஏற்பட்டதைக் குறித்து மிகவும் வேதனையோடும் வருத்தத்தோடும் அவர்கள் சொன்னார்கள். அவருடைய குறிப்பை நான் மிக மிக வரவேற்கிறேன். இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலையில், ஏழைகள், குடிசைவாழ் மக்கள், பரிதாபமான நிலையில் இருப்பவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்பதில் எல்லோருக்கும் பங்கு உண்டு. இதிலே ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வேற்றுமை இல்லை. எல்லோருமே பார்த்துச் செய்ய வேண்டிய வேலையாகும். ஆனால், தீயணைப்புப் படையானது சுறுசுறுப்பாகச் செய்யவேண்டிய கடமையிலிருந்து தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் மிக மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். தேனாம்பேட்டையில் இரண்டு நாட்களுக்கு முன்னால் தீ விபத்து ஏற்பட்ட சமயத்தில், ஒன்றரை மணி நேரம் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் காங்கிரஸ் கிரௌண்டில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டியதாயிற்று. ஃபையர் ஹைட்ரன்ட் சரியாக வேலை செய்யவில்லை. அது எந்த பிரிகேட் என்று கேட்டார்கள். விசாரித்துக்கொண்டு வந்தேன். முதலிலே தீயணைக்கும் இன்ஜின் வந்தது. வந்தவுடனே, எடுத்து உபயோகிக்க சாவி இல்லை என்று சொல்லி, வேலை செய்ய முடியாது என்று நிறுத்திவிட்டார்கள்.





இரண்டாவது இன்ஜின் வந்துதான் தண்ணீர் எடுக்க ஆரம்பித்தார்கள். டாங்கியிலிருக்கும் தண்ணீரை எடுக்கப் போக, அங்கே தண்ணீர் இல்லாமல், ஏதோ ஒரு கிணற்றிலிருந்து எடுத்து உபயோகிக்கப்பட்டது. இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், இருபது வருஷ ஆட்சியில் கெடுதல் செய்துவிட்டதாகச் சொல்லுகிறார்களே, என்பதற்காகத்தான். (மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எந்தச் சாவி?) ஃபையர் ஹைட்ரன்டை உபயோகிக்க, ஹோஸைத் திறந்து வைக்கத்தான். அதே இடத்தில் மெஷின் நின்று, அடுத்த மெஷின் வரவேண்டியதாயிற்று. தீ பிடித்தது என்றால், அரை மணி நேரத்தில் எல்லாம் அழிந்து விடும். அந்த நிலையிலே இருந்திருக்கிறார்கள். போலீசினுடைய அஜாக்கிரதைக்காகக்கூடச் சொல்லவில்லை. நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. காலா காலத்தில் சுறுசுறுப்பாக நடந்துகொள்ளவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. எதற்கெடுத்தாலும், பழைய அரசாங்கத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? காங்கிரஸ்காரர்கள் தண்ணீரையெல்லாம் எடுத்துக்கொண்டா போய்விட்டார்கள்? சாவியைக் கூடவா எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்? இப்பொழுதிருக்கும் நிர்வாகம் சீர்திருத்தம் செய்து, நல்ல காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் ஞாபகப்படுத்துகிறேன். இம்மாதிரி நிலைமையில், இனிமேல் செய்யவேண்டிய வேலை என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

அரசியலிலே இருக்கக் கூடியவர்கள்—எந்தக் கட்சியாக இருந்தாலும்—குறிப்பாக ஆளுங்கட்சியிலே இருக்கக் கூடியவர்கள் போலீஸைத் தங்களுடைய சுய செல்வாக்கிற்காக உபயோகப் படுத்தக் கூடாது என்ற நிலை இருக்குமானால், எங்களுடைய கட்சியின் ஒத்துழைப்பும் ஆதரவும் என்றைக்கும் இருக்கும். முதலமைச்சரும் திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும். நியாயமான, நேர்மையான காரியங்களுக்காக வந்தால்தான் ஆதரவு என்ற நிலையைக் கண்டிப்பாக அவர்கள் அறிவித்துவிடவேண்டும். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், பல இடங்களில் ரொம்ப ரொம்ப நடந்துகொண்டிருக்கிறது. நான் அதிகமாகச் சொல்ல நேரம் இல்லை. காங்கிரஸ் கட்சிக் கொடியைக் கட்டினால், அங்கு திராவிட முன்னேற்றக் கழகக் கட்சிக் கொடியைக் கட்டுவது என்று இப்படியெல்லாம் நடப்பதற்கு ஆதரவு தந்தால், இது பெரிய கஷ்டமாகத்தான் முடியும். தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. இனியும் எதற்காக இந்தக் கஷ்டங்களெல்லாம்? மதுரையில் ஓரிடத்தில் கதர்க்கொடி கட்டிய விதத்தில் மனக்கசப்பான சம்பவம் நடந்தது. இம்மாதிரி மனக்கசப்பை உண்டாக்கக்கூடிய விதத்தில் போலீஸை உபயோகப்படுத்தாமல், நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நண்பர் திரு. நல்லசாமி அவர்கள் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் உரையை முடிக்கின்றேன்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களிலே பலர் பல நல்ல கருத்துகளை

யெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே இடையிடையே கட்சிக் கண்ணோட்டங்கள் குறுக்கிட்டாலும், மூன்று முக்கியமான விஷயங்கள் இந்த விவாதத்தின் மூலமாக எனக்குக் கிடைத்திருக்கின்றன என்று நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒன்று—நாட்டினுடைய சமுதாய வாழ்விற்குப் போலீஸ் துறை திறமையாக இருக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டு பேசியிருக்கிறார்கள். இரண்டாவதாக—ஒரு திறமை யுள்ள போலீஸ் துறை அமைய வேண்டுமானால், அவர்களுக்குப் போதுமான அளவிற்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதையும் ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்கள். மூன்றாவதாக—அந்தத் துறையிலே வேறு யாரும் தலையிட்டு, தங்களுக்குச் சாதகமாக அந்தத் துறையைத் திருப்பிக் கொள்ளக்கூடாது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இந்த மூன்று கருத்துக்களில் யாருக்கும் மாறுபாடான எண்ணம் இருக்கவே முடியாது. அதிலும், அரசியல் கண்ணோட்டத்தோடு போலீஸ் துறையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறவர்கள் கூட, அப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வாதாட மாட்டார்கள். அவர்களுக்கே தெரியும், அது தவறு என்று. ஆகையால், இந்த மூன்று அடிப்படையான கருத்துக்கள் ஒருமித்தமான முறையில் இந்த அவையிலிருந்து கிடைத்திருப்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

முதலிலே, போலீஸ் துறை நேர்த்தியுள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்கு நாம் இரண்டு காரியங்களைப் பூர்த்தி செய்தால்தான் அது நிறைவுள்ளதாக இருக்கும் என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் துறையாக இருந்தாலும் சரி, ரெவின்யூத் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும், சமுதாயத்தில் இருக்கிற பண்பின் பிரதிபலிப்பாகத் தான் அந்தத் துறை இருக்குமே தவிர, சமுதாயத்திற்கு அப்பாற் பட்டதாக எந்தத் துறையும் இருக்க முடியாது. ஏனென்றால், எந்தத் துறைக்கும் நம்மிலே இருந்துதான் சிலரை நாம் அனுப்பி வைக்கிறோம். நம்முடைய அண்ணனோ, தம்பியோ, மைத்துனனோ, பெரியப்பார் மகனோ இப்படி நம்மிலேயிருந்துதான் சில பேர்கள் எந்தத் துறைக்கும் செல்லுகிறார்கள்- போலீஸ் துறை உட்பட. ஆகையால், மொத்தமாக சமுதாயத்தில் எப்படிப்பட்ட நேர்த்தி இருக்கிறதோ, அதுதான் எந்தத் துறையிலும் பிரதிபலிக்கும். ஆகையால், போலீஸ் துறையிலே இருக்கின்ற சில பல குறை பாடுகள் நீக்கப்படுவதற்காகச் சமுதாயத்தினுடைய நேர்த்தியும் வளர வேண்டும். அது வளர வளர, அந்தக் குறைபாடுகள் தன்னாலே குறையும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.

இதுவரையில் நம்முடைய நாட்டில் வெள்ளைக்காரர் ஆதிக்கம் இருந்த நாளிலிருந்து போலீஸ் துறைக்குச் செல்லுகிறவர்கள் அதிகாரம் செலுத்துவதற்கும், ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும்,



மக்களிடத்திலே பயம் உண்டாக்குவதற்கும், அந்தப் பயத்தை ஊட்டுவதன் மூலமாக சமூகத்தைக் கட்டிக்காப்பதற்கும் பொறுப் பேற்றுக்கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அது நாளா வட்டத்தில் நிச்சயமாக மாறுதல் அடையும்; மாறுதல் அடைந்து கொண்டு வருகிறது. அப்படி மாறுதல் அடையவேண்டுமானால், நான் முன்னே ஒரு நாள் இங்கே குறிப்பிட்டபடி, போலீஸ் துறை யிலே பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், இப்பொழுது இருப் பதைவிட இன்னும் சற்றுத் தரமுள்ளவர்களாக இருப்பவர்கள் அதிலே சேர்க்கப்படவேண்டும். அப்படிப்பட்டவர்கள் சேர்க்கப் பட வேண்டுமானால், அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியங்களும், வசதிகளும், சலுகைகளும், எல்லோரும் அதிலே சேரலாம் என்று எண்ணத்தக்க, ஒரு ஆவலை கிளரத்தக்க வகையில் அந்த வசதி களெல்லாம் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், முன்னாலே போலீஸ் துறைக்கும் பொது மக்களுக்கும் இருந்துவந்த இடைவெளி நாளாக, நாளாக இன்றைய தினம் குறைந்து கொண்டு வருகிறது. குறைந்துகொண்டு வரு வதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. ஒன்று —போலீஸ் துறையிலே உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளை அதிக மான அளவிற்கு உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். பொது மக்களும் போலீஸ் துறை இல்லாமல் காரியம் நடக்காது என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது வளர வளர, போலீஸ் துறை யிலே இங்குமங்குமாகக் காணப்படுகிற குறைபாடுகள் நிச்சயமாக, படிப்படியாகக் குறைந்துவிடும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

மற்றும் ஒன்று அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் பேச்சு வருகிற நேரத்தில், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், "திரும்பத் திரும்ப நீங்கள் இருபது வருடக் கதையையே சொல்லுகிறீர்களே, அதையே சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்" என்றார்கள். அவருக்கு உள்ளபடியே சங்கடம் இருப்பதை நான் உணருகிறேன். ஏனென்றால், அதை எடுத்துச் சொல்லச்சொல்ல அவர்களுக்கேகூட என்னமோ போல் இருக்கிறது. உண்மைதானே? உண்மையை, 'இப்படிச் செய்து வந்தீர்களே. இப்படிச் செய்து வந்தீர்களே' என்று இதைத் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறீர்களே என்று எண்ணிச் சங்கடப் படுகிறார்கள். இனிமேற்பட என் பக்கத்திலிருக்கும் என்னுடைய நண்பர்களை, அதைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, 'இப்படி யெல்லாம் நாம் நடந்துகொள்ளக் கூடாது. நாம் நடந்துக் கொள்ளக் கூடாது' என்று சொல்லிக்கொண்டு அதைச் சொல்ல வேண்டும்' என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். (சிரிப்பு) ஏனென்றால், இப்பொழுது நடப்பதாகச் சொல்லப்படும் சிலபல கருத்துக்களை விளக்குகிற நேரத்தில், முன்னாலே நடந்ததை மேற் கோளுக்காகத்தான் எடுத்துச் சொல்லப்படுகிறதே தவிர, குற்றஞ் சாட்டுவதற்காக அல்ல,

அதிலும் நம்முடைய நண்பர், ராஜபாளையம் உறுப்பினர் மிக நல்ல கருத்து ஒன்றைச் சொன்னார். நம்முடைய நாட்டில் போலீஸ் துறையாகட்டும், அல்லது வேறு எந்த அதிகாரத் துறையாகட்டும், இருபதாண்டுக் காலமாக தொடர்ந்து ஓரே ஒரு கட்சி ஆட்சியிலே இருந்ததால், அவர்களுடைய மனத்தில் ஜனநாயகம் ஒரு காலத்தில் இந்த நாட்டில் நடைபோடும் என்ற எண்ணம் எழவே இல்லை; இல்லாததால், அவர்கள் திருப்பித் திருப்பி எந்தக் கட்சி ஆட்சிக்கு வரும் என்று கருதினார்களோ, அந்தக் கட்சியில் உள்ள அவர்களுடைய மனப்போக்குக்கு ஏற்றபடி தங்களை மாற்றிக் கொண்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இப்பொழுதுதான் முதன் முறையாக வேறொரு கட்சி அரசாள முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஐந்து வருஷம், பத்து வருஷம், வேறு வேறு கட்சிகள் மாறி மாறி வரும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டால், எந்தக் கட்சியும் போலீஸ் துறையை மட்டுமல்ல, எந்த அதிகாரத் துறையையும் தங்கள் பக்கத்தில் இழுத்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் வராது. உள்ளபடி சொல்ல வேண்டுமென்று சொன்னால், நண்பர் கருத்திருமன் அவர்கள், "நான் எந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கும் போகவில்லை; இனிமேலும் போகப் போவதில்லை" என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். இப்போது அவர் எந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனாலும், ஆளும் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினருக்குக் கிடைப்பதைவிட அவருக்கு மரியாதை அதிகமாகக் கிடைக்கும். எதனால் கிடைக்கும்? அவரைப் பார்க்கின்றபொழுது இருபது ஆண்டுக் காலம் இருந்த காங்கிரஸ் ஆட்சியின் நிழலாடும். 'இப்போது இல்லாவிட்டாலும் அடுத்த தடவை இவர்கள் வரக்கூடும். அப்போது நம் நிலை என்ன ஆகுமோ" என்று பயந்த நிலையில் செயல்படுவார்கள். ஆனால் என் பக்கத்தில் இருப்பவர்கள் போனால், "எப்படி இவர்கள் வந்துவிட்டார்கள்? இன்னும் கொஞ்சநாட்களுக்கு இருப்பார்களா?" என்று தான் கூறுவார்கள். 'இன்னும் கொஞ்சம் நாட்களுக்குத்தான்—கடைசிவரையில் இல்லை' என்றுதான எண்ணுவார்கள். இப்போதுகூட பதவியில் இல்லாத காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிற செல்வாக்கு, பதவியிலுள்ள முன்னேற்றக் கழகக்காரருக்கு இருக்காது என்பதை மனித மனப்பாங்கின்—உள்ளத்தின் அடிப்படையில்—இதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு, தங்களிடம் இருந்ததையெல்லாம் இழந்துவிட்டதைப் போலவும், இல்லாதது எல்லாம் நமக்கு வந்துவிட்டதைப்போலவுமான மனப்பிராந்தி வந்துவிட்டது. அந்த நிலைமை நிச்சயமாக எழுவதற்கில்லை.

இங்குமங்குமாக கலவரங்கள், குழப்பங்கள், தாக்குதல்கள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அவைகளிலே ஒன்று, என்னுடைய மதிப்புமிக்க குறிஞ்சிப்பாடி தொகுதி நண்பர் ராஜாங்கம் எடுத்துச் சொன்னது. இந்தக் கலவரங்களைப்பற்றி எடுத்துப் பேசுகின்ற நேரத்தில் உறுப்பினர்கள் அருள்கூர்ந்து,





'அந்தக் கலவரங்கள் வகுப்பு அடிப்படையில் நடந்திருக்குமானால்' என்று அதைத் திரும்பத் திரும்பத் தெளிவுபடுத்துவதன் மூலம், அது வகுப்பு மாச்சரியங்களுக்கு வித்தாகும். எனவே, அவ்வாறு எடுத்துரைக்க வேண்டாமென்று மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். சில நாடுகளிலே இருப்பதைப்போல, இந்தியாவிலே சில பகுதிகளில் உள்ளதைப்போல, ஒரு அரசியல் கட்சிக்கு ஒரு வகுப்பு சொந்தம் என்ற நிலைமை இந்நாட்டில் இல்லை. எல்லாக் கட்சிகளிலும் எல்லா வகுப்பாரும் இருக்கிறார்கள். ஆதித்திராவிடர்கள் என்றால் இந்தக் கட்சிதான்; முதலியார்கள் என்றால் இந்தக் கட்சி; மற்ற ஜாதிகளுக்கு ஒரு கட்சி என்று குறிப்பிட்டுச் சொல்லும் நிலைமை வேறு இடங்களில் இருக்கலாம். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கட்சியிலும் ஒரு கணிசமான அளவுக்கு எல்லா வகுப்பு உறுப்பினர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான அரசியல் கட்சி வளர வளரத்தான் இந்த வகுப்புக் கலவரங்கள் குறையும். ஏதாவது கலவரங்கள் நடக்குமானால், அது இந்த வகுப்புக்கும், அந்த வகுப்புக்கும் நடந்தது என்று எண்ணிக்கொண்டு, தாங்களும் சரியாகப் புரிந்து கொள்ளாமல், அப்படிச் சிலர் புரிந்துகொள்வதாக எடுத்துப் பேசிக் கொண்டிராமல், கூடுமான வரையில் வகுப்பு உணர்ச்சிகளுக்கு இடமளிக்காத வகையில் உறுப்பினர்களும் ஒழுக வேண்டும். விரிவாகச் சொல்லப்படக்கூடிய அளவுக்குக்கூட வகுப்புக் கலவரங்கள் நம்முடைய மாநிலத்தில் இல்லை.

தென்னார்க்காடு மாவட்டத்தில் இரண்டொரு இடங்களில் கலவரங்கள் என்று சொல்லத்தக்க அளவில் இருக்கின்றன. ஒன்றுகூட வகுப்பு அடிப்படையின் காரணமாக ஏற்பட்டது அல்ல. ஏர் வாங்கியது, மாடு முட்டியது—வீடு வாங்கியது—மாடு மேய்ந்தது என்று ஆரம்பித்து, 'என்ன! உன்னை எனக்குத் தெரியாதா? உன் ஜாதியைப் பற்றி எனக்குத் தெரியாதா?' என்று பேச்சு வளர்ந்து, அது அரசியல்வாதிகளிடத்தில் வந்த பிறகு, நாம் ஒரு பக்கத்தில் நிற்கலாம் என்று அவர்கள் போன பிறகுதான், அது வகுப்புக் கலவரம் என்று பெயர் எடுத்திருக்கிறதே தவிர, பெரும்பாலான கலவரங்கள் இரு சாராருக்கும் வருகின்ற தகராறின் அடிப்படையிலேதான் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நம்முடைய உறுப்பினர்கள் உணருவார்கள் என்று நம்பிக்கை கொள்கிறேன். அதைப் பற்றிப் பேசி, முன்னேற்றக் கழகத்தை ஏதாவது தொல்லைகளுக்குக் கொண்டு வரலாமா என்று எண்ணுவார்களானால், நாம் அத்தனை பேரும் சேர்ந்து வகுப்புத் தொல்லையை ஏற்படுத்தித் தந்தவர்கள் ஆவோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். கூடுமான வரைக்கும் இத்தகைய பேச்சுக்களை நாம் குறைத்துக் கொள்ள வேண்டும். அடியோடு விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் பழகியிருக்கின்ற பழக்கத்தைச் சீக்கிரத்தில் விட்டுவிட முடியாது—குறைத்துக்கொள்ள முடியும்.

இன்னொன்று. இப்போது காங்கிரஸ்காரர்கள் ஆளும் கட்சியாக இல்லாத காரணத்தால் சில இடங்களில் பல்வேறு நிலைமைகளால் கலவரங்கள் தோன்றுகின்றன. சேலம் ஜில்லாவிலுள்ள அம்மாப்

பேட்டையை உதாரணம் காட்டினார்கள். அம்மாப்பேட்டை பகுதியில் நடக்கின்ற கலவரங்கள் எந்த அடிப்படையில் நடக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு பக்கத்தில் காங்கிரஸ்காரர்கள்—ஒரு பக்கத்தில் கழகக்காரர்கள் என்று நடக்கிறது? ஒரு பக்கத்தில் அண்ணன்—இன்னொரு பக்கத்தில் தம்பி. ஒரு பக்கத்தில் மாமன் என்றால் ஒரு பக்கத்தில் மைத்துனன்; ஒரு பக்கத்தில் கடையின் முதலாளி என்றால் இன்னொரு பக்கத்தில் பங்காளி—இவர்கள்தான் அதை நடத்துகிறார்கள் என்பது அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அம்மாப்பேட்டையைப பற்றிச் சொன்னபோது நான் ஒன்று குறிப்பிட்டேன். அம்மாப்பேட்டை நூலுக்கு பேர் போன இடம். நூல் சிக்கலுக்கும் பேர் போன இடம். ஆகவே, இந்த இடத்தில் சிக்கல் இருக்கிறது. ஆனால் கலவரங்கள் தானாகவே தீர்ந்து விடும் என்று தெரிவித்துவிட்டு, இதையெல்லாம் சட்டமன்றத்திலே கொண்டுவந்து, இது காங்கிரஸுக்கும் கழகத்துக்கும் நடக்கும் சண்டை என்று சொல்லிக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே யார் கெட்டிக்காரர்கள் என்றால், கலகம் செய்கிறவர்கள்தான். யார் கெட்டிக்காராக இல்லாமல் போய்விடுகிறார்கள்? —அரசியல்வாதிகளாகிய நாம்தான் ஏமாற்றப்படுகிறோம்.

'நான் காங்கிரஸ்காரனாக இருப்பதால்தான் கழகக்காரன் என்னை அடித்தான்' என்று யாராவது போய் காங்கிரஸ் தலைவர்களிடத்தில் சொன்னால், அதை அப்படியே நம்பிவிடக்கூடாது. உண்மையை ஆராய வேண்டும். அதேபோல, 'நான் கழகத்தைச் சேர்ந்தவனாக இருப்பதனால்தான் என்மீது காங்கிரஸ்காரர்கள தாக்குதல் நடத்தினார்கள்' என்று யாராவது வந்து என்னிடத்தில் சொன்னால், அதை நம்ப நான் தயாராக இல்லை. அவர்கள் நமக்குள்ளே சண்டையை மூட்டிவிடும் சமூகவிரோத சக்திகள். கோழிச் சண்டையில் இரண்டு கோழிகளும் ஒன்றையொன்று தாக்கிக்கொள்கிற நேரத்தில், அதை வேடிக்கை பார்க்கக்கூடியவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வார்களே, அதுபோல அவர்கள் நமக்குள்ளே சண்டையை மூட்டிவிடுகிற சமூகவிரோத சக்திகள். உங்களுக்கு வருகிற கடிதங்கள், வருகிற புகார்கள் இவைகளைக்கண்டு காங்கிரசாருக்கு தொல்லை ஏற்பட்டது என்று நீங்கள் சொல்லலாம். நண்பர் கருத்திருமன் அவர்கள் வசதியுள்ளவர்கள். ஏதாவது கலவரம் நடந்ததென்றால், அந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று, முழுத் தகவல்களை அறிந்து கொடுத்தால், 24 மணி நேரத்திற்குள் அதற்குரிய நியாயமான பரிகாரத்தை நான் தேடித் தருவேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் கருத்திருமன் அவர்கள் 'பின்' னிலே குத்திவைக்கப்பட்ட கடிதங்களை எனக்கு காட்டினார்கள். அதையும் ஒருவர் அவசரம் அவசரமாக இப்போது கொண்டு வந்து கொடுத்தார். அதுபோல கடிதங்கள் என்னுடைய ஜேபியிலே நிறைய இருக்கின்றன. வீட்டிலே அடுக்கடுக்காக இருக்கின்றன. இதை வைத்துக்கொண்டு பேசுவதைவிட அந்த இடத்திற்கு நாமே சென்று ஆராய்ந்து பார்த்து, நம்முடைய கட்சிக்காரர்கள் கூறு





வதில் கடைசியாக உண்மை என்று படுவதை மட்டும் என்னிடத்தில் சொன்னால், அதற்குத் தகுந்த பரிகாரத்தைத் தேடத் தயாராக இருக்கிறேன்.

முக்கியமான ஒன்று. தேனியிலே ஒரு சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டார்கள். அது, காங்கிரஸ்காரர்கள், கைவிலக்கு போட்டுக் கொண்டுவரப்பட்டார்கள் என்பதாகும். இதைக் கேட்டதும் முதலில் நான் பதறவில்லை. இது எங்களுடைய கழகத்திற்கு நீண்ட நாளாக நடந்து வந்த விஷயம். எதற்காக அவர்கள் அப்படிப் பதறுகிறார்கள் என்றால்,—ஏன் உங்களுக்குப் பதறுகிறது பி.ப. 1-30
என்றால்,—இருபது வருடங்களாக தர்பாரிலே இருந்துவிட்டு, இப்போது கைவிலங்கு போட்டால் பதறத்தானே செய்வார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கைகளில் விலங்கு போடப்பட்டு நாங்களும் வீதியில் இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறோம். எங்களுக்கு அந்த அனுபவம் ஏற்படாதது அல்ல. அதற்காகப் பதறிப்போய் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், ஒரு சட்ட மன்ற உறுப்பினர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சொன்னதன் பேரில் இப்படிக் கையில் விலங்கிட்டு இழுத்துச் சென்றது சரியா என்பதாகத்தான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : சரி, முற்பகுதி கைவிடப்பட்டது என்று கருதுகிறேன். பிற்பகுதியைப் பற்றிச் சொல்கிறேன். தேனி என்று சொன்னவுடனே பழைய சம்பவங்கள் நினைவுக்கு வரத்தான் வருகின்றன. பழைய விஷயங்களையே எழுப்புகிறீர்கள் என்று சொல்லலாம். ஆனால் அவ்வளவு எளிதில் மறந்துவிடக்கூடியதல்ல. இப்போது அமைச்சராக இருக்கிற நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இன்று உயிர் பிழைத்திருப்பது, தேனியில் அவர் மீது வீசப்பட்ட கல் அவர் மீது படாது தவறிவிட்டதன் விளைவாகத்தான் என்கிற நேரத்தில் இப்படி ஒரு கட்சியின் பிரமுகராகவே இருக்கிற நெடுஞ்செழியன் பேசிய கூட்டத்தில் கல்லை வீசி, அதுவும் அப்படி வீசியவர் காங்கிரஸ்காரர் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு, வழக்கின் காரணமாக மனக்கசப்பை வளர்க்கவேண்டாம் என்ற எண்ணத்தினால் ராஜி செய்து கொண்ட பழைய சம்பவம் எப்படி நினைவில் இருந்து அகன்று விடும்? இதையே பேசுகின்றீர்களே என்று கேட்கலாம். உணவு நெருக்கடியைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் வெள்ளைக்காரனால் இத்தனையும் வந்தது என்று நினைக்கவில்லையா? 'நான் போய் எத்தனையோ நாட்களாகிவிட்டன; இன்னும் எதற்காக என்னை இழுக்கிறீர்கள்?' என்று வெள்ளைக்காரன் கேட்க முடியும்? ஒரு தடவை ஒரு வீட்டிற்குள் நுழைகிற போது நிலைப்படியில் இடித்துக் கொண்டால் ஒன்பது ஆண்டு கழித்து அந்த நிலைப்படியைக் கடக்கிறோம் என்றாலும் "ஆ" என்று நிலைப்படியைப் பார்த்துத் தலையைத் தடவிக்கொள்கிற உணர்ச்சி இருக்கத்தான் செய்யும். உங்கள் ஆட்சியில் நாங்கள் பட்ட தொல்லைகளை நினைக்கிறபோது 'ஆ' என்ற உணர்ச்சிதான் இருக்கிறது. இதை உங்களுக்கு எரிச்சல் ஊட்ட வேண்டுமென் பதற்காகச் சொல்லவில்லை. சில ஊர்களில் இந்தப் பழக்கம் இருக்

கிறது. அன்றைக்குத் தேனியில் எங்களை அடித்தார்கள். இன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் மீது அடி விழுந்திருப்பதாகச் சொல்கிறார்கள். சில பேர்கள் இருக்கிற இடத்தில் இந்த மாதிரி யாக நடந்து வருகிறது என்பது தான் எனக்குக் கிடைக்கிற பாடம் 'அப்படி நடக்கலாமா? அதற்கு சட்ட மன்ற உறுப்பினர் குறுக்கிட்டு இதைச் செய், அதைச் செய் என்று சொல்லலாமா? என்று கேட்கிறார்கள். அப்படி கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் நடந்துகொண்டிருப்பாரேயானால் கட்சி அடிப்படை யில் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு நான் தயாராய் இருக்கிறேன். (ஆரவாரம்) கைவிலங்கு பூட்டி இழுத்துச் சொல்கிறேன். ஒரு போலீஸ் அதிகாரியிடத்தில் சென்று நீங்கள் ஜஸ்டிஸ் சோமசுந்தரம் இருக்கிறார். இன்னும் பலர் இருக்கிறார்கள். இதைப்பற்றி நடுநிலையில் இருந்து விசாரணை நடத்துவதற்கு நான் ஓய்வுபெற்ற நீதிபதிகளில் யாரை வேண்டுமானாலும் போடுகிறேன். நேர்மையான, நடுநிலைமையான அவரது தீர்ப்பில் கைவிலங்கு பூட்டி இழுத்துச் சென்றார்கள் என்பது தெரியவந்தால் அந்தப் போலீஸ் அதிகாரியின் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும் உறுதியளிக்கிறேன். அப்படி விசாரணை செய்கிறபோது அவ்வாறு நடக்கவில்லை என்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டால் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? (திரு. பி. ஜி. கருத்திருமன்: அதைவிட்டு விடுகிறோம்.)

ஆகா! நல்ல வார்த்தை அந்தப் பேச்சை விட்டுவிடலாம். நண்பர் கருத்திருமனுக்குத் தெரிந்த இராமாயணப் பாட்டிலேயே யாரோ சீதையைப்பற்றிச் சந்தேகமாகச் சொன்னான் என்பதற் காக சீதையின் கண்ணைக்கட்டி காட்டிலே கொண்டுபோய் அவளை விட்டுவரும்படி ராமன் சொன்னான் என்பதாக அவர் படிக்கிறார். "நான் அப்படி நடந்தது என்று சொல்கிறேன். இல்லை என்று நிரூபித்துவிட்டால் அதைவிட்டுவிட்டு வேறு ஒன்று சொல்கிறேன்" என்பது பொறுப்புள்ள எதிர்க்கட்சியின் சுபாவமாக வளரக் கூடாது. வேடிக்கைக்காகச் சொல்லலாம். எங்களைப் பார்த்த வுடனே, இதைச் சொல்லலாமா, அதைச் சொல்லலாமா என்று எழுகிற குறுகுறுப்புக்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. சொல் வதில் உண்மை இருக்கிறதா என்று தெரிந்துகொண்டு சொல்ல வேண்டும். எனக்குக் கிடைத்திருக்கிற தகவலில் கையில் விலங்கு பூட்டி கொண்டுவரப்பட்ட சம்பவம் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதை நடுநிலைமையாளராக ஒரு நீதிபதியைப்போட்டு விசாரிப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: நான் சொல்வதை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார்கள். ஒருவகையில் மகிழ்ச்சி, ஆயினும் என்னிடத்தில் உள்ள நட்பு காரணமாக, பாராளுமன்றத் திலே பல நாட்கள் பழகியுள்ள தன்மையைக் கொண்டு சட்ட மன்றப் பண்போடு நடந்துகொண்டிருப்பார்களானால் இங்கே பேசாமல், என்னிடத்தில் தனியாகச் சொல்லியிருக்கக்கூடும். அப்படிச் சொல்லியிருந்தால் இப்போது சர்வகலாசாலைகளில்





மார்க்குகளை கிரேடு போட்டுக்கொடுக்கிறார்களே அதுபோல அவருக்கு 'டி' அல்லது 'டி' ப்ளஸ் கொடுத்திருப்பேன். ஆனால் இப்போது அவருக்கு 'பி' ப்ளஸ் தான் (சிரிப்பு) அதிகம் பாராட்ட வில்லை. இதற்காகிலும் ஒத்துக்கொண்டார்களே என்பதற்கு மகிழ்ச்சி.

ஏதேதோ புகார்கள் எல்லாம் வருகின்றன, மிரட்டுகிறார்கள் என்பதாக ஓர் உறுப்பினர் குறிப்பிட்டார். திரு. ஜயராஜ் கூடச் சொன்னார் என்று கருதுகிறேன். மிரட்டுகிற கடிதம் அவர்களுக்கு மட்டும் அல்ல. ஒரு நாளைக்குப் பல கடிதங்கள் எங்களுக்கும் வருகின்றன. இதோ ஒரு கடிதம்—எனக்கு வரவில்லை; அமைச்சர் கருணாநிதிக்கு நேற்று வந்திருக்கிறது. கழகத் தோழர் எழுத வில்லை காரணம், கலைஞர் கருணாநிதி என்றோ, மாண்புமிகு அமைச்சர் கருணாநிதி என்றோ குறிப்பிட்டிருந்தால் கழகத்தவர் போட்டிருப்பார் என்று கூறலாம். அப்படி இல்லை. "அமைச்சர் கருணாநிதியே, தயார் செய்து கொள்ளும் உமது தலையை. மிகவும் வருந்துகிறேன். பொதுப்பணித்துறை அமைச்சரும் பிரபல பேச் சாளருமான மு. கருணாநிதியே, 24—7—1967 அன்று நீர் சுட்டுக் கொல்லப்படுவீர், தமிழகத்தில் எங்கு இருந்தாலும் இது நடந்தே தீரும், இது உறுதி" என்கிற மிரட்டல் கடிதம் இதோ இருக்கிறது. நேற்று வந்தது.

THIRU K. VINAYAKAM : Is it an anonymous letter.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இப்படிப்பட்ட கடிதங்கள் அநாமதேயக் கடிதங்களாகத்தான் வரும் என்பதை வழக்கறிஞர் விநாயகம் தெரிந்துகொண்டிருப்பார். கையெழுத்து போட்டு அனுப்பப்பட்டிருந்தாலும் நான் பொருட்படுத்தத் தயாராய் இல்லை. காரணம், இப்படி ஒரு முடிவு இருக்குமானால் இதைவிட இன்பமான முடிவு எங்களில் வேறு யாருக்கும் இருக்க முடியாது. (பலத்த ஆரவாரம்) இப்படிச் சிலபேர் அவர்களையும் மிரட்டியிருக்கலாம். எந்த ஊருக்கு நாங்கள் போகிறோம் என்றாலும் இதுபோன்ற மிரட்டல் கடிதங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இதைப்பற்றிச் சட்டசபையில் பேசுவது என்று ஆரம்பித்தால் டன் டன்னாக இருக்கின்றன. நீங்கள் இருபது வருடம் செல்லப் பிள்ளையாக இருந்தீர்கள். அன்று மோகமாக அந்த நிலையில் இல்லாதபோது உங்களால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. அதை உணர்கிறேன். பெரிய வீட்டில் இருந்துவிட்டு, அந்த வீடு எலத்தில் போக வேறு ஒரு வீட்டில் குடியிருக்க நேரிடு கிறபோது சுற்றிச் சுற்றிப் பார்த்து, 'சீ! இந்த இடத்திலா இருப்பது?' என்று தோன்றக் கூடும். எதிர்க்கட்சித் தலைவர்கூட வெளியில் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். "எதிர்க் கட்சியில் உட்கார ரொம்ப வெட்கமாக இருக்கிறது, வேதனைப் படு கிறேன்" என்று அவர் பேசியிருக்கிறார். வெட்கப்பட, வேதனை அடைய என்ன இருக்கிறது? ஜனநாயகம் இந்த நாட்டில் வளர வேண்டும் என்பதுதானே நம் நோக்கம். அவர், 'வெட்கப்படு கிறேன், வேதனை அடைகிறேன்' என்று சொல்வதற்கு மாறாக,

“ஜனநாயகத்தை வளர்ப்பதற்காக நாங்கள் பதவிகளைத் தியாகம் செய்திருக்கிறோம்” என்று குறிப்பிட்டிருந்தால் கேட்பதற்கு நன்றாக இருக்கும் அதைப் பிற்காலத்தில் வருகிறவர்கள் படித்துப் பார்க்கிற போது கூட ‘அடடா! எவ்வளவு உயர்ந்த நோக்கம் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள்’ என்று நினைத்துக்கொள்ளக் கூடும். அதைவிட்டு ‘வெட்கமாக இருக்கிறது’. வேதனை அடை கிறேன்’ என்பதாக தம்முடைய உள்ள அரிப்பை வெளிப்படுத்து வதைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளவேண்டும். உள்ளபடியே நிர்வாகத்தில் தவறு நடந்திருக்குமானால் உடனுக்குடன் அதைத் திருத்துவதற்கான முழு உரிமையை நான் உங்களுக்குத் தரு கிறேன். என்னுடைய நோக்கம். இன்று நாங்கள் அரசாளலாம்; நாளைய தினமே வேறு ஒரு கட்சி அரசாள வரலாம்; யார் ஆளுவதாக இருந்தாலும் நம் செல்வாக்கைப் பயன்படுத்தி எந்தத் துறையையும் பாழ்படுத்தக் கூடாது. அதுவும் நிச்சயமாக போலீஸ் துறையைப் பாழ்படுத்திவிடக் கூடாது. அதுவும் சட்டசபையில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நாம் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளக் கூடாது. உதாரணத்திற்கு சொல்கிறேன். ஒரு போலீஸ் அதிகாரியிடத்தில் சென்று நீங்கள் ஏதாவது சொல்வீர்கள். குறிப்பாக அவர் செய்த காரியம் தவறு என்று எதிர்க்கட்சித் தலைவரே சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். போலீஸ் அதிகாரி வெகு தந்திரக்காரராக இருந்தால் “ It is not my doing, you know the situation ” என் பதாக இரண்டு வார்த்தைகள் குறிப்பிடுவார். அவ்வளவுதான் ‘ஓஹோ! திராவிட முன்னேற்றக் கழக அரசு அல்லவா பதவிக்கு வந்திருக்கிறது; அமைச்சர் கருணாநிதிதான் இப்படிச் செய்யச் சொல்லியிருக்கிறார் போல் இருக்கிறது’ என்கிற ஊகங்கள் தோன்றி விடும். அதுபோல, அன்றைக்கு எங்களிடமும் சொல்லியிருக் கிறார்கள். இப்படி சமூக விரோத சக்திகளும்கூட அரசியல்காரர் களைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதிகார வர்க்கத்தினர்களும் கூட பல சந்தர்ப்பங்களில் அவர்கள் செய்கிற தவறை அரசியல் கட்சிகளின் தலையில் போட்டுத் தப்பித்துக் கொள்கிறார்கள். அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நாம்தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாது இதில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். நாம் நிலைமையைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது எங்களுக்கு ஏதாகிலும் கெடுதல்கள் ஏற்பட்டு போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் அணுகுகின்ற நேரத்தில் “ எங்களுடைய மனத்திற்குத் தெரியும் இது நியாயமல்ல என்று, ஆனால் என்ன செய்யலாம்? ஆட்சி யாருடையது என்பது உங்களுக்குத் தெரியும்” என்று எங்களுக்கு அப்பொழுது அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல் இன்றைக்கு அவர்கள் உங்களுக்குச் சொல்லக்கூடும். அதிகாரிகளை அணுகிக் கொள்வதற்கு முன்னாலே நாம் ஒருவருக்கொருவர் தெரிந்துக்கொள்ளலாம். அப்படித்தெரிந்து கொள்வோமானால் பல் வேறு வகையால் சிக்கல்கள், சிக்கல்கள் அல்ல என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்தத் துறையைப்பற்றிய மூன்று கருத்துக்களில் நாம் எல்லோரும் கருத்தொருமித்திருக்கிறோம். ஒன்று, அந்தத்





துறை நேர்த்தியான துறையாக ஆக்கப்படவேண்டும்; இரண்டு, அவர்களுக்கு வேண்டிய வசதிகள், ஊதிய உயர்வுகள் இவை தரப் படவேண்டும்; மூன்று, அரசியல் கருத்துக்கள் கொண்டவர்கள், அவர்கள் வழிக்கு இந்தத் துறையைத் திருப்புகின்ற முயற்சியில் ஈடுபடாமல் இருக்கவேண்டும். இது ஏதோ ஜூலை மாதத்திலே புரோகிராம் போட்டு செப்டம்பர் மாதத்திலே முடியக்கூடிய காரியம் அல்ல. மெள்ள மெள்ள முடிக்கவேண்டிய காரியம் இது நான் சொன்னேன், சமுதாயத்தினுடைய எண்ணங்கள் துறை களிலே பிரதிபலிக்கும் என்று. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் “நெடுங்காலம் போலீஸ் துறை, உடைமையாளர்கள் பக்கத்தில்தான் இருக்கிறது; முதலாளிகள்— தொழிலாளர்கள் தகராறுகள் வந்தால் முதலாளிகள் பக்கத்திலேதான் போலீஸார்கள் இருக்கிறார்கள்; இதற்கு 1008 எடுத்துக்காட்டுக்கள் சொல்லமுடியும்” என்று சொன்னார்கள். ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்றால் நம்முடைய சமூக மனப் பான்மை, அரசியல் மனப்பான்மை ஆகியவற்றிற்கு ஏற்ப அரசாட் சியினுடைய இயந்திரங்கள் இருக்கின்றன. இந்த நிலைமை மெள்ள மெள்ளத் தான் மாறவேண்டும். இங்கிலாந்து நாட்டுக்குப் போய் விட்டு வருகின்றவர்கள், எந்த இடத்திலேயாவது போலீஸ் துறை யினரிடம் சென்று, இந்த இடத்திற்கு எவ்வழி செல்ல வேண்டு மென்று கேட்டால் அவர்கள் உடனே விளக்கமாகச் சொல்கிறார்கள் என்று போய்வந்தவர்களைக் கேட்டால் சொல்வார்கள். அப்படி யிருப்பதாகப் பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்துக்கொண்டு இங்கே மவுண்ட்ரோடிலே இருக்கிற டிராஃபிக் போலீஸ்காரரை ஒருவர், ‘சிந்திரிப்பேட்டைக்கு எப்படி வழி? என்று கேட்டால் அவருக்கு எரிச்சல்தான் உண்டாகுமே தவிர, பதில் கிடைக்காது. இலண்டன் நகர போலீஸாருக்கு இங்கிலாந்து அரசியலின் சூழ் நிலையையொட்டிய பிரதிபலிப்பு இருக்கிறது. நமக்கு அப்படி அல்ல. நாம் ரயிலிலே போய்க்கொண்டிருக்கும்பொழுது விருப்ப மிருந்தால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறோம். இல்லா விட்டால் இல்லை. ஒருவர், “உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?” என்று கேட்டால், “கட்டாயம் சொல்லவேண்டுமா?” என்று கேட் பவர்களும் உண்டு இத்தனை பிள்ளைகள் என்று சொல்பவர்களும் உண்டு. உங்களுக்கு வயது என்ன என்று கேட்டால், ஏன் கேட் கிறீர்கள்? என்று கேட்பவர்களும் உண்டு. அது ஆச்சப்பா அறுபத்தேழு என்று பதிலளிப்பவர்களும் உண்டு. இவையெல்லாம் போலீஸ் துறையிலும் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அவையெல்லாம் ஆப்பிரிக்காவிலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ வந்துவிட்ட தனிப்பண்டங்கள் அல்ல. இங்கே இருக்கிற ரத்தத்தின் ரத்தம்; சதையின் சதை; அவர்கள் நம்முடைய உடன்பிறப்பாளர் களாகத்தான் இருக்கிறார்கள். ரத்தத்திலே சில கெடுதல்கள் வருவதில்லையா? அதைப்போல்தான் இங்கும் வருகிறது. சதையிலே வீக்கம் ஏற்படுவதில்லையா; அதைப்போல்தான் வருகிறது?. ஆகவே ரத்தம் சுத்தப்படுத்தப்படவேண்டும்; சமூகம் சுத்தப்படவேண்டும் அரசியல் பொருளாதாரக் கருத்துக்கள் உடைமையாளர்கள் பக்கத் திலே இருப்பதை மாற்றி, உழைப்பாளர்கள் பக்கத்திலே கொண்டு வரப்படவேண்டும். ஏதோ ஒரு நாடகத்தில் நான் எழுதியிருப்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூலை 5

பதைப்போல் ராத்திரி எழுதி விடியற்காலையில் கொண்டுவரக் கூடியது அல்ல. இது மெள்ள மெள்ள, படிப்படியாக பல கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கிறது. அந்த நிலையை நாம் நம்முடைய வாழ்நாளுக்குள் அடைவோமா என்பது என்னைப் பொறுத்தவரையில் ஐயப்பாடாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்தப் பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டால், அதுவே திருப்திகரமாக இருக்கும். போலீஸ் துறையில் நாம் அனைவரும் எந்தக் கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும், அக்கறை கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு அவர்களுக்கு வீட்டு வசதிகள். கொடுக்கவேண்டிய பல வாய்ப்புகள் இவற்றைப்பற்றியெல்லாம் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன், என்றால் அதை வரவேற்கத்தான் முடிந்ததே தவிர நான் எண்ணிய அளவுக்குக்கூட என்னால் அவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம் நிதிநிலைமை தான். ஆகவே, அவர்களுக்கு வசதிகளைத் தேடிக்கொடுக்க வேண்டும் என்பதில் எல்லாக் கட்சியினரும் பல தரப்பட்ட கருத்துக்களைச் சொன்னதற்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு வெட்டு இல்லாமல் இந்த மானியத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது மானியக் கோரிக்கையின்மீதும், வெட்டுத் தீர்மானங்களின்மீதும் வாக்கெடுப்பு நடைபெறும். இந்த மானியக் கோரிக்கையின்மீது நான்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்துகின்றவர்கள் வற்புறுத்தலாம்.

THIRU T. M. NALLASWAMY : Sir, I press my cut motion.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** திரு. தோ. மு. நல்லசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் வற்புறுத்தப்படுகிறது; ஏனைய வெட்டுத் தீர்மானங்கள் இப்பேரவையின் அனுமதியைப் பெற்று திரும்பப் பெறப்படுகின்றன.

திரு. தோ. மு. நல்லசாமியின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** இப்பொழுது பேரவைமுன் உள்ள கேள்வி:—

"கோரிக்கை எண் XII போலீஸ் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,73,08,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

.1-46 **மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்** —இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. நாளை காலை மீண்டும் 9 மணிக்கு இப்பேரவை கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.





1967 ஜூலை 5]

## 5. பேரவையின் முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

224. Notification issued with G.O. Ms. No. 1130, Rural Development and Local Administration, dated the 16th June 1967, making an amendment to the Rural Development and Local Administration Department Notification II-1No. 1279 of 1966, dated the 28th March 1966, published in Part II—Section 1 of the Fort St. George Gazette Extraordinary No. 57, dated the 28th March 1966, regarding resignation of non-official Member and appointment of new Member (Laid on the Table of the House under section 29(3) of the Madras Khadi and Village Industries Board Act, 1959 (Madras Act 18 of 1959).

### B. Reports, Notifications and other papers.

*64 A Review of the Nationalized Transport in the Madras State 1966-67 (English and Tamil).

*65 A Review of the Road Transport in Madras State 1966-67 (Engilsh and Tamil).

## இணைப்பு.

### கோரிக்கை எண் XII போலீஸ்—முதலமைச்சருடைய உரை

[30-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தீயணைப்புப் படை, ஊர்க்காவல் படை ஆகியவற்றிற்கு ஆகும் செலவு உட்பட, போலீஸ் நிறுவனத்தின் இயல்பான செலவுக்கு இக் கோரிக்கையில் முக்கியமாக வகை செய்யப்பட்டுள்ளது.

**படைக்கலம் தாங்கிய சிறப்புப் போலீஸ்.**—படைக்கலம் தாங்கிய நமது போலீஸ் படையின் இரு பிரிவுகள் நாகாலாந்திலும், நேபாளிலும் இந்திய அரசுப் பணியில் ஈடுபட்டுள்ளன. மலையாள சிறப்புப் போலீஸ் 1-வது படையின் ஒரு பிரிவு புதுச்சேரி மாநிலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**ஊர்க்காவல் படை.**—ஊர்க்காவல் படையில் 1966-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதியன்று 11,803 பேர் இருந்தனர். அப் படையினரின் எண்ணிக்கையைப் பெருக்குவதில் மையச் செல்லும் ஒரு பாங்கினைப் பின்பற்றுவதென அரசு முடிவு செய்துள்ளது. இப் படையின் தரமே முக்கிய கோட்பாடாகக் கொள்ளப்படுமேயன்றி, அதன் எண்ணிக்கை முக்கியமல்ல. எனவே, ஊர்க்காவல் படையின் எண்ணிக்கையை இப்போதைய நிலையில் உயர்த்த வேண்டியது இல்லையென இம்மாநில அரசு கருதுவதாக இந்திய அரசுக்குத் தெரிவிக்கவும் இம்மாநில அரசு நினைக்கிறது.

பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் ஊர்க்காவல் படையினருக்கு பணிப்பயிற்சி அளிப்பது முடிவடைந்துள்ளது. ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 51 அதிகாரிகள் நாகபுரியில் உள்ள நெருக்கடி கால துயர் தணிப்புப் பயிற்சி மத்திய நிறுவனத்தில் இதுவரை மேல் பயிற்சி பெற்றுள்ளனர்.

**ஆள் சேர்ப்பும் பயிற்சியும்.**—போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் Assistant Superintendents of Police மூவர் மாவட்டங்களில் நடைமுறைப் பயிற்சி பெற்றபின்னர், உட்கோட்டங்களுக்கு அனுப்பப்பெற்றனர். போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் இருவர், ஆபுவிலுள்ள தேசீயப் போலீஸ் கழகத்தில் பயிற்சி பெற்ற பின்னர், பயிற்சிக்காக வேலூர் போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தனர். இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் இருவர் பயிற்சி பெறுவதற்காக ஆபுவிலுள்ள தேசீயப் போலீஸ் கழகத்தில் சேர்ந்துள்ளனர்.

நேரே வேலைக்கு எடுக்கப்பட்ட போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் இருவர், மாவட்டங்களில் நடைமுறைப் பயிற்சி பெற்ற பின்னர் உட்கோட்டங்களுக்கு அனுப்பப் பெற்றனர். நேரே வேலைக்கு எடுக்கப்பட்ட போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் மூவர் வேலூரில் போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முடித்த பின்னர், நடைமுறைப் பயிற்சிக்காக மாவட்டத்திற்கு அனுப்பப் பெற்றனர்.

நேரே வேலைக்கு எடுக்கப்பட்ட போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் நால்வரும், அவ்வாறு வேலைக்கு எடுக்கப்பட்ட உதவித் தளவாய் ஒருவரும் பயிற்சி பெற்று வருகின்றனர்.



உதவித் தளவாய் இருவர் மாவட்டங்களில் நடைமுறைப் பயிற்சி பெற்ற பின்னர், படைக்கலம் தாங்கிய போலீஸ் படைகளுக்குத் தளவாயாக அனுப்பப்பட்டனர்.

1966-ம் ஆண்டில் 200 சப்-இன்ஸ்பெக்டர்களை வேலைக்கு எடுக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இவர்களில் 140 பேர் கொண்ட முதல் தொகுதியினர் முதலிலும், எஞ்சிய 60 பேர் கொண்ட இரண்டாவது தொகுதியினர் பின்னரும் நியமிக்கப்படுவர். முதல் தொகுதியினராகிய 140 சப்-இன்ஸ்பெக்டர்கள் 1966 நவம்பரில் வேலைக்கு எடுக்கப்பட்டனர். வேலூர் போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் 1966 நவம்பர் 23-ம் தேதி முதல் இவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

இரண்டாவது தொகுதியினராகிய 60 சப்-இன்ஸ்பெக்டர்களை வேலைக்கு எடுக்கும் பணி நிறைவுற்று, 1967 மார்ச் 29-ம் தேதி முதல் வேலூர் போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற அனுப்பப்பட்டனர்.

முப்பத்தொன்று ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களை வேலைக்கு எடுப்பதற்கும் ஆவடி சிறப்புப் படைக்கலன் தாங்கிய போலீஸ் பிரிவில் (Special Armed Police) அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அவ்வண்ணமே 31 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் 1966 ஆகஸ்டில் வேலைக்கு எடுக்கப்பட்டு, ஆவடியிலுள்ள மேற்படி போலீஸ் பிரிவில் 1966 செப்டம்பர் 1-ம் தேதி முதல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சப்-இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 60 தலைமைக் கான்ஸ்டபிள்கள், வேலூர் போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் தங்கள் பயிற்சியை முடித்துள்ளனர். கல்கத்தாவிலும், ஹைதராபாத்திலும் உள்ள துப்பு துலக்கும் மத்தியப் பயிற்சிப் பள்ளியில் விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்தித் துப்பு துலக்குவதில் 14 வாரம் பயிற்சி பெறுவதற்கு மொத்தம் 12 சப்-இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டு அனுப்பப் பெற்றனர்.

குற்றத் துப்பறியும் துறையிலிருந்து 6 அதிகாரிகள் சென்னை மருத்துவக் கல்லூரியில் குற்றவியலிலும், குற்றவியல் மருத்துவத்திலும் டிப்ளோமா படிப்பிற்குரிய ஏழாவது பயிற்சித் தொகுதியினராக அனுப்பப்பட்டுள்ளனர்.

தகுதியுள்ளவர்கள் போதிய எண்ணிக்கையில் போலீஸ் படையில் சேர முன்வராததால், தகுதியுள்ள சிலருக்குக் குறிப்பிட்ட உடல் தகுதியினின்றும் விலக்களித்து போலீஸ் கான்ஸ்டபிள் பதவியிலுள்ள சில காலியிடங்கள் நிரப்பப்பட்டன.

1966 அக்டோபர் 1-ம் தேதி வரையில் வேலைக்கு எடுக்கப்பட்ட 2,054 கான்ஸ்டபிள்களில் 428 பேர் அரிசனங்கள். இது மொத்தத்தில் 21 சத வீதம் ஆகிறது.

**போலீஸ் படையினரின் இருக்கை வசதி.**—போலீஸ் படையினரின் திறனையும், ஒழுங்குணர்வையுணம் வளர்க்கும் வகையில் அப் படையினருக்கு அரசாங்க உறைவிடங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று 1956-ல் தொடங்கப்பட்டது. போலீஸ் படையினரில் குறைந்தது 80 சத விகிதத்தினருக்காவது அரசாங்க உறைவிடங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். எல்லா வகைகளையும் சேர்ந்த போலீஸ் படையினரில் 80 சத விகிதத்தினருக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தருவது என்ற குறிக்கோள் அளவு எய்தப்படாததால் இத் திட்டம் நான்காவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்படுகின்றது.

**போலீஸ் அறநிதி.**—தமிழக போலீஸ் அறநிதி 1967 ஜூலையில் ஏற்படுத்தப்பட்டது. அதுமுதல் இந்த நிதி நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இம் மாநில அரசு 1966-ல் இந்த நிதிக்கு ரூ. 50,000 மானியம் வழங்கியது. இதன் உறுப்பினர்களுக்குப் பல்வேறு வகை நலனுக்காகவும், வசதிக்காகவும், இடர் உதவி குறித்தும் இந்த ஆண்டில் இந் நிதியிலிருந்து ரூ. 1,32,357.81 செலவிடப்பட்டுள்ளது.

**போலீஸ் நல வசதித் திட்டம்.**—போலீஸ் குடும்பத்தினரின் வருமானத்தைப் பெருக்கும்பொருட்டு பாய் நெசவு, தையல் வேலை, பொம்மை செய்தல், தலைப்பாகை தயாரித்தல் போன்ற முந்திய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட பல்வேறு நல வசதித் திட்டங்கள் தொடர்ந்து செவ்வனே நடந்தேறி வருகின்றன.

**தீயணைப்புப் படை.**— இம்மாநிலத்தில் இப்போது 55 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றில் 12 சென்னை மாநகரிலும் 43 வெளியூர் நகரங்களிலும் உள்ளன. 1967–68-ல் திண்டிவனத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படும். சென்னை நகரில் மேலும் மூன்று நிலையங்களை ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு வேண்டிய இட வசதி கிடைத்தவுடன் இவை ஏற்படுத்தப்படும். நகரங்களில் ஏற்பட்ட தொழில் தீ விபத்து, வீட்டுத் தீ விபத்து, ஏனைய தீ விபத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தீயணைப்புப் படை நிலையங்கள் வருங்காலத்தில் எந்தெந்த நகரங்களில் நிறுவப்பட வேண்டும் என்பதற்கு இந்த அரசு முறைவைப்புப் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்தப் பட்டியலின்படி இன்னும் 29 நகரங்களில் தீயணைப்பு நிலையங்களை நிறுவ வேண்டும்.

1966-ம் ஆண்டில் 3,787 தடவைகள் தீயணைப்புப் படை அழைக்கப்பட்டது. தீ விபத்து ஏற்பட்ட 3,293 நிகழ்வுகளில் 39 தீ விபத்துகள் கடுமையானவை. இவற்றில் ஒவ்வொன்றிலும் உயிரிழப்பும் 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட உடைமை இழப்பும் ஏற்பட்டன. தீ விபத்து அழிவிலிருந்து தோராயமாக ரூ. 247.3 லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் காக்கப்பட்டன. குடி நீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் மக்களுக்கு நீர் வழங்கித் துணை செய்வதற்காக தீயணைப்புப் படையின் வண்டிகள் அனுப்பப்



பட்டன. இவ்வாண்டில் 434 அபாய அழைப்புகளுக்கு இணங்கச் சென்று பணியாற்றியுள்ளனர். கிராமப் பகுதியில் வாழும் மக்களுக்கு தீ விபத்தைத் தடுப்பதில் உள்ள பொறுப்பினை உணர்த்தும் பொருட்டும், தீ விபத்து ஏற்பட்ட தொடக்க நிலையில் அந்த இடத்திற்குத் தீயணைப்புப் படை வரும்வரை தீயை அணைக்கும் வகையை அவர்களுக்கு விளக்கவும், கிராமங்களில் தீ விபத்துகளால் ஏற்படும் தீமைகளைக் குறைக்கவும், கிராம தீ விபத்து கண்காணிப்பு—தீயணைப்புப்படை ஒன்று உள்ளூர் போலீஸ் அதிகாரிகளின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. 148 தடவைகளில் தீயணைப்பதில், தீயணைப்புப் படையினருக்கு இந்தப் படை உதவியாயிருந்தது.

**குற்றம்.**—சிறப்புச் சட்டங்களின் கீழும் உள்ளூர்ச் சட்டங்களின் கீழும் இந்திய தண்டனைச் சட்டத் தொகுப்பில் தொல்லை உண்டாக்குவது பற்றிய பிரிவுகளின் கீழும் நிகழ்ந்த சிறு குற்றங்கள் நீங்கலாக 1966-ம் ஆண்டில் நீதிமன்ற வரம்பிற்குட்பட்ட வழக்குகள் 56,836 ஆகும். இந்த வழக்குகள் 1965-ம் ஆண்டில் 49,151-ஆக மட்டுமே இருந்தன. வழக்குகளைத் தாமாகப் பதிவு செய்தமையும், சீர்கேடான பருவ நிலைமையும், விலைவாசி ஏற்றமும் வழக்குகள் அதிகரித்ததற்குக் காரணங்களாகும். 1966-ம் ஆண்டில் துப்புதுலக்கப்பட்ட நீதி முறைக் குற்றங்கள் 61.1 சத விகிதமாகும். இந்த எண்ணிக்கை 1965-ல் 56.1 சத விகிதமாக மட்டுமே இருந்தது. குற்றங்கள் துப்புதுலக்கப்படுவதில் உள்ள இந்த முன்னேற்றம் கடந்த 11 ஆண்டுகளாகவே நீடித்து வருகிறது.

**கலகங்களும் பூசல்களும்.**—இந்த ஆண்டில் பற்பல சமயங்களில் பல்வேறு காரணங்களுக்காகத் தொழிலாளர்கள் பன்முறை வேலை நிறுத்தம் செய்தனர். இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் நிலைமை கட்டுக்கு மீறிவிடாமல் பார்த்துக் கொண்டு, தொழில் துறை சமரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தொழில் துறையில் போலீஸ் அமைதியை நிலைநாட்டியது.

**பிச்சைக்காரர் தொல்லை.**—பிச்சை எடுப்பதைத் தடை செய்யும் 1945-ம் ஆண்டுச் சட்டம் இம் மாநிலம் எங்கணும் 1966 மே 1-ம் தேதி முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போதுள்ள பிச்சைக்காரர் விடுதிகள் செவ்வனே செயலாற்றி வந்துள்ளன.

**சிறுவர் மன்றம்.**—இம் மாநிலத்தில் சிறுவர் மன்றங்கள் நல்ல வகையில் செயலாற்றி வருகின்றன. நான்காவது திட்டக் காலத்தில் மாவட்டங்களிலே சிறுவர் மன்றங்களை மேற்கொண்டும் ஏற்படுத்துவதும் இப்போது வாடகைக் கட்டிடங்களிலுள்ள சிறுவர் மன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதும் ஆலோசனையிலுள்ளன. நகர்ப்புற மதுரை மாவட்டத்தில் 1966 ஆகஸ்டு திங்களில் சிறுவர் மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

**மதுவிலக்கு.**—இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் செவ்வனே செயல் நடத்தப்பட்டது. மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையாகவும், தொடர்ந்து உறுதியுடனும்

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் காரணமாக மது விலக்குச் சட்டத்தை மீறுவோர்கள் 1,60,029 பேர் எனக் கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வகையில் குற்றம் செய்வோர் 15.5 சத விகிதம் அதிகரித்துள்ளனர்.

***நாய்ப்படை.***—துப்பறியும் நாய்ப்படையில் தற்போது சென்னையில் 9 நாய்களும், மதுரையில் 5 நாய்களும் உள்ளன. எல்லா வகையான குற்றங்களையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் போலீஸ் துப்பறியும் நாய்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இம் மாநிலத்தின் மேற்குப் பகுதியின் தேவையைக் கவனிப்பதற்காக 1966-ம் ஆண்டில் கோயம்புத்தூரில் துப்பறியும் நாய்ப் படை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

***போக்குவரத்துப் பிரிவு.***—போக்குவரத்துத் திட்ட (போலீஸ்) பிரிவு நெடுஞ்சாலை—கிராமப் பணி போக்குவரத்துத் திட்டப் (பொறியியல்) பிரிவின் உடனுழைப்புடன் போக்குவரத்து விவரங்களையும் விபத்து விவரங்களையும் திரட்டியது. எந்தெந்த இடங்களில் விபத்து ஏற்படுகின்றது என்பதை நிச்சயித்தறிந்து, விபத்தைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகளைக் கூறுவதற்காகவே இவ்வாறு புள்ளிவிவரங்களை அது திரட்டியது. போக்குவரத்து அடையாளங்களை நிறுவுவதற்கும், சாலைகளில் கோடு போடுவதற்குரிய வண்ணங்களை வாங்குவதற்கும் ரூ. 1,65,000 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் நகராட்சிச் சாலைகளிலுள்ள போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு 25 லட்ச ரூபாயும், சென்னை நகரில் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு 50 லட்ச ரூபாயும் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

***மாவட்டக் குற்றப்புள்ளி விவரக் கழகம்.***—இக் கழகம் மாவட்டத்தில் செவ்வனே செயலாற்றி வந்தது. குற்றம், குற்றவாளிகள் பற்றிய விவரங்களைத் திரட்டுவதும், அலசிப் பார்ப்பதும், குற்றஞ் செய்வதையே தொழிலாகக் கொண்டவரிடம் துப்புத் துலக்குபவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறுவதும் இக் கழகத்தின் பணிகளாகும். விரல் ரேகை கண்டுபிடிப்பதிலும், காலடிச் சுவடு கண்டுபிடிப்பதிலும் பயிற்சி பெற்ற தலைமைக் கான்ஸ்டபிள்களும் விஞ்ஞான உதவியாளர்களும் வழக்குகளில் துப்புத்துலக்குவதில் உதவியாயிருந்தனர். இந்த ஆண்டில் 211 நிகழ்வுகளில் குற்றவாளிகள் விட்டுச் சென்ற விரல்ரேகை அடையாளம், காலடிச் சுவடு போன்ற அடையாளங்களிலிருந்து குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

குற்றஞ் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களைத் திறமையுடன் கண்டுபிடிப்பதற்காக, மாவட்டக் குற்ற இயல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஓர் இன்ஸ்பெக்டரும், ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், ஒரு தலைமைக் கான்ஸ்டபிளும், போலீஸ் கான்ஸ்டபிள்களும் இருக்கின்றனர்.



***தமிழக போலீஸ் வானொலி அமைப்பு.***—தமிழக போலீஸ் வானொலி அமைப்பில் 16 நிலையான நிலையங்களும், 19 சுற்றிவரும் நிலையங்களும் உள்ளன. இவை ஆண்டு முழுவதும் செயலாற்றி வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டம் நீங்கலாக இம் மாநிலத்திலுள்ள மற்றெல்லா மாவட்டத் தலைமை நிலையங்களும் சென்னையுடன் கம்பியில்லாத் தந்தி, நிலை வானொலி நிலையங்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் தொடர்பு கொள்ள சென்னையிலே நான்கு கட்டுப்பாட்டு நிலையங்கள் உள்ளன.

போலீஸ் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் மூன்று சரகங்களில் போலீஸ் துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்களுக்கும், சென்னையிலுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கும் சுற்றி வரும் வானொலி நிலையங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் தத்தம் அதிகார வரம்பிற்குட்பட்ட உட்பகுதிகளில் முகாம் செய்திருக்கும்போது, தத்தம் தலைமை நிலையங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.

சென்னையில் கட்டுப்பாட்டு நிலையம் ஒன்று உட்பட நிலையான ஏழு நிலையங்கள் இருக்கின்றன. பெரு வெள்ளம், ஏனைய பேரிடர்க் காலம் ஆகியவற்றில் திறமையுடனும் விரைவாகவும் செய்தித் தொடர்பு கொள்ளுவதற்கு இவை பயன்படும். கீழ்க் கண்ட இடங்களில் வெள்ள நிலையங்கள் செயலாற்றி வருகின்றன:—

(1) மேட்டூர்.

(2) கீழணை.

(3) கல்லணை.

(4) பவானிசாகர்.

(5) மேலணை.

(6) தேக்கடி.

உட்கோட்டத் தலைமையிட நிலையங்களை போலீஸ் கம்பியில்லாத் தந்தி நிலையங்களுடன் இணைப்பதற்காக 42 வானொலி நிலையங்களை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதுவன்றி 32 உட்கோட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் மாநிலத்திலுள்ள வானொலி நிலையங்கள் அனைத்தும் குற்றம் சம்பந்தப்பட்ட தகவல்களையும், சட்டம்-ஒழுங்கு, பாதுகாப்பு பற்றிய செய்திகளையும் பரப்புவதற்காகவே முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன. 1966-ம் ஆண்டில் இரண்டு நிகழ்வுகளில் சேது சமுத்திரத் திட்டம் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டுவதில் இத்தகைய வானொலி நிலையங்கள் மூன்று பயன்படுத்தப்பட்டன. இவை செய்த பணியினைச் சேதுசமுத்திரத் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

இந்த ஆண்டில் படையினர் வான் இலக்கு சுடும் பயிற்சியில் மூன்று வானொலி நிலையங்கள் பயன்படுத்தப்பட்டன.

[1967 ஜூலை 5

சென்னை நகரில் இரண்டு முறை சென்னை நகர் போலீஸ் V. H. F. நிலையங்கள் கூட்டு சிவில் பாதுகாப்பு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டன. இப்பணிகள் ஒருபுறமிருக்க, நெருக்கடிக் காலங்களிலும், திருவிழாக்களிலும், போராட்டக் காலத்திலும், தகவுடையோர் இம் மாநிலத்திற்கு வருகை தரும்போதும் வானொலி நிலையங்கள் பயன்படுத்தப்பட்டன.

கம்பியில்லாத் தந்தி நிலையங்களில் பயன்படுத்தப்படுகிற அதிக ஆற்றல் வாய்ந்த ரிசீவர்கள் போன்ற வானொலிக் கருவிகள் சென்னையிலுள்ள போலீஸ் வானொலிப் பிரிவில் உருவாக்கப்படுகின்றன. படையினரின் பழைய கருவிகளில் புதுப்பிக்க வேண்டிய பகுதிகளை உள்நாட்டிலேயே பெற்று, இக் கருவிகள் இணைத்துச் சேர்க்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன. இதனால் கம்பியில்லாத் தந்தி நிலையங்களை அமைப்பதற்கான தொடக்கச் செலவு கணிசமாகக் குறைந்து வருகிறது.

கள்ளக்கடத்தல்—கண்காணிப்புப் பிரிவு.—உணவுத் தானிய கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துவதற்காகவும், உணவு நிலைமையை உள்ளபடியே அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்காகவும் கண்காணிப்புப் பிரிவு, 1964 அக்டோபரில் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும், இன்றியமையாப் பொருள்களின் விலைகளை நிலைப்படுத்துவதற்கு அரசு மேற்கொண்ட முறைப்படுத்து நடவடிக்கைகளையும் கண்டிப்புடன் செயல்படுத்துவதும், இன்றியமையாப் பொருள்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதற்கு உணவு வழங்கு பணியாளர்களுக்கு உதவி செய்வதும் இப் பிரிவின் முக்கிய பணிகளாகும். கட்டுப்பாட்டு ஆணைகள் மீறப்படுவது பற்றிய தகவல்களை இப் பிரிவு திரட்டுகிறது. குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக வணிக நடவடிக்கைகளை இப்பிரிவு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. கறுப்புச் சந்தைக்காரர்களையும், கட்டுப்பாட்டு ஆணைகளை மீறுகிற மற்றவர்களையும் கையுங்களவுமாகப் பிடிப்பதற்கு இப்பிரிவு ஆவன செய்கிறது. இன்றியமையாப் பொருள்களை பதுக்கி வைத்திருப்பதைக் கண்டுபிடிப்பதற்காகவும், அனுமதியின்றி எடுத்துச் செல்வதைக் கண்டுபிடிப்பதற்காகவும் திடீர்ச் சோதனைகளை நடத்துகிறது.

1966-ம் ஆண்டில் இப் பிரிவு 2,825 வழக்குகளைக் கண்டுபிடித்தது. இவற்றில் 45 கள்ளச் சந்தை பற்றியவை, 317 இன்றியமையாப் பொருள்கள் சம்பந்தப்பட்டவை. எஞ்சியுள்ள 2,463 குற்றங்கள் கள்ளக் கடத்தல் குற்றங்களாகும். உணவுப் பொருள்களைக் கொள் முதல் செய்வதில் உணவு வழங்கல் அதிகாரிகளுக்கு இப்பிரிவு உதவி செய்கிறது.

தகவுடையோர் வருகை.—கீழ்க்கண்ட வெளிநாட்டுப் பெருமக்கள் இம் மாநிலத்திற்கு வருகை தந்தனர். நேபாள அமைச்சரவைத் தலைவராகிய மேதகு திரு. சூர்ய பகதூர் தபா, யூகோஸ்லா



1967 ஜூலை 5]

விய அமைச்சராகிய மேதகு திரு. கிரிலிகோவ், கிரீஸ் நாட்டு ராணி அன்னை இவர்களைத் தவிர இந்தியப் பிரதம மந்திரியும், பிற மாநிலங்களின் கவர்னர்களும், மத்திய அமைச்சர்களும், ஏனைய வெளிநாட்டு அமைச்சர்களும் இம் மாநிலத்திற்கு வருகை தந்தனர்.

பொது.—போலீஸ் படைகளின் ஒழுங்கும் கட்டுப்பாடும் என்றும் போலவே மிக மேம்பட்ட நிலையில் இருந்து வந்துள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் இவர்களது பணி பல வகைப்பட்டதாகும். உணவுக் கட்டுப்பாடு, உணவுப் பொருள் போக்குவரத்து ஆணைகள் பலவற்றைச் செயல்படுத்துவதில் இவர்கள் திறம்படச் செயலாற்ற வேண்டிவந்தது. போலீஸ் படையினரின் ஒழுங்கும் மன உறுதியும் எப்போதும் போல் உயர்ந்த நிலையில் இருந்து வந்துள்ளது. பொது மக்களுக்கும் போலீசாருக்கும் உள்ள தொடர்பு மேன்மேலும் சிறப்பான முன்னேற்றமடைந்துள்ளது.

இந்த நிதியாண்டின் தொடக்கத்தில் போலீஸ் துறையில் அரசிதழ் பதிவுள்ள சில பதவிகளும், அரசிதழ் பதிவற்ற சில பதவிகளும் சிக்கனத்தை முன்னிட்டு நீக்கப்பட நேர்ந்ததை இந்த உரை முடியுமுன் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1967-68-ம் ஆண்டுக்குரிய XII போலீஸ் மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

65017

D
V211,31 N67
N67.4.1